# இலக்கண வழிகாட்டி

அ. திருமலைமுத்துசுவாமி

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத் தெரு, : மதுரை-1.

# இலக்கண வழிகாட்டி

[அலங்காரம் - அகப்பொருள் - புறப்பொருள்]

(சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்பெறும் தமிழ்த் தேர்வுகளில் கொடுக்கப்பட்ட கேள்விகளும் அதற்குரிய விடைகளும்)

அ. திருமலைமுத்துசுவாமி

**மீனாட்சி புத்தக நிலையம்**

60, மேலக் கோபுரத் தெரு, மதுரை-1.

*முதற் பதிப்பு, 1958.*
*இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி, 1966.*
மீனாட்சி 64.
**உரிமை—பதிவு.**

விலை ரூ. 3-25

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
**60, West Tower Street, * Madurai-1.**

ஈஸ்வரி பிரிண்டர்ஸ்
40 சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14

# நூலைப்பற்றி...

அறிவின் திறவுகோல் மொழி. மொழியினைக் கொண்டே நாம் எண்ணவும், எண்ணியவற்றை உரைக்கவும் செய்கின்றோம். அந்த மொழியின் இலக்கணத்தைத் தெளிவாக்கிக் கொள்ளாவிடில் நம்முடைய எண்ணமும் பேச்சும் தெளிவுறா. இலக்கணம் என்பது சொல்லாற் குறிக்கப்படும் பண்புகளின் விளக்கம் ஆகும்.

ஆதியந்தமில்லா செந்தமிழ், உலக மொழிகளிலெல்லாம் மூத்தமொழி என்பது மூதறிஞர் முடிபு. இலக்கிய ஏற்றத்தில் இமயத்தையும் இலக்கண விரிவில் ஏழ்கடலையும் தமிழுக்கு உவமை கூறின் மிகப் பொருந்தும். இத்தகைய தாய்மொழியின் சிறப்பினை ஒருவன் நன்கு உணர வேண்டுமெனில் அவன் இலக்கண நூல்களையும் கற்றுத் தெளிதல் வேண்டும்.

ஈடில்லாத் தமிழின் இலக்கண நூல்களில் தண்டியலங்காரம், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியன, சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்பெறும் பி.ஏ., எம்.ஏ., வித்துவான் முதனிலை ஆகிய தேர்வுகளுக்குப் பாட நூல்களாக வைக்கப்பட்டுள்ளன. இந்நூல்களைக் கற்பதற்கு உறுதுணை செய்யும் வகையில் **'இலக்கண வழிகாட்டி'** என்னும் இந்நூல் அமைந்திருக்கிறது. கடந்த பத்தாண்டுகளில், இம்மூன்று நூல்களிலிருந்தும் பல்கலைக்கழகத் தேர்வுகளில் கேட்கப்பட்ட வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் இந்நூலில் அடங்கியுள்ளன. நூலின் பொருளமைப்புக்கேற்ப கேள்விகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அவற்றிற்குரிய விடைகளுடன் கொடுக்கப்பட்டிருப்பது சிறப்புடையது. கேட்கப்பட்ட ஆண்டு, தேர்வின் பெயர் முதலியன அடைப்புக் குறிகளில் தரப்பட்டுள்ளன.

இந்நூலை நல்ல முறையில் யாத்து நமக்குத் தந்துள்ள பேராசிரியர் அ. திருமலைமுத்துசுவாமி அவர்கள் தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத் தேர்ந்த அறிஞர் ஆவார்கள். இலக்கணங்களின் பரந்த அறிவின் திறனை நன்கு உய்த்து உணர்ந்துள்ள அவர்கள் மாணவர்களின் தேவையை மிகமிக நன்றாகஅறிந்தவர்கள். எனவே, இலக்கணம் என்றால் மலைக்கும் மாணவர்களின் அச்சம் போக்கி, அதில் அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்தும் வகையில் வினா–விடை வடிவில் இந்நூலை அமைத்திருக்கிறார்கள். முக்கியச் சூத்திரங்கள் நூலின் இறுதியில் இணைக்கப்பட்டிருப்பது பயிலுவோர்க்குப் பெரிதும் பயன்படும். முதற் பதிப்பு வெளியான சில ஆண்டுகளுக்குள்ளாகவே இரண்டாம் பதிப்பு வெளிவருவதே இந்நூலின் சிறந்த பயனுக்குச் சான்று. தனிமுறையில் படித்துத் தேர்வு எழுதுவோர்க்குச் சிறப்பாகவும் கல்லூரி மாணவர்களனைவருக்கும் பொதுவாகவும் பெருந்துணை புரியும் இந்நூல் பேராதரவைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் ஐந்து பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. அப்பகுதிகள் வருமாறு :

1. தண்டியலங்காரம்—வினா விடை.
2. நம்பியகப்பொருள்—வினா விடை.
3. புறப்பொருள் வெண்பாமாலை—வினா விடை.
4. சில முக்கிய சூத்திரங்கள்.
5. பிற்சேர்க்கை—வினா விடை.

இரா. நடராசன்
துணையாசிரியர்,
தமிழ்க் கலைக்களஞ்சியம்

சென்னை,
22-11-65.

# 1. தண்டியலங்காரம்

**நூல் ஆசிரியர்**

1. தண்டியலங்காரம், அதன் ஆசிரியர்-இவைபற்றி நீவிர றிந்தன எழுதுக. (வி. *53*)

*தண்டியலங்காரம் ஐவகை இலக்கணங்களுள் அணி இலக்கணத்தைத் தனியே கூறுவதாகும். ஐவகை இலக் கணங்களுள்ளே எழுத்து, சொல் என்னும் இரண்டிற்கும் நன்னூலும், பொருளுக்கு நம்பியகப் பொருளும் வெண்பா மாலையும், யாப்பிற்கு யாப்பருங்கலக் காரிகையும் சிறப்பித் துக் கூறப்படுதல் போல அணியிலக்கணத்திற்கு இத் தண்டியலங்காரம் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இது மகாகவி தண்டியாசிரியர் எழுதிய 'காவிய தரிசனம்' என்னும் வடநூலின் மொழிபெயர்ப்பு ஆகும். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று இயலாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 125 சூத்திரங்களை உடையது. முத்தகம், குளகம் முதலிய கவி வகைகளும், கவிகளினுள்ளே நின்று அழகுபடுத்துவனவாகிய செறிவு, தெளிவு முதலிய குணவகைகளும் பொதுவியலிலும், தன்மை, உவமை, உருவகம் முதலிய பொருணி வகைகள் பொருளணியியலிலும், மடக்கு வகைகளும், சித்திரகவி வகைகளும், செய்யுளுக்கு ஆகாத வழுக்களும் சொல்லணி யியலிலும் கூறப்படுகின்றன.*

*இந்நூலாசிரியர் வரலாறு துணிவாகத் தெரிவதற் கில்லை. இவர் தண்டி என்னும் பெயருடையவர் என ஒரு சிலரும், "வடதிசையிலிந்து......தண்டி என்பவனே" என்ற சிறப்புப் பாயிரச் செய்யுளிலிருந்து, தண்டியலங்கார ஆசிரி*

யர் தண்டி என்றும், அவர் கம்பன் மகன் அம்பிகர்பதியின் மகன் என்றும் வேறு சிலரும் கூறுவர். தண்டி என்பது இவரது இயற் பெயரோ, அன்றி வட நாட்டுத் தண்டியாரின் நூலை மொழிபெயர்த்த காரணத்தால் ஏற்பட்ட புகழ்ப் பெயரோ எனத் துணிவதற்கில்லை. நூலின் வாயிலாக நூலாசிரியர் வடமொழி தென்மொழிகளில் வல்லுநர் என்பதை அறிய முடிகின்றது.

**செய்யுள் வகை**

2. செய்யுளைத் தண்டியார் பகுக்கும் வகை யாது? அதனை விளக்கி வரைக. (வி. 51)

முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என்று தண்டியார் செய்யுளை நான்கு வகையாகப் பகுத்துள்ளார்.

தனியே நின்று ஒரு பொருள் பயந்து முடிவது முத்தகச் செய்யுளாகும். பல பாட்டாய் ஒரு வினை கொண்டு முடிவது குளகச் செய்யுளாகும். ஒருவர் உரைத்தனவும் பல்லோர் பகர்ந்தனவுமாய், பொருள், இடம், காலம், தொழில், பாட்டு, அளவு, இவை பற்றித் தொகுக்கப்படுவது தொகைநிலைச் செய்யுள் எனப்படும். முற் செய்யுளோடு பிற் செய்யுள் பொருளினாலோ அன்றிச் சொல்லினாலோ தொடர்ந்து வருதல் தொடர்நிலைச் செய்யுள் ஆகும்.

**தொகைநிலைச் செய்யுள்**

3. தொகைநிலைச் செய்யுளாமாறு உணர்த்தி உதாரணமும் தருக. (வி. 54)

ஒருவரால் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும் பலரால் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும் தொகைநிலைச் செய்யுள் ஆகும். மேலும் அவை பொருளால் தொகுத்த பெயர் பெற்றனவும் இடத்தால் தொகுத்த

பெயர் பெற்றனவும் காலத்தால் தொகுத்த பெயர் பெற்றனவும் தொழிலால் தொகுத்த பெயர் பெற்றனவும் பாட்டால் தொகுத்த பெயர் பெற்றனவும் அளவால் தொகுத்த பெயர் பெற்றனவுமாம். உ - ம்:

ஒருவரால் உரைக்கப்பட்டது—திருக்குறள்.

பலரால் உரைக்கப்பட்டது—அகநானூறு.

பொருளால் தொகுக்கப்பட்டது—புறநானூறு.

இடத்தால் ... —களவழி நாற்பது.

காலத்தால் ... —கார்நாற்பது.

தொழிலால் ... —ஐந்திணை.

பாட்டால் ... —கலித்தொகை.

அளவால் ... —குறுந்தொகை.

**தொடர்நிலைச் செய்யுள்**

4. பொருட்டொடர் நிலை, சொற்றொடர் நிலைச் செய்யுள் எவை? பொருட்டொடர் நிலையின் பகுப்பைத் தருக. *(வி. 56)*

5. சொற்றொடர் நிலைச் செய்யுளாமாறும் உதாரணமும் தருக. *(வி. 51)*

6. பொருட்டொடர் நிலைச் செய்யுளைப் பகுத்துணர்த்தி வேற்றுமையை விளக்குக. (வி. 51)

7. பெருங்காப்பியம், சிறுகாப்பியம் இவை எவ்வாறு வரப் பெறும் என்பதை விளக்கி உதாரணம் தருக. *(வி. 53)*

8. பெருங்காப்பியத்தின் இலக்கணம் யாது? *(வி. 57)*

9. காப்பியமென்று கருதப்படுவது எது? (வி. 56)

பொருட்டொடர்நிலைச் செய்யுள் என்பது முற்செய்யுளோடு பிற்செய்யுள் பொருளினால் தொடர்ந்து வரப்பெறும் நூலாகும். இது காப்பியம், பெருங் காப்பியம் என இரண்டு வகைப்படும்.

**உ-ம் :** கம்பராமாயணம், சிந்தாமணி.

முற்செய்யுளோடு பிற்செய்யுள் சொல்லினால் தொடர்ந்து வரப்பெறுவது சொற்றொடர் நிலைச் செய்யுள் ஆகும்.

**உ-ம் :** அந்தாதியாகப் பாடப்பட்ட பிரபந்தங்கள்.

பொருட்டொடர் நிலைச் செய்யுள், காப்பியம், பெருங் காப்பியம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் பெருங் காப்பியமாவது :

வாழ்த்து, தெய்வ வணக்கம், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்னும் மூன்றனுள் ஒன்றை முதலில் பெற்று; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பயக்கும் நடை உடையதாய்; தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டு, மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம் முதலியவற்றின் வருணனைகளுடன், மணம் புரிதல், முடி கவித்தல், பொழில் விளையாட்டு, புனல் விளையாட்டு, மக்கட்பேறு, புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல் இன்னோரன்ன செய்கைச் சிறப்பினைப் புகழ்ந்து, தொடுக்கப்பட்டதாய்; மந்திரம் இருத்தலும் தூது விடுத்தலும் போர்மேற்செலவும் செருச் செய்கையும் வெற்றி பெறுதலும் நாடக வழக்கில் காணும் சந்திபோல ஒன்றையொன்று தொடர்ந்து வருவதாய்; சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலிய பாகுபாட்டுடன், கம்பராமாயணம் போன்று காதிற்கு இனிய ஒருதிறப் பாட்டிலேனும் கலம்பகம் போன்று பலதிறப் பாட்டிலேனும் கட்டுரையாலேனும்

அமைக்கப்பட்டு, மெய்ப்பாடும் சுவையும் தோன்ற வருவ தாகும். மேலே சொல்லப்பட்ட மலை, கடல் முதலிய வருணனைப் பகுதிகளில் சில குறைந்துவரினும் அது பெருங் காப்பியம் என்றே கூறப்படும். ஆனால் நாற்பொருளில் ஒன்றும் பலவும் குறைந்து வருவது காப்பியமாகும். உலா, பரணி மடல், பிள்ளைத் தமிழ் முதலியன இவ்வகையினைச் சாரும்.

10. 1. 'உரையும், பாடையும் விரவியும் வருமே.'

2. 'சந்தியிற்றொடர்ந்து சருக்கம் இலம்பகம்'— இவற்றில் தடித்த எழுத்துத் தொடர்களை விளக்குக. (வி. 49)

'உரையும் பாடையும் விரவியும் வருமே' என்பது காப்பியங்களுக்குரிய செய்யுள் வகையைக் கூறும் இலக்கணப் பகுதியாகும். அதாவது ஒருவகைச் செய்யுளாலும் பலவகைச் செய்யுளாலும் உரைவிரவியும் பாடை விரவியும் அவை இரண்டும் விரவாமலும் காப்பியம் வரும் என்பதாகும். 'விரவியும் வரும்' என்ற உம்மையால், உரையும் பாடையும் விரவாமல் வருதலே சிறப்புடைத்து என்பது பெறப்படும்.

சந்தி என்பது நாடகத்தே நிலைபெறுவது. வித்து, முளை, தழைத்தல், விளைவு, துய்த்தல் முதலியன ஒன்றுக் கொன்று தொடர்புபட்டு விளங்குவது நாடகத்தில் சந்தி என்று பெயர் பெறும். இதுபோல் பெருங் காப்பியத்தில் மந்திரமிருத்தலும் தூது விடுத்தலும் பகைவர் மேற் செலவும் போர் செய்தலும் வென்றி எய்தலும் தொடர்ச்சியாக வரவேண்டுமென்பது ஆசிரியர் கருத்தாகும்.

**செய்யுணெறி**

11. வைதருப்ப நெறி, கௌட நெறி இரண்டினையும் வேறு படுத்திக் காட்டுக. (வி. 50)

12. வைதருப்பம், கௌடம் இந்நெறிகளின் இலக்கணம் தருக. (வி. 53)

13. அலங்கார நூலார் கூறும் இரண்டு நெறியினர்க்கும் உடம்பாடாக அமைந்த குணங்களை எழுதுக. (எம். ஏ. 52)

*அல்லது*

கௌட நெறிக்கும் வைதருப்ப நெறிக்குமுள்ள பொது இயல்புகள் யாவை? (வி. 59)

*செய்யுள் நெறி வைதருப்பம், கௌடம் என இரண்டு வகைப்படும். வைதருப்ப நாட்டுப் புலவர் பெருமக்களால் விரும்பிக்கொள்ளப்பட்ட நெறி வைதருப்ப நெறியாகும். இந்நெறி இனிய சொல்லாலும் பொருளாலும் வரப்பெறும். இது செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி எனப் பத்து வகைப்படும். இவை குண அலங்காரங்கள் அல்லது குணவணிகள் எனப்படும்.*

*கௌடநாட்டுப் புலவர்களால், கொள்ளப்பட்ட நெறி கௌட நெறியாகும். வைதருப்ப நெறி பத்தனுள்ளும் சிலவற்றோடு கூடியும் சிலவற்றோடு மாறுபட்டும் இந்நெறி வரப்பெறும். கடினமான சொல்லையும் பொருளையுமே இந் நெறியினர் பெரும்பாலும் விரும்புவர்.*

*மேலே கூறிய குண அணிகளில் ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, சமாதி ஆகிய நான்கும் பொருளின்பமும் இருநெறியாளர்க்கும் உடம்பாடாக அமைந்த குணங்களாகும்.*

**குணவணிகள்**

14. குணவணிகளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக. (வி. 50)

*அல்லது*

**தண்டியலங்காரம் பொதுவணியியலில் கூறப்படுவன வற்றைத் தொகுத்து எழுதுக.** *(வி. 62)*

இனிய சொல்லாலும் பொருளாலும் வரப்பெறுகின்ற வைதருப்ப நெறியின் பத்து வகைகளே குண அலங் காரங்கள் என்று சொல்லப்படுகின்ற குணவணிகளாகும். அவையாவன :

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி.

செறிவு என்பதற்குப் பொருள் இறுகுதல் அல்லது நெருங்குதல் ஆகும். இதனை முதனூலார் சிலிட்டம் என்பர். ஒன்றை யொன்று இறுகத் தழுவுதலே சிலிட்ட மாகும். நெகிழ்ந்த இசையின்றி வரத் தொடுப்பது செறி வெனப்படும். அதாவது செறிவுக்குக் காரணமான வல்லினமே மிகுதியாக வரத்தொடுப்பதாகும். இது இரு நெறியாளர்க்கும் பொதுவானதாகும். ஆனல் கௌடர் ஓரினத்தெழுத்தால் தொடுக்கப்படுவதே செறிவு என்பர்.

'சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது'. (உ-ம். வை.)

தெளிவெனப்படுவது பொருள் புலப்பாடு அல்லது வெளிப்படையாகும். இதனை முதனூலார் பிரசாதம் (களங்கமில்லாதது) என்பர். கேட்பார்க்கு உளங்கொண்டு விளங்கத் தோன்றுவது தெளிவாகும். தெளிவுக்குக் காரணம், பல பொருள் பயக்கும் திரிசொற்கள் வராமையே ஆகும். ஆனல் கௌட நெறியினர் பொருள் புலப்பாடு இலதாயினும் விசேடமான பொருளை உணர்த்தும் சொற் களால் தொடுக்கப்படுவதே தெளிவெனக் கூறுவர்.

'பிறர்க்கின்னு முற்பகற் செய்யிற் றமக்கின்னு
பிற்பகற் றுனே வரும்.' (உ-ம். வை.)

'பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.' (உ-ம். கௌடம்.)

வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவின எழுத்துக்களும் சமமாக விரவத் தொடுப்பது சமநிலை யாகும். இதனை முதனூலார் சமதை என்பர். பொருளும் அலங்காரங்களும் வன்மை முதலியனவாகி விரவத் தொடுப் பதே சமநிலை என்பர் கௌடர்.

'சோக மெவன்கொ லிதழிபொன்
றூக்கின சோர்குழலாய்
மேக முழங்க விரைசூழ்
தளவங் கொடியெடுப்ப
மாக நெருங்கவண் டானங்
களிவண்டு பாடவெங்குந்
தோகை நடஞ்செயு மன்பர்
திண்டேரிங்குத் தோன்றியதே.'

(உ-ம். வை.)

சொல்லினும் பொருளினும் சுவைபடத் தொடுத்தல் இன்பம் ஆகும். இதனை மாதுரியம் என்பர் முதனூலார். பொருளின்பம் மாத்திரம் கௌடநெறியார்க்கு உடன் பாடாகும்.

'முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்கிப் போக
அன்னைக்கு ரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த வெண்முத்தந் தயங்கு
கானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே
யெம்மூர்'. (உ-ம். வை.)

வெறுக்கத்தகும் இன்னா இசையின்றி வரத்தொடுப்பது ஒழுகிசையாகும். இதனை முதனூலார் சுகுமாரதை என்பர். இந்நெறி கௌடர்க்கும் உடன்பாடாகும்.

சொல்லப்பட்ட செய்யுளுள் சொற்படு பொருளின்றி அதன் குறிப்பினால் ஒரு பொருள் நெறிப்படத் தோன்றுவது உதாரம் என்று சொல்லப்படும். இது கௌடர்க்கும் உடன்பாடாகும். இதனை முதனூலார் உதாரதை என்பர்.

'செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்ன—ரொருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருணசையால் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்.'

இப் பாடலில் 'உறந்தையார் கோமானை ஒருநாள் முகம் பார்த்த இரவலர் பின்னைப் பிறரைப் பொருள் நசையாற் பாரார்', எனவே அவன் இரப்போர் வறுமை தீரக்கொடுப்பான் என்னும் பொருள் குறிப்பினால் கொள்ளக் கிடக்கின்றது.

கவி கருதிய பொருளை விளங்க விரிக்குஞ் சொல்லைச் செய்யுளுள்ளே கொண்டு பிறிதுமொழி கூட்டியுரைக்கும் தன்மை இன்றிவரத் தொடுப்பது உய்த்தலில் பொருண்மையாகும். அதாவது, செய்யுளிலில்லாத பிற சொற்களைச் சேர்க்காது பொருள் கொள்ள ஏற்புடையதாகும். இதனைக் கௌடரும் விரும்புவர். இதனை முதனூலார் 'அர்த்த வியக்தி' என்பர்.

ஒன்றனை உயர்த்திப் புகழுங்கால் உலகநடை இறவாமல் உயர்த்திப் புகழ்வது காந்தமாகும். காந்தி என்று இதனை முதனூலார் கூறுவர். இது கௌடர்க்கு உடன்பாடன்று. உலகநடை இறப்பப் புணர்ப்பதே சுவையுடையதென வேண்டுவர் கௌடர்.

தொகைச் சொற்றொடர்பு உண்டாகத் தொடுப்பது வலியாகும். இதனை முதனூலார் ஓசம் (சர்மர்த்தியம்) எனக் கூறுவர். இது கௌடர்க்கு உடன்பாடன்று. இத் துணைச் சுருங்கத் தொடுத்தல் இன்றென்று அவர் கூறுவர்.

முக்கியப் பொருளின் வினையை ஒப்புடைப்பொருள் மேல் தந்து புணர்ந்து உரைப்பது சமாதியாகும். இது கௌட நெறியார்க்கும் உடன்பாடாகும்.

உ-ம்:

1. 'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி'

இதில் உயர்திணைக்குரிய பருகுதல், காலுதல் என்ற வினைகள் அஃறிணையாகிய சூரிய மண்டலத்தின் மேலேற்றிக் கூறப்பட்டுள்ளது.

2. 'கடுங்கை வயலுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலம்—தடஞ்சேர்ந்து
நீளரிமேற் கண்படுக்கு நீணிரவந்தியார்
கோளரியே றிங்கிருந்த கோ.'

இதில் 'நீலம்—தடஞ் சேர்ந்து, நீளரிமேற் கண் படுக்கும் என்பது சமாதியாகும். நீலம்—நீல மலர்; அரி—தவளை.

15. வைதருப்ப நெறியைப் பிறநெறிகளோடு ஒப்பிட்டு விளக்கி, சமநிலை, காந்தம் இவற்றின் இயல்புகளையும் புலப்படுத்துக. (எம். ஏ. 55)

16. செறிவு, சமநிலை, உதாரம, சமாதி — இவற்றை விளக்குக. (வி. 55)

17. சமாதி இன்னதெனக் குறித்து உதாரணம் தந்து விளக்குக. (வி. 54)

18. உதாரம், சமாதி—இவற்றை விளக்கி, இவை எந்நெறியின என்றுங் காட்டுக. (வி. 53)

19. ஒழுகிசை, வலி, இவற்றை விளக்குக. (வி. 52)

20. சமநிலை, காந்தம்—இச்சொற்களைப் பொருள் கூறி விளக்குக. (வி. 51)

21. உதாரத்தின் இலக்கணம் என்ன? (எம். ஏ. 52)

22. காந்தம், இன்பம், தெளிவு—விளக்குக. (வி. 59)

*விடைகளை முன்னர்க் கண்டு கொள்க.*

குண அணி—பொருளணி

13. குண அணிக்கும் பொருளணிக்கும் உள்ள வேற்றுமையை விளக்குக. (வி. 50)

*குண அணி என்பது செய்யுட்கு இன்றியமையாததாய் உடற்கு உயிர்போல் நிற்பதாகும். அதாவது தொடைகளைப் பற்றி நின்று காப்பியத்தினைக் கவின்பெறச் செய்வதாகும். மேலும் குண அணி இளமை முதலிய போல் ஒற்றுமை நயத்தினின்று அழகு செய்வதாகும்.*

*பொருள் பற்றி வரும் அணி பொருளணியாகும். இது போன்றே சொல்பற்றி வருவது சொல்லணியாகும். இவையிரண்டும் கடக குண்டலாதிகளைப்போல் வேற்றுமை நயத்தினின்று அழகு செய்வன ஆகும். மேலும் காப்பியத்திற்கு அதிசயத்தைச் செய்வன இவ்விரண்டு அணிகளே.*

24. பொருளணியியலில் சொல் பற்றி எழும் அணிகளைக் காட்டுக. (எம். ஏ. 51)

25. பிற இலக்கண நூல்களில் நீங்கள் படித்தறிந்தவை தண்டியலங்காரத்தில் அணியாகக் கூறப்பட்டுள்ளன என்பதற்கு மூன்று எடுத்துக்காட்டுக. (வி. 49)

26. 'பொருளணிகளுள் சில தமிழ் யாப்பியலுள் அடங்கு வனவாம்' என்பதை விளக்குக. (வி. 47)

*சிலேடை, பின்வருநிலை, தீவகம், நிரனிறை முதலியன சொல்பற்றி வருவனவாகும். எனவே இவை சொல்லிலக்கணத்தில் கூறப்பட்டனவாகும்.*

*தண்டியலங்காரத்தில் பொருளணிகளாகக் கூறப்படும் விலக்கு, சுவை முதலியன பொருளிலக்கணத்தில் கூறப் படுவன ஆகும்.*

*விரோத அணி யாப்பிலக்கணத்தில் 'முரண்தொடை' என வழங்கப்பெறுகின்றது.*

**தன்மை அணி**

27. அதுவே, பொருள் குணம் சாதி தொழிலொடு புலனும்'—உரைகூறி விளக்கந்தருக. (வி. 56)

*இது தன்மை அணியின் வகையினை வகைப்படுத்திக் காட்டுகின்றது. எவ்வகைப்பட்ட பொருளும் உண்மையின் வகையினால் விளக்கும் சொல் முறையால் பாடப்படுவது தன்மை அணியாகும். அது பொருளும் குணமும் சாதியும் தொழிலும் இவைபற்றித் தோன்றும். பொருளிடத்தி லுள்ள பலவிதமான இயல்புகளை உள்ளவாறே அலங்கரித் துக் கூறுதல் பொருட்டன்மையாகும். குணத்திலுள்ள பலவிதமான தன்மைகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுதல் குணத்தன்மை எனப்படும். சாதியிலுள்ள பல விதமான தன்மைகளைக் கூறுதல் சாதித் தன்மை என்றும் தொழிலிலுள்ள பலவிதமான தன்மைகளைக் கூறுதல் தொழில் தன்மை என்றும் வழங்கப்பெறும்.*

'நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோ லுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை.' உ-ம்.

இப்பாட்டில் பொருட்டன்மை அமைந்துள்ளது. இதில் 'கச்சாலை யெம்மான்' என்பது பொருள் கருதிய வாசகம். நீலமணி மிடறுடைமை முதலியன அப்பொருளிடத்துள்ள தன்மைகள்.

**உவமை அணி**

28. உவமையின் பொது இலக்கணம் உணர்த்தி உதாரணமும் தருக. (வி. 54)

அல்லது

எவை காரணமாக ஒப்புமை புலப்படப் பாடப்படும்? அவற்றை உதாரணம் தந்து விளக்குக. (வி. 53)

உவமை அணி என்பது இரண்டு பொருட்களுக்கு ஒப்புமை தோன்றக் கூறுவதாகும். அதாவது ஒரு பொருளோடு மற்றொரு பொருட்கு ஒப்புமை கூறி விளக்குதலாகும். பண்பு, தொழில், பயன் இவற்றின் காரணமாக இரு பொருள்களுக்கு ஒப்புமை புலப்படப் பாடப்படும்.

'பவளத்தன்ன மேனி'—பண்புவமை.
'அரிமாவன்ன அணங்குடைத்துப்பிற்
திருமாவளவன்'—தொழிலுவமை.
'மாரியன்ன வண்கைத் தேர்வேளாயைக்
காணிய சென்மோ'—பயனுவமை. உ-ம்.

29. உவமையின் பாகுபாடுகள் ஐந்தினைக் கூறி விளக்குக. (வி. 51)

உவமை யணி, பண்பு, தொழில், பயன் காரணமாய்ப் பிறத்தலின் அது மூன்று வகைப்படும். அதனது விரி 24 ஆகும். அவையாவன : 1. விரி 2. தொகை 3. இதரவிதரம் 4. சமுச்சயம் 5. உண்மை 6. மறுபொருள் 7. புகழ் 8. நிந்தை 9. நியமம் 10. அநியமம் 11. ஐயம் 12. தெரிதருதேற்றம் 13. இன்சொல் 14. விபரீதம் 15. இயம்புதல் வேட்கை 16. பலபொருள் 17. விகாரம் 18. மோகம் 19. அபூதம் 20. பலவயிற்போலி 21. ஒருவயிற்போலி 22. கூடாவுவமை 23. பொதுநீங்குவமை 24. மாலையுவமை.

விளக்கம் பின்னர்க் கண்டு கொள்க.

30. உவமை எவற்றின் அடியாகத் தோன்றும்? உரைகாரர் விளக்கும் முறையால் கூறுக. (வி. 47)

உவமை அணி பண்பு, தொழில், பயன் ஆகிய மூன்றின் காரணமாக மட்டுமின்றி, வடிவு, எல்லை முதலியவற்றின் காரணமாகவும் வரும் என்பர் ஒரு சிலர். ஆனால் உரைகாரரோ இதனை மறுத்து, உவமையை நான்காக வகுக்காது, அவற்றுள் வடிவு, வண்ணம் என்ற இரண்டையும் குணத்தில் அடக்கிப் பண்பு, தொழில், பயன் என மூன்றாகக் கூறியுள்ளார். இக்கொள்கைக்கு ஆதாரமாக உரைகாரர் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தைத் தருகின்றார்.

'வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்
றன்ன பிறவும் அதன்குண நுதலி
யின்ன திதுவென வரூஉ மியற்கை
யென்ன கிளவியும் பண்பின் தொகையே'.

31. பண்பி, பண்பு, தொழில், பயன் என்பவற்றின் தன்மையை விளக்குக. (வி. 49)

**பண்பி :** காட்சிப் பொருளும் கருத்துப் பொருளும் ஆகிய இயங்குதிணையும் நிலைத்திணையும்.

**பண்பு :** அவற்றின் குணமாய்த் தோன்றி, தமக்கு வேறு குணமின்றி நிகழ்வன.

**தொழில்:** அவற்றின் புடைப் பெயர்ச்சியாய்க் காலம் புணர்ந்து நிற்பன.

**பயன்:** அவை காரணமாகப் புலப்படும் காரியமாகும்.

32. பண்பு முதலிய விரவி வந்ததற்கு ஒரு உதாரணம் காட்டி விளக்குக. *(வி. 49)*

'கான யானை கைவிடு பசுங் கழை
மீனெறி தூண்டிலி னிவர்க்கும்
கான நாடன்'

என்பதில் தொழிலும் பண்பும் விரவி வந்தன.

33. அபூதவுவமை, கூடாவுவமை—இவற்றை விளக்கி இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை எழுதுக. *(வி. 46)*

அபூதவுவமை என்பது முன்பு இல்லாததை உவமை ஆக்கிக் கூறுவதாகும். இல்பொருளுவமை என்றும் இதனை வழங்குவர்.

'எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்
வில்லேர் புருவத்து வேனெடுங்கண்—நல்லார்
முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்
அகம் போலு மெங்க ளகம்'. (உ - ம்)

ஒரு பொருட்குக் கூடாத அதனைக் கூடுவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமை ஆக்கி உரைப்பது

கூடா உவமையாகும். மருட்கை உவமை என்ற மற்ருரு பெயரும் இதற்கு உண்டு.

‘சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா னும்மாற்றம்—பைந்தொடியீர்!
வாவிக் கமல மதிமுகங் கண்டேக்கறுவார்
ஆவிக் கிவையோ வரண்.’ (உ -ம்)

மேற்கூறிய இரண்டும் இல்லாததனை உவமை ஆக்கிக் கூறுவதாயினும் இரண்டிற்கும் சிறிது வேறுபாடு இருக்கின்றது. முன்பு ஒருகாலும் இல்லாததனைப் படைத்து உவமையாகக் கூறுவது அபூதவுவமையாகும். முன்பு இருந்தும் பொருந்தாதனைப் பொருந்துவதாகக் கூறி உவமை ஆக்கல் கூடாவுவமையாகும்.

34. விகார உவமை, அபூத உவமை, அற்புத உவமை இவை தம்முள் வேறுபாட்டினைக் கூறுக. (எம்.ஏ.49).

ஒரு உவமையை விகாரப்படுத்தி உவமிப்பது, விகார உவமையாகும்.

‘சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு—வேதாத்தன்
கைம்மலரா லன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
பொய்ம் மலர்ப்பூங் கோதை முகம்’. (உ-ம்)

உவமேயத்தின் குணங்களை உவமான மேலேற்றி அற்புதம் தோன்ற அலங்கரித்துச் சொல்லுதல் அற்புத உவமை ஆகும்.

35. உண்மை உவமை, தேற்ற உவமை—இவை தம்முள் காணும் வேறுபாட்டினை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவுபடுத்துக. (எம். ஏ. 48)

உண்மையைக் கூறி மறுத்துப் பொருளையே கூறி முடித்தல் உண்மை உவமை ஆகும்.

*'தாமரை யன்று முகமே'.* **(உ - ம்)**

*ஐயுற்றதனைத் தெரிந்து துணிவது தெரிதரு தேற்ற உவமையாகும்.*

*'தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியும்*
*காமர் மதியும் கறை விரவும்—ஆமிதனால்*
*பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே*
*என்னை மயக்கு மிது'.* **(உ - ம்)**

36. பொதுநீங்குவமை, உண்மை உவமை - ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக. **(வி. 54)**

*உவமையைக் கூறி மறுத்துப் பொருள் தன்னையே உவமையாகக் கூறல் பொது நீங்குவமையாகும். ஆனால் உண்மையைக் கூறி மறுத்துப் பொருளையே கூறி முடித்தல் உண்மை உவமையாகும்.*

37. விரோத உவமை, விபரீத உவமை—வேறுபாட்டினைப் புலப்படுத்துக. **(வி. 48)**

*உவமானமும் உவமேயமும் தம்முள்ளே விரோத குண முடையனவாகச் சொல்லப்படுவது விரோத உவமை யாகும்.*

38. இதரவிதரவுவமை, மறுபொருளுவமை — இவற்றிற் குரிய வேறு பெயர்கள் யாவை? **(வி. 31)**

*ஒன்றற்கொன்று உவமையாய் உயர்வைக் குறிப்பித்துத் தொடர்ந்து வருமாறு இரண்டு வாக்கியமாகச் சொல்லப்படுவது இதரவிதரமாகும்.*

*"களிக்குங் கயல் போலு நுங்கணுங் கண்போல்*
*களிக்குங் கயலும்".* **(உ - ம்)**

'தாமரைபோன் மலரு நும்முக நும்முகம் போல்
தாமரை'.

இதனை முதனூலார் 'அந்நியோந்நியோபமை' என்றும், சரித்திய தர்ப்பணகர்ரர் 'உபமேயோபமை' என்றும், தொல்காப்பியர் 'தடுமாறுவமம்' என்றும் கூறுவர்.

யாதேனும் ஒரு பொருளைச் சொல்லக் கருதிய தன்மையோடும் முன் ஒரு வாக்கியத்திலே சொல்லி முடித்துப் பின் ஒரு வாக்கியத்திலே அத்தன்மை உடையதாகச் சொல்லி முடிக்கும் எதிர்ப் பொருளினுல் அப்பொருட்கு ஒப்புமை தோன்றுமாறு ஒரு தொடரில் சொல்லப்படுவது மறு பொருளுவமையாகும்.

இவ்வணியினை முதனூலார் 'பிரதிவஸ்தூபமை' என்பர். வீரசோழியம் 'எதிர்ப் பொருளுவமை' என்று கூறும்.

39. மறுபொருளுவமை—உதாரணம் தருக. (வி. 34)

'அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மனபாயா
நின்னையா ரொப்பார் நிலவேந்தர்—அன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற் கில்லையால்
சூரியனே போலுஞ் சுடர்'.

இதில் முன்னிரண்டடியும் ஒரு வர்க்கியம்; பின்னிரண்டடியும் ஒரு வாக்கியம். முதலில் வைக்கப்பட்ட பொருள் அநபாயன்; பின்னர் எதிராக வைக்கப்பட்ட பொருள் சூரியன். 'ஆரொப்பார்' என்பதினுலும், "போலுஞ் சுடரில்லை" என்பதினுலும் பெறப்பட்ட ஒப்பின்மை பொதுத் தன்மையாகும்.

40. உவமை பிற அலங்காரம் எவற்றோடு கூடி வருவதாம்? (வி. 52)

அல்லது

**உவமை வேறு எந்த அணிகளோடு கூடிவரும்? ஒன்றிற்கு உதாரணம் தருக. (வி. 50)**

*அற்புதம், சிலேடை, அதிசயம், விரோதம், ஒப்புமைக் கூட்டம், தற்குறிப்பேற்றம், விலக்கு, ஏது என்ற எட்டு அணிகளோடு உவமை கூடிவரும்.*

'வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையும்
நாளிளைய திங்க ணகை நிலவும்—நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன்
செஞ்சடைமேல்
வானுலவு விற்போல் வரும்.' (உ - ம்)

*இதில் அமைந்திருப்பது ஏது உவமையாகும். இக் காரணத்தினல் இதனை இஃதொக்கும் என்று காரணம் புலப்படக் கூறுவது ஏது உவமையாகும். உபமானம்—வானவில்; உபமேயம்—சிவனது சடை. நாகமணி வன்னி யிலை முதலியன ஒளிவிடுதல் காரணம்.*

**41. 'மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலு பான் மாறு படுதலும் ப ாகுபாடுடைய'—பொருளும் உதா ரணமும் வரைக. (வி. 53)**

**மிகுதலும்**— *உபமேயஅடைக்கு உபமான அடைமிகப் புணர்தலும்;*

**குறைதலும்**— *குறையப் புணர்தலும்;*

**தாழ்தலும்**— *இழிந்த உவமையோடு உயர்ந்த பொருள் உவமையாகலும்;*

**உயர்தலும்**— *உயர்ந்த உவமையோடு இழிந்த பொருள் உவமையாகலும்;*

**பான்மாறு படுதலும்** — ஆண்பாற்குப் பெண்பாலும், பெண்பாற்கு ஆண்பாலும், ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும், உவமையாதலும்;

**பாகுபாடுடைய**—முதலிய வேறுபாடுகளையுடையது இவ்வுவமை.

இவை வழு உடையன ஆயினும், சிறப்புடைய புலவரால் செய்யப்படின் வழு அமைதியாகக் கொள்ளவேண்டும்.

**உதாரணப் பாடல்கள்:**

1. 'நீலப் புருவங்குனிய விழிமதர்ப்ப
மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம்—போலும்
கயல் பாய வாசங் கவரும் களிவண்
டயல்பாய வம்போருகம்'.

இதில் உவமானம் வதனம்; உவமேயம் அம்போருகம். விழி மதர்த்தல், மாலைக் குழல் சூழ்தல், புருவங்குனிதல் ஆகிய மூன்றும் உவமானத்திற்கு அடைமொழிகள். கயல் பாய்தல், வண்டு பாய்தல், இரண்டுமே உவமேயத்திற்கு அடைமொழிகள். எனவே இங்கு உவமேய அடைக்கு உவமான அடை மிக்கு வந்துள்ளது.

2. "நாட்டந் தடுமாறச் செவ்வாய் நலந்திகழத்
தீட்டரிய பாவை திருமுகம்—காட்டுமால்
கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்கிளர
வண்டுசூழ் செந்தா மரை".

இதில், உவமேயம் செந்தாமரை; உவமானம் திருமுகம். உவமேயத்திற்கு, கெண்டை மீதாடல், இதழ் கிளரல், வண்டு சூழல் ஆகிய மூன்றும் அடை மொழிகளாய் வந்துள்ளன. உவமானத்திற்கு அதனினும் ஒன்று குறைந்து நாட்டந் தடுமாறல், வாய் நலந்திகழல் ஆகிய

இரண்டுமே வந்திருக்கின்றன. எனவே இங்கு உவமேய அடைக்கு உவமான அடை குறைந்து வந்துள்ளது.

3. 'மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்
மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும்—
அன்னப்
பெடைபோலுஞ் சந்திரன்; பைந்தடங்கள் போலு
மிடைமா சென்றில்லா விசும்பு'.

இப் பாடலில், 'மன்னவர்க்கு...........வாள்வயவர்' என்னுமிடத்து, வாள்வயவர்க்கு இழிந்த நாயை உவமையாகக் கூறி இருத்தல், உவமான உவமேயங்கள் ஒன்றற்கொன்று இழிந்த பொருளாய் அமைந்து வருதலுக்கு தாழ்தல் உதாரணமாகும். 'அன்னப் பெடை போலும் சந்திரன்' என்னுமிடத்து ஆண்பாலுக்குப் பெண்பால் உவமையாய் வந்துள்ளதால், இது பான்மாறு படுதலுக்கு உதாரணமாகும். 'பைந்தடங்கள் போலு, மிடைமா சென்றில்லா விசும்பு' என்பதில் ஒருமைக்குப் பன்மையை உவமை கூறி இருப்பதால் இதுவும் பான்மாறு படுதலுக்கு உதாரணமாகும். 'மின்மினியும் வெஞ்சுடரோன் போல் விளங்கும்' என்பதில் மின்மினிக்கு உயர்ந்த வெஞ்சுடரோனை உவமை கூறியிருப்பது, 'தாழ்தல்' என்னும் குற்றமாகும்.

42. 'தாமரை யன்று முகமே'—இஃது என்ன அணியாகும்? இதனை மாற்றியுரைப்பின் எவ்வணியின் பாற்படும்? *(வி. 49)*

இது உண்மை உவமை அணியாகும். இதனை 'முகமன்று தாமரையே' என்று மாற்றி உரைப்பின், அது அவநுதி உருவக அணியாகும்.

43. 'வேலே விழிக்குநிகர்'—இது என்ன அணி?
(வி. 43)

*இது நியம உவமையாகும். இன்னதற்கு இன்னதே உவமையாமெனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறுதல் நியம உவமையாகும்.*

44. 'மறுப்பயின்ற வான்மதியு மம்மதிக்குத் தோற்கு
நிறத்தலரு நேரொக்கு மேனும்—சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமான் அருள்போற் றிருமேனி
முல்லைப்பூங் கோதைமுகம்'—இதிலுள்ள அணியை
விளக்குக. (வி. 45)

*இது நிந்தை உவமையாகும். உபமேயத்தினை உயர்த்தி உபமானத்தினை நிந்தித்துச் சொல்வது நிந்தை உவமையாகும். இதில் சந்திரனும், தாமரைப் பூவும் உபமானங்கள்; முகம் உபமேயம். சந்திரனுக்கு மறு இருத்தலும், தாமரை மதியைக் கண்டு குவிதலும் நிந்தையாகும்.*

45. 'தாதொன்று தாமரையே நின்முகம் ஒப்பதுமற்
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே—
யீதுயர்ந்த
சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர் கோன்
வேலே விழிக்கு நிகர்' இதில் அமைந்துள்ள
அணியாது? (வி. 46)

*இது நியம உவமையாகும்.*

46. 'அகர முதல வெழுத்தொல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு'—இது தண்டியலங்காரத்
தின்படி எவ்வணியின்பாற்படும்?

*இதில் முன்னர் வைத்த பொருட்கு நிகராவதோர் பொருளைப் பின்னர் வைத்திருத்தலின் இது மறுபொருள்*

*உவமைக்கு உதாரணமாகும். பிறர் இதனை எடுத்துக் காட்டு உவமைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர்.*

47. 'மணிதொடுத்தன்ன வைம்பான் மறுத்துடைத்து, மதியம் வைத்தன்ன வாண்முகத் தொருத்தி';
'காமரு வண்டல்ல கருநெடுங்கண்'—
இவற்றுள்காணும் உவமைகள் எவ்வகையன? காரணம் கூறுக. *(வி. 47)*

*'மணி தொடுத்தன்ன.........தொருத்தி' என்பதில், உவமானத்தை இயல்பாகக் கூறாது செயற்கைப் படுத்திக் கூறியிருத்தலின், இது விகார உவமையாகும்.*

*'காமரு...நெடுங்கண்' என்பதில் உண்மையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடித்திருப்பதால், இது உண்மை உவமையாகும்.*

48. 'கருநெடுங்கண் போலும் கயல்கள்'—இதிலமைந்த அணியினைக் கூறுக. *(வி. 49)*

*இது விபரீத உவமையாகும்.*

49. 1. 'திருமுகம் போன்மலரும் செய்ய கமலம்'
2. 'எல்லாக் கமலத் தெழிலும் திரண்டொன்றின் முகம் போலும்' —இவைகள் என்ன உவமை? விளக்குக. *(வி. 48)*

*1. விபரீத உவமை.*

*2. அபூத உவமை அல்லது இல்பொருள் உவமை.*

50. 'களிக்குங் கயல்போலு நுங் கணுங்
கண்போல் களிக்கும் கயலும்'—
இதனை அணிகுறித்து விளக்குக. *(வி. 54)*

*இது இதர விதரமாகும்.*

51. 1. 'தாமரைபோன் மலரும் நின்முகம்........
செவ்விதரும்'

2. 'மாரியன்ன வண்மைத்....................காணிய
சென்மே'.—இவை எவ்வணிகளுக்கு எடுத்துக்
காட்டுகளாம் என்பதைக் காரணத்துடன் கூறுக.
(*எம். ஏ. 48*)

*1. இதர விதர உவமை.*

*2. பயன் காரணமாய் வந்த உவமை.*

*பயனுவது செயல் காரணமாகத் தோன்றும் காரியம். இங்கே மழை பெய்தலும், ஆய் என்பவனது கொடையும் செயலாகும். அச்செயலால் அடையும் பொருள் பயனாகும்.*

52, 'மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன'—
இதிலுள்ள அணியை எடுத்துக் காட்டுக.
(*எம். ஏ. 51*)

*இது விபரீத உவமையாகும்.*

53. 'திருமுகம் போலும் செய்ய கமலம்'—
இது எவ்வணிக்கு எடுத்துக் காட்டப்பட்டது?
(*எம். ஏ. 52*)

*விபரீதவுவமை.*

54. 1. 'தாதொன்று தாமரையே...........வேலே
விழிக்கு நிகர்'

2. 'கௌவைநீர்விரிதிரைநீர்க் காவேரி நன்னாட்டு
மௌவல் கமழுங் குழன்மடவாய்—செவ்வி

மதுவார் கவிரேநின் வாய் போல்வ தன்றி
அதுபோல்வ துண்டெனினு மாம்'—

இவற்றில் அமைந்துள்ள அணிகளை எழுதி அவற்றின் வேறுபாட்டைப் புலப்படுத்துக. (வி. 46)

*1.* இதில்காணும் அணி நியம உவமை அணியாகும். உபமானங்களைப் பலவாகக் கூறுதலால் உயர்வு பிறவா தென்று கருதி அவற்றுள்ளே சிறந்த தொன்றினை நிச்சயித்துக்கொண்டு இதுவே இப்பொருளுக்கு உபமானம் ஆகும் என்று தேற்றேகாரத்தோடு சொல்வது நியம உவமையாகும்.

*2.* இதிலுள்ள அணி அநியம உவமையாகும். இதுவே இப்பொருளுக்கு உபமானம், இது போலச் சிறந்தது வேறொன்று உளதாயின் அதுவுமாகும் எனச் சொல்லப்படுவது அநியம உவமை யாகும்.

உருவக அணி

55. உவமையை அடுத்து உருகவம் கூறியிருப்பது ஏன்? (வி. 31)

உபமானம் உபமேயம் என்னும் இரண்டினையும் வேறுபாடு நீக்கி ஒன்று என்று உணர்ந்துகொள்ளும்படி மயங்கச் செய்யின் அது உருவக அணியாகும். உருவகம் ஒருசார் உவமையோடு ஒற்றுமை உடையதாய் உவமையும் பொருளும் வேறுபட்டு நில்லாது ஒன்று என்னும் தன்மைத்தாதலின் அது உவமையின் பின் வைக்கப்பட்டது.

56. உருவகத்தின் பாகுபாடுகளில் எட்டனைக் குறிப்பிடுக. (வி. 51)

தொகை, விரி, தொகைவிரி, இயைபு, இயைபிலி, வியனிலை, சிறப்பு, விசேடம், சமாதானம், உருவகம், ஏகாங்

கம், அநேகாங்கம், முற்று, அவயவம், அவயவி என உருவ கத்தின் விரி பதினைந்து ஆகும்.

57. இயைபு உருவகம்—உதாரணம் தருக. *(வி. 39)*

பல பொருளையும் உருவகஞ் செய்யுங்கால் அவைதம் முள் ஒன்றற்கொன்று இயைபுடையனவாகவைத்து உருவ கம் செய்வது இயைபு உருவகமாகும்.

'செவ்வாய்த்தளிரு நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளக மதுகரமுஞ்—செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றோ துயர்', (உ-ம்.)

இதில் தளிர் முதலியவற்றோடு அரும்பு முதலியவை கட்கும் வாய் முதலியவைகளோடு நகை முதலியவைகட்கும் இயைபுடைமையைக் காணலாம்.

58. அவயவி, அநேகாங்கம், விருபகம்—இவ்வுருவகங் களை விளக்கி எழுதுக. *(வி. 52)*

59. வியனிலையுருவகம், அவயவி உருவகம்—இவை தம் முள் வேறுபாட்டினை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவு படுத்துக. *(எம். ஏ. 48)*

60. அநேகாங்கவுருவகம், வியனிலை உருவகம், அவயவ உருவகம்—இவை தம்முள் வேறுபாட்டினைத் தெளிவு பெறக் கூறுக. *(எம். ஏ. 49)*

61. சமாதானவுருவகம், விருபகவுருவகம், வியனிலை உரு வகம்—இவற்றுள் இரண்டன் இயல்புகளை விளக்குக. *(வி. 49)*

62. வியனிலை உருவகம், விருபக உருவகம், சிறப்புரு வகம், சந்தான உவமை—இவற்றுள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக: *(வி. 50)*

63. சமாதானவுருவகம் இன்னதென விளக்கி உதாரணம் தருக. (வி. 51)

64. முற்றுருவகம், வியனிலை உருவகம்—இவற்றிடையே உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துக. (வி. 57)

65. 'செவ்வாய் நகையரும்ப..........கொம்பு' — இதன் அணி கூறித் தெளிவாக்குக. (வி. 53)

### 1. வியனிலை

*அவயவியை உருவகஞ் செய்தும், அவயவங்களுள்ளுஞ் சிலவற்றை உருவகஞ் செய்தும் சிலவற்றை வாளாவிடுத்தும் ஒரு தொடரில் சொல்லுவது வியனிலையாகும்.*

*'செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க*
*மைவா ணெடுங்கண் மதர்த்துலவச்—செவ்வி*
*நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா*
*குறவர் மடமகளாங் கொம்பு.'* (உ - ம்)

*இதில் மகளென்னும் அவயவி கொம்பாக உருவகிக்கப்பட்டது. செங்கை என்னும் அவயவம் தளிராக உருவகஞ் செய்யப்பட்டது. பிற வாளா விடப்பட்டன.*

### 2. சிறப்புருவகம்

*ஒரு பொருளின் விசேடணங்களை உருவகமாக்கி அவை காரணமாக அப்பொருளையும் உருவகமாக்கி முடிப்பது.*

### 3. விரூபகம்

*விரோதமான தன்மையை உடைய உருவகம் விரூபகமாகும்.*

*'தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது*
*முண்மருவு தாண்மேன் முகிழாது—நண்ணி*

இருபொழுதுஞ் செவ்வி யியல்பாய் மலரும்
அரிவை வதனும் புயம்'. (உ-ம்)

இதில் முகம் தாமரையாக உருவகஞ் செய்யப்பட்டது. தண்மதிக்குத் தோலாமை முதலியன தாமரையின் விரோத குணங்கள்.

### 4. சமாதானவுருவகம்

ஒரு பொருளை உருவகஞ் செய்து அதனால் வரும் தீங்குக்கும் வேறு காரணம் காட்டிச் சமாதானம் சொல்லி முடிப்பது.

'கைகாந்தள் வாய்குமுதம் கண்ணெய்தல் காரிகையீர்
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கம் — இவ்
வனைத்தும்
வன்மை சேர்ந்தாவி வருத்துவது மாதவமொன்
றின்மையே யன்றோ வெமக்கு'. (உ-ம்)

### 5. அவயவவுருவகம் (அவயவம்—உறுப்பு)

அவயவத்தை உருவகஞ் செய்து அவயவியை உருவகியாமல் விட்டுவிடுவது அவயவவுருவகம் ஆகும்.

### 6. அவயவிவுருவகம்

அவயவங்களை உருவகஞ் செய்யாமல் அவயவியை மாத்திரம் உருவகஞ் செய்வது அவயவிவுருவகமாகும்.

'வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வேரரும்பச் சேந்து விழிமதர்ப்ப—மூரல்
அளிக்குந் தெரிவை வதனம் புயத்தாற்
களிக்குந் தவமுடையேன் கண்'. (உ-ம்)

இதில் முகம் என்னும் அவயவி மாத்திரம் அம்புயமாக உருவகஞ் செய்யப்பட்டது.

7. ஏகாங்கவுருவகம்

ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றுள்ளே ஒன்றினை மாத்திரம் உருவகஞ் செய்து கூறுவது.

8. அநேகாங்கவுருவகம்

பல உறுப்புக்களை உருவகஞ்செய்து கூறுவது.

66. உருவக அணி வேறு எந்த அணிகளோடு சேர்ந்து வரும்? ஒன்றினை உதாரணம் தந்து விளக்குக.
(வி. 56)

உருவக அணியானது உவமை, ஏது, வேற்றுமை, விலக்கு, அவநுதி, சிலேடை என்னும் ஆறு அணிகளோடும் சேர்ந்து வரும்.

வேற்றுமை உருவகம்

வேற்றுமையணி கலந்த உருவகம் வேற்றுமை உருவகமாகும்.

'வையம் புரக்குமான் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும்—கையாம்
இருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார் பருவ முடைத்து'. (உ-ம்)

இதில் அரசன் கரத்தினை முகிலாக வுருகஞ்செய்து இரண்டற்கும் பருவத்தினால்வேற்றுமை கூறப்பட்டுள்ளது. அதனால் கரமாகிய முகிற்கு உயர்வு காணப்படுகின்றது.

67. வேற்றுமை உருவகம் இன்னதென விளக்கி உதாரணம் காட்டுக. (வி. 51)

விடையினை மேற் கேள்வியில் கண்டுகொள்க.

68. 'மது மகிழ்ந்த மாதர் வதனமதியம்
உதய வதனமே ஒக்கும்' என உருவகஞ்செய்து
'உதய மதியம் ஒக்கும்' என்று கூறல் கூறியது
கூறிற்ருகாதா? ஆராய்க. (வி. 46)

*அல்லது*

'மது மகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய வதனமே ஒக்கும்'—இதிலமைந்த அணியினை
வரைக. (வி. 49; பி. ஏ. 64)

*இதிலமைந்த அணி உவம உருவகமாகும். இதில் முன்னர் உருவகம் செய்த ஒன்றினைப் பின்னரும் உவமிப்பது கூறியது கூறல் என்னும் குற்றமாகும் என்பர். ஆனல் முதலில் இயல்பாகிய விளக்கமும் கிளர்ச்சியும் குளிர்ச்சியும் நோக்கி முக்கியப் பொருளோடு குணப் பொருளை ஒற்றுமை கொளுத்தி 'வதன மதிய'மென உருவகம் செய்யப்பட்டிருப்பதாலும் பின்னர் செயற்கையாலுளவாகிய மதர்ப்பும் செம்மையும் நோக்கி, 'மது நுகர்ந்தார் முகம் உதய மதியமே ஒக்கும்' என்று உவமித்தமையினுலும் வேற்றுமை இருப்பதால் இதனை உருவகத்துள்ளே அடக்கி உவமையுருவகம் என ஆசிரியர் கூறியுள்ளார். எனவே இது கூறியது கூறல் என்னும் குற்றம் அன்று.*

69. 'மாற்றத்தாற் கிள்ளை நடையால் மடவன்னம்'—
இதற்கு அணி கூறி விளக்குக. (வி. 49)

*இதிலமைந்துள்ள அணி ஏதுவுருவகமாகும். இதில் ஒரு பெண்ணைக் கிளி முதலியனவாக உருவகப்படுத்துமிடத்து, சொல் முதலிய காரணங்களைக் காட்டினமையால் இது ஏதுவுருவகத்தின்பாற்படும்.*

70. 'பொங்களக மல்ல புயலேயீது'—
இது எவ்வணிக்கு இலக்கியமாகியது? (வி. 49)

இதில் உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளை உடன்பட்டமையால் இது அவநுதியுருவக மாகும்.

71. 'மலையிற் பயிலா மடமஞ்ஞை'—
இதற்கு அணி கூறி விளக்குக. (வி. 49)

இதில் ஒரு பெண்ணை மயிலாக உருவகப்படுத்து மிடத்து, 'மலையில் பயிலா' என்றது, மயிலிற்கு மலையில் பயிலுதல் என்னும் தன்மை உள்ளமையால் அது அத் தன்மையில்லாத இவளுக்கு நிகராதற்கு ஏற்றதல்ல என்று அதனை விலக்கும் ஒரு கருத்தை விளக்குதலால் இது விலக்குருவகத்தின் பாற்படும்.

72. 'வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை' — இதன் அணியை
விளக்குக. (வி. 47; பி. ஏ. 64)

இக் குறளில் வீரர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் உழவுத் தொழில் செய்பவராக உருவகப்படுத்துமிடத்து, வில், சொல் என அவர்கள் கருவியாகிய காரணத்தைக் காட்டினதால் இது ஏது உருவகமாகும். ஆனல் ஒரு சாரார் வில்லை ஏராக உடைய உழவரென்றும், மற்றொரு சாரார் சொல்லை ஏராக உடைய உழவரென்றும் உருவக மாக்கி இருவரையும் பொருட்டெளிவால் உவமித்ததினல் இதனை உருவக வுவமை என்பர்.

73. 'நல்லார்கண் பட்ட வறுமையின் யின்னாதே
கல்லார்கண் பட்ட திரு'—இது எவ்வணிக்கு
இலக்கியமாய் ஆளப்பட்டது? காரணம் காட்டி
எழுதுக. (வி. 49)

இதில் கல்லாதாரிடத்துச் செல்வத்துக்குக் கற்றாரிடத்து வறுமை கூறத்தக்கதன்று என்று தெளிந்து

கூறியதனுல் இதிலமைந்துள்ள அணி தெரிதரு தேற்றவுவமையாகும்.

74. உண்மையுவமை, அவநுதியுருவகம்—வேறுபாடென்ன? (வி. 42)

உவமையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது உண்மையுவமையாகும். (உ-ம். 'தாமரையன்று முகமே'). உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளை உடன்பட்டுக் கூறுவது அவநுதியுருவகமாகும். (உ-ம். 'பொங்களக மல்ல புயலே').

75. மாலையுவமை, சந்தானவுவமை—இவ்விரண்டிற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக. (வி. 49)

76. சந்தானவுவமை-எடுத்துக்காட்டுடன் விளக்குக. (வி. 51)

மாலையுவமை என்பது ஒன்றோடொன்று தொடர்ச்சியுடைய பல பொருள்களை ஒரு பொருளுக்கு உவமையாகக் கூறுவதாகும். ஒன்றோடொன்று தொடர்ச்சியுடைய பல பொருள்களை வெவ்வேறு பொருள்களுக்கு உவமையாகக் கூறுவது சந்தான வுவமையாகும்.

**மாலையுவமை**

'மலையத்து மாதவனே போன்று மவன்பா
லலைகடலே போன்று மதனுட்—குலவு
நிலவலய மேபோன்று நேரியன்பா னிற்குஞ்
சிலைகெழு தோள் வேந்தர் திரு.' (உ-ம்)

**சந்தானவுவமை**

'ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கு குறங்கென்ன
மால்வரை யொழுகிய வாழை வாழைப்

பூவெனப் பொலிந்த வோதி வோதியின்
னளிச்சினை வேங்கை நாண்மலர் நாண்மலர்க்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கு சுணங்குதிர்ந்
தியாணர்க் கோங்கின் அவிர்முகை முகையெனப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்டோட்டுப் பெண்ணை வளர்த்த நுங்கி
னின்செறி நீர்தரும் எயிற்றின்'. (உ-ம்)

77. உருவகவணி உவமையினின்றும் எவ்வாறு வேறு படும்? (பி. ஏ. 65)

விடை முன்னர்க் கண்டு கொள்க.

**தீவக அணி**

78. தீவகவணியின் இலக்கணமும் அதன் வகையும் கூறி, வேறு எவ்வணிகளோடு அது கலந்து வரும் என்பதையும் காட்டுக. (வி. 49)

79. தீவகவணியை விளக்கி, அது எவ்வெவ்வாறு விரியும் எனக் காட்டுக. (பி. ஏ. 63)

80. மாலாதீவகம்—விளக்கி அதன் உதாரணக் கருத்தினை வரைக. (வி. 43)

ஒருசொல் குணம், தொழில், சாதி, பொருள் என்ற நான்கனுள் யாதேனும் ஒன்றனைக்குறித்து ஒரு கவியிலே ஓரிடத்தினின்று பலவிடத்தும் சென்று பொருளை விளக்குமாயின் அது தீவக அணியாகும். அது கவியின் முதல், இடை, கடை என்னும் மூன்றிடங்களுள் யாதேனும் ஒன்றிற் பொருந்தி நிற்கும். ஓரிடத்தில் இருக்கும் விளக்கானது பல இடங்களிற்சென்று பொருள்களை விளக்குதல் போல இவ்வணியும் விளக்குதலால் தீவகம் (தீபகம்—விளக்கு) எனப்பட்டது. முதல், இடை, கடை என்னும் மூவிடத்தும் நிற்றல் பற்றி இவ்வணி முதனிலைத் தீவகம்,

இடை நிலைத்தீவகம், கடைநிலைத்தீவகம் என மூவகைப் படும். இம்மூன்றினோடும் குணம் முதலிய நான்கினையும் தனித்தனி உறழப் பன்னிரண்டாகும். முதனிலைக் குணத் தீவகம், முதனிலைத் தொழிற்றீவகம்......என இவ்வாறு வரும். மேலும் இவ்வணி மாலை, விருத்தம், ஒரு பொருள், சிலேடை என்னும் நான்கனோடு கூடியும் வரும்.

"சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்பும்—திருமான
ஆரந் தழுவுந் தடந்தோ ளகளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு."

இதில் 'சரியும்'என்னும் வினைச்சொல் முதல்நின்று, சங்கு, வரி, வம்பு என்பவற்றோடு சேர்ந்து பொருள் விளக்கிய தால் இது முதனிலைத் தொழிற்றீவகமாகும்.

**மாலைத்தீவகம் : (மாலாதீவகம்)**

"மனைக்கு விளக்க மடவாண் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வற்குக் கல்வியே கல்விதனக்
கோதிற் புகழ்சா லுணர்வு."

இதில் விளக்கம் என்னும் சொல் மாலைபோலத் தொடர் புடையதாய் எல்லா வாக்கியங்களோடுஞ் சென்று பொருள் விளக்கியதால் இது மாலா தீவகமாகும்.

**பின்வருநிலையணி**

81. பின்வருநிலையணி இன்னதென விளக்கி அதன் வகைகளைக் காட்டி ஒன்றற்கு உதாரணம் தருக. (வி. 51)

82. பின்வருநிலையணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (பி. ஏ. 61)

ஒரு செய்யுளிலே முன்வந்த சொல்லும் பொருளும் தனித்தனியாயினும் கூடியாயினும் பல இடங்களில் பல இடங்களில் பின்வருமாயின் அது பின்வருநிலையாகும். எனவே அது சொற் பின்வருநிலை, பொருட் பின்வருநிலை, சொற்பொருட் பின்வருநிலை என மூவகைப்படும் என்பது பெற்றும்.

'வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணுண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.' (உ-ம்)

இப்பாடல் சொற்பொருட் பின்வருநிலைக்கு உதாரணமாகும். இதில் முன்னர் வந்த வைகல் என்னும் சொல்லும் அதன் பொருள்களாகிய நாள், கழிதல் என்பனவும் பின்னரும் வந்துள்ளன.

**முன்னவிலக்கணி**

83. முன்னவிலக்கணியினை விளக்கி அதன் வகையையும் விரியையும் குறிப்பிடுக. (வி. 54)

84. முன்னவிலக்கணி இன்னதென்று காட்டி உதாரணம் தருக. (வி. 54; எம். ஏ. 64)

85. விலக்கணி எவ்வெவ்வணிகளோடு சேர்ந்து வரும்? ஒன்றனை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக. (வி. 57; பி. ஏ. 64)

86. முயற்சிவிலக்கு, கையறல்விலக்கு—இவற்றை விளக்குக. ஒன்றற்கு உதாரணம் தருக. (எம். ஏ. 56)

87. துணைசெயல்விலக்கு—எடுத்துக்காட்டு தந்து விளக்குக. (எம். ஏ. 49)

88. காரணவிலக்கு, ஏது விலக்கு—இரண்டிற்கும் உள்ள வேறுபாடென்ன? உதாரணம் தருக. (வி. 49)

89. வாழ்த்து விலக்கணியின் இயல்பென்னே? அதன் உதாரணக் கருத்தை விளக்குக. (வி. 40)

90. உடன்படல் விலக்கு—உதாரணம் தருக. (வி. 34)

91. 'நீண்ட மதர்விழியென் நெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை இவர்க்கு'—
இதிலுள்ள அணி கூறி விளக்குக. (எம். ஏ. 52)

*குறிப்பினாலே ஒன்றினை மறுத்து மேன்மை தோன்றச் சொல்லுவது முன்னவிலக்கணியாகும். விலக்கணி, தடைமொழியணி, உட்கோளணி, எதிர்மறையணி என்பன இதனது வேறு பெயர்களாகும்.*

*இவ்வணி இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலங்களையும் பற்றிவரும். மேலும் அவ்வலங்காரம் பொருள், குணம், காரணம், காரியம் என்பவைகளோடு புணர்ந்தும் வரும்.*

*வன்சொல்விலக்கு, வாழ்த்துவிலக்கு, தலைமைவிலக்கு, இகழ்ச்சிவிலக்கு, துணைசெயல்விலக்கு, முயற்சிவிலக்கு பரவசவிலக்கு, உபாயவிலக்கு, கையறல்விலக்கு, உடன்படல்விலக்கு, வெகுளிவிலக்கு, இரங்கல்விலக்கு, ஐயவிலக்கு, வேற்றுப் பொருள்வைப்புவிலக்கு, சிலேடைவிலக்கு, ஏதுவிலக்கு என்பனவும் அதன் வகைகளாகும்.*

*மேற்கூறியவற்றுள் ஒருசில வருமாறு:*

*காரணவிலக்கு*

*காரணத்தை விலக்கிக் காரியத்தைக் கூறுவது காரணவிலக்காகும்.*

'மதரரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட
அதரந் துடிப்ப வணிசேர்—நுதல்வியர்ப்ப
நின்பா ணிகழ்வனகண் டஞ்சாதா லென்னெஞ்சம்
என்பால் தவறின்மை யால்.' (உ-ம்)

இதில் அச்சத்திற்குக் காரணமான குற்றம் தன்னிடத்து இல்லாமையைக் கூறியதனால் இது காரணவிலக்காயிற்று.

ஏதுவிலக்கு

ஏதுவிலக்கென்பது காரணத்தால் விலக்குவதாகும்.

'பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால்—நீதி
யடுத்துயர்ந்த சீர்த்தி யனபாயா! யார்க்கும்
கொடுத்தி யெனக் கொள்கின்றி லேம்.' (உ-ம்)

இதில் தாமே கவர்தலால் என்னும் ஏதுவினால் கொடுக்கின்றாய் எனச்சொல்லி, கொள்ளுதல் விலக்கப்பட்டது.

வாழ்த்து விலக்கு

வாழ்த்தி வைத்து விலக்குவது.

'செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க—வெல்லும்
அடற்றேர் விடலை யகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்கவி யாம்.' (உ-ம்)

இதில் வாழ்த்துக் கூறும் வாய்பாட்டால் தலைவி தன் நிலையைக் கூறித் தலைவன் செலவை விலக்கியமை காண்க.

துணைசெயல் விலக்கு

துணைசெய்வார் போலக் கூறி விலக்குவது.

'வினைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே—வினைதேன்
புடையூறு பூந்தார்ப் புனைகழலாய் போக்கிற்
கிடையூறு வாராம லேகு.' (உ-ம்)

இதில் நீ செல்வதானால் எமது சுற்றத்தின் புலம் பொலி கேட்கு முன்னமே உன் பயணத்திற்குத் தடை வராதபடி செல் என்று அதற்குத் துணை செய்யும் வாய் பாட்டால் விலக்கியதனால் இது துணை செயல் விலக்கா யிற்று.

உடன்படல்விலக்கு

உடன்பட்டார் போல விலக்குவது.

'அப்போ தடுப்ப தறியேன் அருள்செய்த
இப்போ திவளு மியைகின்றாள்—தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
இருளோ நிலவோ வெழும்.' (உ-ம்)

இதில் தலைவன் செலவிற்குத் தலைவி உடன்பட்டது போன்று கூறித் தலைவிக்கு அப்பிரிவுக்காலத்தில் இருளினு லும் நிலவினாலும் உண்டாகும் பெருந்துயரை எடுத்துக் காட்டி அவன் செலவை விலக்குதலால் இது உடன்படல் விலக்காயிற்று.

கையறல்விலக்கு

தத்தமக்கு வேண்டிய பொருள் மேல் முயலும் ஒழுக்க மின்மை தோன்றக் கூறுவது கையறல் விலக்காகும்.

குண விலக்கு

'நீண்ட மதர்விழியென்............இவர்க்கு' என்பதில் தலைமகளாகிய பண்பியை உடன்பட்டு, அவளது மென்மை

*யாகிய பண்பை இல்லையென விலக்கினமையால் இது குண விலக்கணியாகும்.*

**வேற்றுப்பொருள்வைப்பணி**

92. வேற்றுப்பொருள்வைப்பணி—இதன் இலக்கணத்தை வரைவதோடு, வகைகளையும் எடுத்து எழுதுக. *(வி. 46, 62; எம்.ஏ.49)*

93. ''முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப் பின்னொரு பொருளை யுலகறி பெற்றி ஏற்றி வைத் துரைப்பது''—இது எவ்வணிக்கு இலக்கணமாம்? அவ்வகையினை எடுத்துக்காட்டுடன் விளக்குக. *(பி. ஏ. 61)*

94. வேற்றுப்பொருள்வைப்பணி இன்னதென்று விளக்கி உதாரணம் தருக. **(வி. 51)**

*அல்லது*

வேற்றுப்பொருள் வைப்பணியின் இலக்கணத்தினை எடுத்துக் காட்டுத் தந்து விளக்கி எழுதுக. *(பி. ஏ. 64)*

95. கூடாவியற்கை—விளக்கி உதாரணக் கருத்தினைத் தருக. *(வி. 43)*

*முன்பு ஒரு பொருளின் தன்மையைக் கூறிப் பின்னர் அதனை உறுதிப்படுத்துதற்கு வேறொருபொருளை உலகறி யக் கூறுவது வேற்றுப்பொருள் வைப்பணியாகும்.*

*முழுவதுஞ்சேறல், ஒருவழிச்சேறல், முரணித் தோன் றல், சிலேடையின் முடித்தல், கூடாவியற்கை, கூடுமி யற்கை, இருமையியற்கை, விபரீதப்படுத்தல் என வேற் றுப்பொருள் வைப்பணி எட்டுவகைப்படும்.*

மேற் கூறியவற்றுள் கூடாவியற்கை என்பது இயல்புக்கு மாறாக ஒன்றற்குச் சொல்லப்பட்ட தன்மை பின்வைக்கும் பொருளால் முடிக்கப்படுவது ஆகும்.

'ஆர வடமும் அதிசீத சந்தனமும்
ஈர நிலவு மெரிவிரியும்—பாரில்
துதி வகையான் மேம்பட்ட துப்புரவுந்தத்தம்
விதி வகையான் வேறு படும்.' (உ-ம்)

இதில் முத்துமாலை, சந்தனம், நிலவு என்பவைகளிலே எரிவிரிதல் இயல்புக்கு மாறான தன்மை. இது 'தத்தம் விதிவகையான் வேறுபடும்' எனப் பின் வைக்கப்பட்ட பொருளால் முடிக்கப்பட்டது.

96. ஆரவடமும்......வேறுபடும்'—இதன் அணி கூறித் தெளிவாக்குக. (வி. 43)

விடையினை மேலே கண்டு கொள்க.

97. 'தலையிழந்தான்..........விபரீதமாம்'—இது எதற்கு இலக்கியமாய் எடுத்தாளப்பட்டது? விளக்கி எழுதுக. (வி. 49)

'தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலை புரிந்தான் குற்றங் கடிந்தான்—உலகில்
தனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற்றப்பாம்
வினையும் விபரீதமாம்.'

என்னும் பாடல் விபரீதப்படுத்தல் என்பதற்கு இலக்கியமாகும். இதில் தலையிழந்தவன் சிருட்டித்தான் என்பதும் பிதாவைக் கொன்றவன் குற்றத்தின் நீங்சின்ஞன் என்பதும் விபரீதப் பொருள். அது பின் சொல்லப்பட்ட பொருளால் சாதிக்கப்பட்டது. அதாவது இயற்கைக்கு மாறுய்

விபரீதமாகச் சொல்லப்பட்ட பொருள் பின்சொல்லப்படும் பொருளால் சாதிக்கப்படுவது விபரீதப்படுத்தலாகும்.

**வேற்றுமையணி**

98. வேற்றுமையணியின் இலக்கணம் கூறி உதாரணம் தருக. (வி. 53)

99. வேற்றுமையணியை விளக்கி, அது எவ்வெவ்வாறு விரியும் எனக் காட்டுக. (பி. ஏ. 63)

100. வேற்றுமையணியின் இலக்கணத்தை விளக்குக. (பி. ஏ. 65)

*கூற்றினானுவது குறிப்பினானுவது ஒப்புடைய இருபொருள்கள் தம்முள்ளே வேறுபாடு தோன்ற வருமாயின் அது வேற்றுமை என்னும் அணியாகும். கூற்றென்றது ஒப்புடைய இருபொருட் கண்ணுமுள்ள பொதுத்தன்மையைச் சொற்களாய வெளிப்படையாக அறிவித்தல் ஆகும். குறிப்பென்றது அதனைத் தொடர்ந்து ஊகித்தறிய நிற்றலாகும்.*

*சூத்திரத்தில் 'அதுவே' என்ற மிகையால் அவ்வேற்றுமையணி ஒரு பொருள் வேற்றுமை செய்தலும், இருபொருள்வேற்றுமை செய்தலும், மிகைப்படக் கூறுதலும் என மூன்று வகைப்படும் என்பது பெறப்படும். இம்மூன்றும், கூற்றினால் வருவனவும் குறிப்பினால் வருவனவும் என அறுவகைப்படும்.*

*'சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே*
*நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று*
*மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று*
*மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.'* (உ-ம்)

*இச் செய்யுளில் முன்னிரண்டு அடியிலுள்ள சொற்களால் இரண்டு பொருளுக்கு வெளிப்படையாக ஒப்புமை*

கூறி, பின்பு அவற்றில் ஒன்று மாதர்நோக்கு, மற்றொன்று கூத்தன் வாக்கு என்று இரண்டு பேதம் சொன்னமையால் இது இருபொருள் வேற்றுமைச்சமமாகும்.
மற்றொரு உதாரணச் செய்யுள் வருமாறு:

'மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சிபடுவ கடல்படாக் கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.'

இதில் கச்சி, கடல் என்னும் இருபொருள்களுள்ளே கச்சி கடல் பொருந்துவன எல்லாம் பொருந்தும் எனவும் கடல் கச்சி பொருந்துவன எல்லாம் பொருந்த மாட்டா எனவும் கச்சியாகிய உபமேயத்திற்கு உயர்ச்சியாகியபேதம் கூறப்பட்டுள்ளது.

**விபாவனையணி**

101. விபாவனை அணியின் இலக்கணம் யாது? உதாரணத்துடன் கூறுக.

(வி. 56; எம். ஏ. 54 64)

ஒன்றனைக் கூறுமிடத்து உலகத்தாரால் நன்கு அறியப் பட்ட காரணத்தினை ஒழித்து வேறொரு காரணமாவது இயற்கையிலமைந்த தன்மையாவது குறிப்பினால் வெளிப் படும்படி சொல்லப்படுவது விபாவனையாகும். (குறிப்பின் வெளிப்படல்—சிந்தித்து ஆராய்தலினாலே வெளிப்படுதல்.)

'கடையாமே கூர்த்த கருநெடுங்கண்'. (உ - ம்)

இதில் கூர்மை முதலியவற்றிற்கு நன்கு அறியப்பட்ட காரணங்களாகிய கடைதன் முதலியன இல்லைஎன ஒழித்த லால், கண் முதலியவைகளிலே அவை இயல்பில் அமைந்

தன எனக் கற்பிக்கப்படுவதால் இது இயல்பு விபாவனை ஆகும்.

102. 'கடையாமே......கண்' இது எவ்வணிக்கு எடுத்துக் காட்டப்பட்டது? (எம். ஏ. 52)

*விடை முன்னர்த் தரப்பட்டுள்ளது*

**ஒட்டணி**

103. ஒட்டணியின் இலக்கணம் கூறி, அதன் வகைகளில் ஒன்றற்கு உதாரணம் தருக. (எம். ஏ. 56)

104. ஒட்டணி—இதனை எடுத்துக் காட்டுடன் விளக்குக. (எம். ஏ. 48)

*அல்லது*

ஒட்டு—இலக்கணம் என்ன? (எம்.ஏ. 52; பி. ஏ. 65)

*அல்லது*

ஒட்டணியின் இலக்கணத்தை உதாரணத்துடன் தருக. (எம். ஏ. 55)

105. ஒட்டணி—விளக்கி வகைகளையும் குறிக்க. (வி. 56)

106. ஒட்டணியின் வகைகளைக் கூறி ஒன்றற்கு உதாரணம் தருக. (வி. 53)

107. ஒட்டணியின் இலக்கணமும் அதன் வகைகளும் கூறி, அவற்றுள் ஒன்றற்கு இலக்கியம் காட்டுக. (வி. 62)

108. ஒட்டு என்றால் என்ன? அதன் வேறு பெயர்கள் யாவை? (பி. ஏ. 63)

109. ஒட்டணியின் இலக்கணமும் அதன் வகைகளும் அதற்குப் பிறர் வழங்கும் பெயர்களும் எழுதுக. (வி. 49)

புலவன் தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனைப் புலப்படுத்த அதுபோன்ற பிறிதொன்றினைச் சொல்லுதல் ஒட்டணியாகும்.

இதனைப் பிறிது மொழிதல் எனவும் உவமப்போலி எனவும் நுவலாநுவற்சி எனவும் சொல்வாரும் உளர். இதனை முதனூலார் சமசோக்தி என்பர். இவ்வணி, கூறு கின்ற பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிதலும் அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதலும் அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதலும் அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதலும் என நான்கு வகைப்படும்.

"வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகு—நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு". (உ - ம்)

இது அடையும் பொருளும் அயல்படமொழிதலுக்கு உதாரணமாகும். விசேடணமாகிய அடைமொழியும் அதனால் விசேடிக்கப்பட்ட விசேடியமும் வேறுபடச் சொல்வது அடையும்பொருளும் அயல்பட மொழிதலாகும். இப் பாட்டில் கவி சொல்லக் கருதி மறைத்த பொருள் தலைவியைப் பிரிந்து பரத்தையை விரும்பிச் செல்லும் தலைவன் எனவும் அதனை வெளிப்படுத்தற்குச் சொல்லப்பட்ட பொருள் தாமரைப்பூவைப் பிரிந்து குவளைப் பூவை விரும்பிச் செல்லும் வண்டு எனவும் அதுவே விசேடியம் எனவும் 'வெறிகொ ளினச் சுரும்பு' முதலியன விசேடண மொழிகள் எனவும் கொள்ளவேண்டும். 'வெறிகொளினச் சுரும்பு மேய்ந்ததோர் காவி' என்பது பலராலும் அநுபவித்து விடப்பட்ட பரத்தையாகும். 'குறைபடுதேன்' என்பது அப்பரத்தை மாட்டுள்ள குறைவாகிய இன்பமாகும்.

(தாமரை—தலைவி. நிறைமது—தலைவிமாட்டுள்ள நிறைந்த இன்பம். வண்டு—தலைவன்.)

110. "வெறிகொளினச் சுரும்பு......வண்டு"—இதன்கண் ஒட்டணி அமைந்துள்ளவற்றை விளக்குக. (வி.61)

விடை முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

**அதிசயவணி**

111. அதிசயவணியின் இலக்கணமும் வகைகளும் எழுதுக, (எம். ஏ. 49)

112. அதிசயவணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (பி. ஏ. 61)

113. அதிசய அணியின் வகைகளைக் கூறி ஒன்றற்கு உதாரணம் தருக. (வி. 61)

கவி தான் கருதிய ஒரு பொருளின் அழகினை உவந்து சொல்லும்போது, உலகின் எல்லை கடவாது அறிஞர்கள் வியக்கும்படி தோன்றுவது அதிசயவணியாகும். இவ்வணி, பொருள், குணம், தொழில், ஐயம், திரிபு, துணிவு என்னும் வகையினையுடையதெனத் தோன்றும் நிலைமையை உடையது.

'திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும்—அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையார் பூந்துகிலா மென்று'. (உ - ம்)

இச் செய்யுளில் நிலாவைப் பாலென்றும் வெண்டுகி லென்றும் மயங்குதலாகிய திரிபுணர்ச்சி வகையால் நிலவு சிறப்பிக்கப்பட்டதால் இது திரிபதிசயமாகும். திரிபதிசய மென்பது திரிபுணர்ச்சி வகையால் உயர்ந்தோர் வியப்பக் கூறுவதாகும்.

**ஏதுவணி**

114. ஏதுவணியின் வகைகளும் அவை தோன்றும் காரணங்களும் தருக. (வி. 52)

ஏதுவணியென்பது இதனுல் இது நிகழ்ந்தது என ஒரு பொருளின் நிகழ்ச்சிக்குரிய காரணத்தை விதந்து கூறுதலாகும். அது காரகவேது, ஞாபகவேது, அபாவவேது, சித்ரவேது என நான்கு வகைப்படும். ஒன்றன் செய்கையை ஏதுவாகக் கூறுவது காரகவேதுவாகும். அது கருத்தா, பொருள், கருமம், கருவி, ஏற்பது, நீக்கமெனும் ஆறுபொருள்களின் காரணமாகத் தோன்றும். ஒன்றன் அறிவிப்பை ஏதுவாகக் கூறுவது ஞாபகவேதுவாகும். ஒன்றனது இல்லாமையை ஏதுவாகக் கூறுவது அபாவவேதுவாகும். அபாவம் என்பது ஒன்றனது இல்லாமை என்று பொருள்படும். என்றுமபாவம், இன்மையதபாவம், ஒன்றினென்றபாவம், உள்ளதன்னபாவம், அழிவுபாட்டபாவம் என அது ஐந்து வகைப்படும். சித்ரவேது என்பது ஆச்சரியமான காரணத்தை ஏதுவாகக் கூறுவதாகும். அது தூரகாரியம், ஒருங்குடன்ருேற்றம், காரணமுந்துறாஉங்காரியநிலே, யுத்தம், அயுத்தம் என ஐவகைப்படும். மேலும் ஏதுவணி ஐயம் முதலிய காரணமாகவும் வரப்பெறும்.

115. காரகவேது என்னும் அணி எவை காரணமாகத் தோன்றும்? அவற்றுள் ஒன்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக. (பி. ஏ. 64)

காரணம் முன்னர்க் கண்டுகொள்க.

"மலேயி னலேகடலின் வாளரவின் வெய்ய
தலேயிற் பயின்ற தவத்தாற்—றலேமைசேர்
அம்மாதர் புல்லுமபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்".

என்னும் பாடலில் 'எம் மாதவம்' என்பிழித்தவம்" செயப்படுபொருள் புணர்தலைச் செய்வித்துக் காரகமாய் நிற்றலாலும், புணர்தற்கு ஏதுவாய் நிற்றலாலும் இது கருமகாரகவேதுவாகும்.

116. அபாவம் என்றால் என்ன? விளக்குக. (பி. ஏ.53)
117. அபாவவேதுவின் பகுதிகளைத் தந்து இரண்டினை விளக்குக. (வி. 53)

அபாவவேதுவின் பகுதிகளை மேற் கேள்விக்குரிய விடையில் கண்டுகொள்க.

விளக்கம் :

1. என்றுமபாவம்—எக்காலத்தும் இல்லாமையாகும்.

2. உள்ளதனபாவம்—ஓரிடத்திலே ஒருகாலத்திலே உள்ள பொருளினதின்மை ஏதுவாக வருவது.

118. உள்ளதனபாவம் தன்மையினை விளக்கி எழுதுக. (வி. 49)

விடை மேலே தரப்பட்டுள்ளது.

119. சித்திரவேது வகையை எடுத்தெழுதுக. (வி. 46)

விடை முன்னர்த் தரப்பட்டுள்ளது.

120. தூரகாரியவேதுவின் தன்மையினை விளக்கி எழுதுக. (வி. 49)

தூரத்திலே நிகழுங் காரியத்தினையுடைய ஏது தூர காரியவேது.

121. யுத்தம்—பொருள் தருக. (வி. 51)

காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்வது யுத்தம்.

122. 'தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள்—அம்பு

பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென் றிருண்ட மனம்'—
அணி இன்னதெனப் புலப்படுத்துக. (வி. 55)

*இப்பாட்டில் அம்புதைத்தலாகிய காரணத்தின் முன் புண் மிகுதலாகிய காரியமும் மாலை வருதலாகிய காரணத்தின் முன் இருளுதலாகிய காரியமும் நிகழ்ந்தனவாகக் கூறப்படுதலின் இது காரண முந்துறாஉங் காரியநிலை என்னும் சித்ரவேது அணியாகும்.*

**நுட்பவணி**

**123.** நுட்பவணியின் இலக்கணம் எழுதி உதாரணம் ஒன்று தருக. (வி. 46; எம். ஏ. 64)

**124.** நுட்ப அணியினை விளக்குக. (வி. 61, 63; பி. ஏ. 65)

*பிறர் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாகக் கூறாது குறிப்பினால் அல்லது தொழிலினால் அரிதாக நோக்கும் தன்மையினை உடையது நுட்பவணியாகும்.*

*'காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதைய ராயம் பிரியாத—மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு'.* (உ-ம்.)

*இதில் பாங்கியர் நடுவில் நின்ற தலைவி அங்கு வந்த தலைவன் காணப் பகலவனை நோக்கி உடனே மேற்றிசையையும் பார்த்தலாகிய செய்கையால் அவனை இரவில் வருமாறு குறிப்புக் காட்டினமையின் இது குறிப்பு பற்றி வந்த நுட்பவணியாகும்.*

**இலேசவணி**

**125.** இலேசவணியின் இலக்கணம் தருக. (வி. 46, 61, 63)

126. இலேசவணியின் இலக்கணம் கூறி உதாரணம் தருக. (வி. 49; எம். ஏ. 48, 64)

127. நுட்பவணி, இலேசவணி, இவற்றை விளக்கி ஒற்றுமை வேற்றுமை தருக. (வி. 51; பி. ஏ. 64)

*ஒருவன் தான் கருதியதை வெளிப்படுக்கும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றினால் நிகழ்ந்தனவாக மறைத்துக் கூறுதல் இலேசவணியாகும்.*

*'கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்*
*மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லு வராற்*
*பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்ந்*
*தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.'* (உ-ம்.)

*இச் செய்யுளில், சோழன் ஒரு குதிரையின் மேலேறி உலாவருகின்ற அழகைக் காணுமளவில் தானடைந்த காதல் மிகுதியாலாகிய தனது கண்ணீர்ப் பெருக்கைச் சேனை வருதலால் மேலெழும்பிய தூளி படிதலால் ஆகிய தென்று மறைத்துக் கூறப்பட்டுள்ளது.*

128. சத்துவத்தின் இலக்கணம் என்ன? (எம். ஏ. 52)

*சத்துவமாவது உள்ளங் கருதியது புலனாக்கும் குணங்களாகும். அவையாவன: சொற்றளர்வு, மெய்விதிர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய்வெதும்பல், மெய்ம்மயிரரும்பல் முதலியனவாகும். பொருளிலக்கணத்தில் இவை மெய்ப்பாட்டின்பாற்படும். இவைகளால் பெறப்படும் அணி இலேசவணியாகும்.*

129 இலேசத்தின்பாற்படுத்திக் கூறப்படும் அணிகள் யாவை? அவை வேறு எவ்வணிகளோடு தொடர்புடையனவாய் மாறுபட்டுள்ளன? விளக்குக. (வி. 49)

புகழ்வது போலப் பழித்தல், பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தல் என்ற இரண்டும் இலேசத்தின்பாற்படுத்திக் கூறப்படும் அணிகளாகும். இவை முறையே மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி என்ற அணிகளோடு தொடர் புடையனவாய் மாறுபட்டுள்ளன.

புகழ்வதுபோலப் பழித்தல்—

ஒன்றனையே புகழ்ந்தாற்போலப் பழிப்பது.

மாறுபடு புகழ்நிலை—

ஒன்றனைப் புகழ அது மற்றொன்றிற்குப் பழிப் பாய்த் தோன்றுவது.

பழிப்பதுபோலப் புகழ் புலப்படுத்தல்—

ஒன்றனையே பழித்தாற் போலப் புகழ்வது.

புகழாப் புகழ்ச்சி—

ஒன்றனைப் பழிக்க அது வேறொன்றற்குப் புக ழாய்த் தோன்றுவது.

130. பழிப்பதுபோலப் புகழ் புலப்படுத்தலாகிய இலேசத்தை யும் புகழாப்புகழ்ச்சியையும் விளக்கி அவற்றின் வேறு பாட்டைப் புலப்படுத்துக. *(பி. ஏ. 63)*

131. மாறுபடு புகழ்நிலை என்றால் என்ன? இதற்கும் புகழ்வது போலப் பழித்திறம் புனைதலுக்கும் உள்ள வேறுபாடு யாது? *(பி. ஏ. 63)*

விடைகள் முன்னர்த் தரப் பட்டுள்ளன.

132. 'மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாயல் தளராமல் தாங்குமால்—சேயிழாய்!
போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்'.

'இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லும்—ஒருவர்

படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத் தனவே யன்றோ துயர்'—
இவற்றில் அமைந்துள்ள அணிகளை எழுதி, அவற்றின்
வேறுபாட்டைப் புலப்படுத்துக. (வி. 45)

'மேய கலவி.........விடலை தான்' என்னும் பாடலில் அறிவழியவேண்டிய புணர்ச்சிக் காலத்திலே அறிவழியாமை தோன்றச் 'சாயல் தளராமல் தாங்குமால்' எனப் புகழ்ந்தமையால் இது புகழ்வதுபோலப் பழித்தலாகும்.

'இரவறியா.........துயர்' என்னும் பாடலில் செல்வர்களைச் சார்ந்து இரந்து அவர்பின் சென்று நின்று குறையுற்று வருந்தும் யாசகன் ஒருவன் தன்னை நிந்தித்ததற்கு மானைப் புகழ்தலால் இது மாறுபடு புகழ்நிலை அணியாகும்.

நிரனிறை—ஆர்வமொழி

133. நிரனிறை, ஆர்வம்—இவ்வணிகளை விளக்கி வரைக.

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி முறையே பொருள் கொள்வது நிரனிறையாகும். மேலும் மொழி மாற்றிப் பொருள் கொள்ளுதலுமுண்டு. இதனை அடைவணி என்று ஒருசிலர் வழங்குவர்.

'ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு.' (உ-ம்)

இதில் வெஃகா, பாடகம், ஊரகம் என்னும் திருமால் திருப்பதிகளிலே திருமால், நின்றான், இருந்தான், கிடந்தான் என்பவற்றை முறையாகக் கொள்ள அமையாது, மொழிமாற்றி, ஊரகத்தில் நின்றான், பாடகத்தில் இருந்

தான், வெஃகாவில் கிடந்தான் எனக் கொள்ளக் கிடக்கின்றது.

ஆர்வமொழி அல்லது மகிழ்ச்சியணி என்பது உள்ளிடத்துத் தோன்றிய ஆர்வம்பற்றி நிகழும் மொழி மிகத் தோன்றும்படிக் கூறுவதாகும்.

'சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா—மெல்ல
நினைவோ மெனினெஞ் சிடம்போதா தெம்பால்
வினைதாராய் வந்ததற்கு மாறு.' (உ—ம்)

இப்பாடல் மனத்தில் நிகழ்ந்த அன்பைப்பற்றிக் கூறுகின்றது.

**சுவையணி**

134. மெய்ப்பாடெட்டெவை? அவற்ருல் நடக்கும் அணி எது? (வி. 53, 56)

135. சுவையணியியலும் இடங்களை விளக்குக. (வி.52)

136. சுவை வகைகளைத் தருக. தொல்காப்பியர் இவைகளுக்குக் கொடுக்கும் பெயர்கள் யாவை? (வி. 48)

உள்ளத்திலே நிகழும் தன்மை வெளியிற் புலப்பட்டு விளங்கும்படி, வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம் அவலம், உருத்திரம், நகை, என்னும் எட்டு வகைப்பட்ட மெய்ப்பாட்டினுலும் நடப்பது சுவையணியாகும். தொல்காப்பியர் இவைகளை முறையே, பெருமிதம், அச்சம், இளிவரல், மருட்கை, உவகை, அழுகை, வெகுளி, நகை என்பர்.

"கைநெரித்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தாள்." (உ - ம்)

இது அச்சச் சுவைக்கு உதாரணம்.

**பரியாயவணி**

137. பரியாயவணியினை உதாரணம் தந்து விளக்குக
*(வி. 48, 53, 62; எம். ஏ. 48, 55; பி. ஏ. 61)*

138. பரியாயவணி, ஒட்டணி—ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக. *(வி. 50, 54; எம். ஏ. 51)*

139. பரியாய அணிக்கும் ஒட்டணிக்கும் உள்ள வேறு பாட்டைப் புலப்படுத்துக. *(வி. 63)*

*பரியாயவணி என்பது தான் கருதியதனைக் கூருது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறுவதாகும். பிரிதினவிற்சி என்பது இதனது வேருெரு பெயராகும்.*

*'மின்னகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து*
*நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ—தன்னிகராம்*
*செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே*
*இந்தீ வரங்கொணர்வல் யான்.'* (உ-ம்)

*இப்பாடலில் தலைமகளைத் தோழி குறியிடத்து நிறுத்தித் தான் பிரிதல் கருத்தை மலர்கொண்டு வருவதாகச் சொல்லி நீங்கினமையில் இது பரியாயவணியாகும்.*

*பரியாயவணி, ஒட்டணி இவ்விரண்டும் தம் பொருளைக் குறியாது பிறிதொன்றைக் குறிப்பதனுல் தம் கருத்தை விளக்குகின்றன. ஆனுல் பரியாயவணி தன் கருத்தைப் பிறிதொரு குறிப்பால் கூறும். ஒட்டணி தன் கருத்தைப் பிறிதொரு உவமையால் கூறும்.*

**சமாயிதவணி**

140. சமாயிதவணி என்பதன் பொருளும், இலக்கணமும் தந்து உதாரணமும் தருக. *(வி. 56)*

**141.** 'அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை—பெருமான்

*அணியாக மாரத் தழுவினு டான்முன்*
*தணியாத வூடல் தணிந்து'—*

இதன்கணுள்ள அணியை இன்னதென இலக்கணத்தோடு பொருத்திக் காட்டுக. (வி. 54)

*சமாயிதவணி என்பது முன்னர் ஒருவனுல் முயலப்பட்ட தொழிலினது பயன், அத்தொழிலாலேயன்றிப் பிறிதொன்றுல் நிகழ்ந்ததாகக் கூறப்படுவதாகும். எளிதின் முடிபணி, துணைப்பேறணி என்பன இதன் வேறு பெயர்களாகும்.*

*'அருவியங் குன்ற' என்று தொடங்கும் பாடலில் சிவன் உமையின் ஊடலைத்தணிக்க முயல்கையில் அவள் வெருவுதலாகிய வேருெரு காரணத்தால் தழுவுதலாகிய காரியம் எளிதில் கைகூடியதாகக் கூறப்பட்டுள்ளது.*

**அவநுதியணி**

142 அவநுதீ—பொருள் தருக. (வி.51)

143. அவநுதியணியின் இலக்கணத்தை எழுதுக.(வி. 46)

144. அவநுதியணி இன்னதென விளக்கி உதாரணம் தருக. (வி.53)

*அல்லது*

அவநுதியின் இலக்கணம் யாது? உதாரணம் தருக. (வி. 56)

*அவநுதி என்ருல் மறுத்துரைத்தல் என்று பொருள்படும். சிறப்பு, பொருள், குணம், இவைகளால் ஆகிய உண்மையை மறுத்துப் பிறிதொன்றுகக் கூறுவதே அவநுதியாகும். அதாவது ஒன்றில் ஒரு தன்மையை நீக்கி மற்ருெரு தன்மையை ஏற்றுவதாகும். இது சிலேடையோடு கூடி வருதலும் உண்டு.*

*"நறைகமழ்தார் வேட்டார் நலனணியு நாணு*
*நிறையு நிலேதளரா நீர்மை—அறநெறிசூழ்*
*செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்*
*வெங்கோப மால்யானே வேந்து."*

*இதில் அரசனேச் சிறப்பித்தற்கண் செங்கோன்மை மறுத்துக் கொடுங்கோன்மை ஏற்றிச் சொல்லப்பட்டது.*

145. வியநிலே யுருவகம், சிறப்பவநுதி—இவற்றை விளக்குக. *(பி. ஏ. 63)*

146. அவநுதி, சமாகிதம்—இவற்றின் இலக்கணம் எடுத்துரைக்க. *(பி. ஏ. 63)*

*விடைகள் முன்னர்க் கண்டுகொள்க.*

**உதாத்தவணி**

147. உதாத்தவணியின் இலக்கணம் கூறி உதாரணம் தருக. *(வி. 45)*

148. *"மண்ணகன்று தன்கிளேயி னீங்கி வனம்புகுந்து*
*பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்றன்—எண்ணிறந்த*
*மீதண்டர் கோன்குலேயும் வெய்யோர் குலைந்தொலேத்*
*தான்*
*கோதண்ட மேதுணேயாக் கொண்டு"*—

அணி புலப்படுத்துக. *(வி. 57)*

149. "வியத்தகு செல்வமு மேம்படு முள்ளமும்
உயர்ச்சி புணர்ந்துரைப்பது"—
இது எவ்வணிக்கு இலக்கணமாம்? அதனே எடுத்துக் காட்டுடன் விளக்குக. *(பி. ஏ.61)*

*'மண்ணகன்று' என்று தொடங்கும் பாடலில் அமைந்துள்ள அணி உதாத்தவணியாகும். உதாத்தம என்றுல்*

பிறிது ஒன்றற்கு இல்லாத சிறப்பு என்று பொருள். அதா வது ஒருவனிடத்துக் காணப்படுகின்ற செல்வமிகுதி அல்லது ஊக்கமிகுதியை வியந்து சொல்வது உதாத்தவணி யாகும். இதனை ஒரு சிலர் வீறுகோளணி என்று கூறுவர். இப்பாடலில் அருச்சுனனது உள்ளத்தின் பெருமை கூறப் பட்டிருப்பதால், இது ஊக்க மிகுதியால் வந்த உதாத்த வணியாகும்.

150. விபாவனை, உதாத்தம்—இலக்கணம் கூறுக.
(பி. ஏ. 63)

விடையினை முன்னர்க் கண்டுகொள்க.

**சிலேடையணி**

151. 1. 'வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே—பண்ணீர்மை
மென்கோல யாழே யிரங்குவன வேல்வேந்தே!
நின்கோ லுலாவு நிலத்து'. (வி. 43)

2. 'சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை—முறையில்
கொடியன மாளிகையின் குன்றமே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள.' (எம். ஏ. 52; வி. 46)

3. 'சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கு
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கு—மீதாம்
அனக மதிதோற்றிக் குமுத மளிக்கும்
தனத னிரு நீதிக்கோன் றான்.' (எம். ஏ. 48)

இவை எவ்வணிகளுக்கு எடுத்துக்காட்டுக்களாம் என் பதைக் காரணத்துடன் கூறுக.

1. இப்பாடல் நியமச் சிலேடைக்கு எடுத்துக்காட்டா கும். பலபொருள்களுக்கு இயையுமாறு சிலேடித்ததைத் தேற்றேகாரம்புணர்த்தி ஒன்றற்கு நியமமாக்குவது நியமச்

சிலேடையாகும். இதில், வெண்ணீர்மை என்பது வெண்மை எனவும், அறிவின்மை எனவும் பொருள்பட்டுச் சிலேடையாய் நின்றவாறும் அது முத்தொன்றிற்கே நியமமாகச் சொல்லப்பட்டவாறும், அதனால் அவனிலத்திலே அறிவின்மை இல்லை என்பது பெறப்பட்டவாறும் காண்க. (கண்ணீர்மை முதலிய சிலேடைகளையும் இவ்வாறே பார்த்தல் வேண்டும்.)

2. இது நியம விலக்குச் சிலேடைக்கு எடுத்துக் காட்டாகும். நியமஞ் செய்து கூறிய சிலேடையை வேறு ஒன்றிற்கும் கூறி அந்நியமத்தை விலக்குவது நியம விலக்குச் சிலேடையாகும். இதில் 'சிறைபடுவ' என்பது சிறகுகளுடையன எனவும், சிறைச்சாலையடைவன எனவும் பொருள்பட்டுச் சிலேடையாய் நின்றது. 'புட்குலமே' என நியமஞ் செய்யப்பட்டு 'தீம் புனலு மன்ன' என அந்நியமம் விலக்கப்பட்டது. 'கொடியன' என்பதையும் இவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

3. இப்பாடல் அவிரோதச் சிலேடைக்கு உதாரணமாகும். முன்னர்க்கொண்ட சிலேடைச் சொற்பொருள்களோடு பின்வருஞ் சிலேடைச் சொற்பொருள்கள் விரோதமுறாமல் இயையத்தொடுப்பது அவிரோதச்சிலேடையாகும். இதில் 'சோதியிரவி' என்பது முதலிய சிலேடைச் சொற்பொருள்களோடு பின்வந்த 'கரத்தா னிரவொழிக்கும்' என்பது முதலிய சிலேடைச் சொற்பொருள்கள் இணங்கி இயைந்து காணப்பெறுகின்றன.

**விசேடவணி**

152. விசேடவணியின் இலக்கணம் என்ன? எடுத்துக் காட்டொன்று தருக. *(எம்.ஏ. 49; பி.ஏ.64)*

153. விசேடவணி, விபாவனையணி—இவை தம்முள் வேற்றுமை விளக்குக. *(வி.54)*

154. விபாவனையணியும் விசேடவணியும்—ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக. (வி. 50)

*குணமும், தொழிலும், சாதியும், பொருளும், உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக, ஒருபொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேடவணியாகும்.*

'கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டம்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற.' (உ-ம்)

*இதில் சோழனுடைய கோபத்தினைக் காட்டும் புருவங் கோடுதல், கண்சிவத்தல் முதலிய குணங்களின் குறைவு காரணமாக அவன் செயற்குவிசேடம் கூறியுள்ளதால் இது குணக்குறை விசேடமாகும்.*

*காரண குறைபாட்டினால் காரியம் உண்டாயிற்று என்று கூறுதல் விசேடவணியாகும். காரணமின்றிக் காரியம் உண்டாயிற்று என்று கூறுதல் விபாவனை அணியாகும்.*

**மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி**

155 மாறுபாடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி—இவற்றின் இலக்கணங்களைத் தெரிவிக்க. (வி. 42)

*அல்லது*

மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி—இவற்றை விளக்கி ஒற்றுமை வேற்றுமையைக் காட்டுக. (வி. 51)

156. மாறுபடு புகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, புகழ்வது போலப் பழித்தல்—இவற்றின் வேறுபாடுகளை விளக்குக. (எம். ஏ. 51)

157. புகழாப் புகழ்ச்சி—இவ்வணியை எடுத்துக்காட்டு தந்து விளக்குக. (எம். ஏ. 49)

*மாறுபடுபுகழ்நிலை*

*சொல்லக் கருதிய பொருளை மறைத்துவிட்டு அதனைப் பழிக்கும்பொருட்டு வேறொன்றைப் புகழ்ந்து உரைப்பது மாறுபடு புகழ்நிலையாகும்.*

*'போதுந் தளிரும் புனைந்து மணம் புணர்ந்து*
*சூதப் பணைதழுவித் தோன்றுமால்—மாதே*
*பலமா தவங்கள் பயின்றதோ பண்டிக்*
*குலமா தவியின் கொடி'.* *(உ-ம்)*

*இங்கே குருக்கத்திக் கொடியைப் புகழும் முகத்தால் தலைவனைக் கரவிற் கூடிய ஒரு தலைவி நிந்திக்கப்படுதல் அறிக.*

*புகழாப் புகழ்ச்சி*

*ஒன்றனைப் பழிக்க அது மற்றொன்றற்குப் புகழாய்த் தோன்றுவது.*

*புகழ்வது போலப் பழித்தல்*

*ஒன்றனையே புகழ்ந்தாற் போலப் பழிப்பதாகும்.*

158. 'போதுந் தளிரும்......கொடி'-இப்பாடலுள் அமைந்த அணியை விளக்குக. (எம். ஏ. 55)

*விடையை முன்னர்க் கண்டுகொள்க.*

**நிதரிசன அணி**

159. நிதரிசன அணி இன்னதென விளக்கி உதாரணம் தருக. (வி. 56)

ஒன்றன் தொழிலால் மற்றொன்றற்கு நன்மையோ தீமையோ விளைவதாகக் கூறுவது. காட்சி அணி, சுட்டணி என்பன இதனது வேறு பெயர்கள். இது புகழ்மை தரிசனம், இகழ்மை நிதரிசனம் என இருவகைப்படும்.

'பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொறாத திறமும்—அறிவுறீஇச்
செங்கமல மெய்மலர்ந்த தேங்குமுத மெய்யசந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது'. (உ-ம்)

இதில் தாமரைப் பூவின் மலர்ச்சியாகிய பயன் பெரியோரிடத்து நன்மை புலப்பட நிகழ்ந்ததாகச் சொல்லப் பட்டிருப்பதால் இது புகழ்மை நிதரிசனமாகும்.

பரிவருத்தனை

160. "சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து"—

இதிலமைந்த அணியினைக் கூறுக. (வி. 48)

இப் பாடலில் அமைந்துள்ள அணி பரிவருத்தனை அணியாகும். பொருள்களில் ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைக்கொண்டனவாகக் கூறுவது பரிவருத்தனை.

இதில் சாயல், நாண் இரண்டையும் கொண்டு நோய், பசலை இரண்டையும் தந்ததாகத் தலைவனைப் பிரிந்த தலைவி கூறுதலின் இது பரிவருத்தனை ஆகும்.

புணர்நிலை

161. 'இருபொருட் கொன்றே புணர மொழிவது புணர் நிலை'—தடித்த எழுத்துச் சொற்பொருளை உதாரணத் தால் விளக்குக. (வி. 46)

162. புணர்நிலையணிக்கு எடுத்துக்காட்டொன்று கூறி, அவ்வெடுத்துக்காட்டில் அவ்வணி அமைந்துள்ளவற்றை விளக்குக. *(வி. 48)*

*புணர்நிலை அணி என்பது, வினையாலும் பண்பாலும் இரண்டு பொருளை ஒன்றாகப் புணர்த்துக் கூறுவதாகும். இது, வினைப்புணர்நிலை, பண்புப் புணர்நிலை என இருவகைப் படும்.*

*'புணர மொழிவது' என்ற மிகையான், இவ்வணி 3—ஆம் வேற்றுமை அதனோடு இயைந்த ஒரு வினை எனப் பொருள்படவரும். அதாவது ஒடு, ஓடு, உடன், ஒருங்கு என்ற ஒருவினை 'ஒடு' என்னும் சொற்பெற்றே இவ்வணி வரும்.*

*பண்புப் புணர்நிலைக்கு உதாரணம்:*

*'பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போதுடனே*
*நீங்காத வெம்மையவாய் நீண்டனவால்—தாங்காதல்*
*வைக்குந் துணைவர் வருமவதி பார்த்தாவி*
*உய்க்குந் தமியா ருயிர்'.* (உ - ம்)

*இதில் தமியாருயிர், மாலைப்போது என்னும் இருபொருளையும் வெம்மையவாய் நீண்டன எனக் குணம்பற்றி ஒரு வாசகத்தான் முடிக்கப் பெற்றுள்ளது.*

163. நிதர்சனம், புணர்நிலை—இவற்றை விளக்குக. *(பி. ஏ. 63)*

*விடையினை முன்னர்க் கண்டு கொள்க.*

**சங்கீரண அணி**

164. *'தண்டுறைநீர் நின்ற தவத்தா லளிமருவு*
*புண்டரிக நின்வதனம் போன்றதால்—உண்டோ*
*பயின்றா ருளம் பருகும் பான்மொழியாய் பார்மேன்!*
*முயன்றான் முடியாப் பொருள்'—*

**இதிலமைந்த அணி இன்னது எனக்காரணங் காட்டி எழுதுக.** **(வி. 49)**

இப்பாட்டலில் அமைந்துள்ள அணி சங்கீரணமாகும் அலங்காரங்கள் பல தம்முள்ளே கலந்து ஓரிடத்திலே வருமாறு சொல்லுதல் சங்கீரணமாகும். சங்கீரணம் என்றால் பலவித சாதி என்று பொருள்படும்.

'தண்டுறை நீர் நின்ற தவத்தால்'—தற்குறிப்பேற்றம்.

'அளி மருவு'—சிலேடை.

'புண்டரிக நின்வதனம் போலும்'—உவமை.

'உளம் பருகும் பான்மொழியாய்'—சுவை.

'முயன்றான் முடியாப் பொருள் உண்டோ'—

வேற்றுப் பொருள் வைப்பு.

165. 'ஒப்புமை யில்லது மையமு முவமையிற்
செப்பிய திறமு முவம வுருவகம்
உருவகத் தடக்கலு முணர்ந்தனர் கொளலே'—
என்பதன் பொருளை விளக்குக. (வி. 53)

ஒப்புமையில்லதையும், ஐயத்தையும் உவமை அணியுள்ளே அடக்கிப் பொது நீங்கு உவமை எனவும், ஐய உவமை எனவும் சொல்லிய தன்மையையும், உவம உருவகத்தினை உருவக அணியுள்ளே அடக்கிச் சொல்லிய தன்மையையும் ஆராய்ந்து அறிந்துகொள்க என்பது இதன் பொருளாகும். அதாவது பொதுநீங்கு உவமை, ஐய உவமை இரண்டும் உவமை இலக்கணத்திற்குக் கூறிய பொதுவிதிக்கு அடங்காதாயினும் அடக்கிக் கொள்க என்றும், அதுபோல உவம உருவகம் என்பது முன்னர் உரு

வகம் செய்ததைப் பின்னரும் உருவகம் செய்தலாமாதலின், அது கூறியது கூறல் என்னும் குற்றமாயினும் அதனை அவறுற்ள்ளே அடக்கிக் கொள்க என்றும் பொருள்படும். மேலும் சூத்திரத்தில், ஐயமும் ஒப்புமையில்லது என்னுது, முறைபிறழ 'ஒப்புமையில்லது மையமும்' எனக் கூறியிருப் பதனல், பொருளணியியலில் சொல்லப்படாது ஒழிந்தவற் றையும் தழுவி இலக்கணம் உரைத்துக் கொள்க என்பது பெறப்படும். அவையாவன: இடத்திற்கு ஏற்ற உவமை யும், காலத்திற்கு ஏற்ற உவமையும், பொருளிற்கு ஏற்ற உவமையும், பண்பிற்கு ஏற்ற உவமையும், சாதிக்கு ஏற்ற உவமையும், மரபிற்கு ஏற்ற உவமையும், பிறவாறு வரும் உவமையும் ஆகும்.

166. 'பொதுநீங்குவமை' இந்நூல் விலக்கு என்பதற்கு உதாரணம் தருக.

அல்லது

ஐயஉவமையும், பொதுநீங்கு உவமையும் வழுவாமா யினும் எவற்ருல் அமைத்துக் கொள்ளப்படும் என்பர்?

பண்பு, தொழில், பயன் காரணமாக ஒன்ருகியும் பல வாகியும் வரும் பொருளோடு பொருளை இயைய வைத்து ஒப்புமை புலப்படக் கூறுவது உவமை அணியாகும் என்பது தண்டி ஆசிரியரது கருத்தாகும். மேற்சொல்லப்பட்ட பொதுவாகிய குணம் ஒன்றும், பொது நீங்கு உவமை, ஐய உவமை, இவை இரண்டிற்கும் இன்மையின் அவை தண்டி ஆசிரியருக்கு விலக்காகும். ஆனல் ஒன்றிளேடு ஒன்று ஒக்கும் பொருளை எடுத்து அவற்றினும் சிறந்தது இது என்ற துணையானே தன்னையே தனக்கு ஒப்புமையாகக் கூறுதலே பொதுநீங்கு உவமையாகலின், அதுவும் உவமை யில் அடங்கப்பெறும். இதுபோன்றே, 'தாமரைகொல்

முகங்கொல்' என்னும் ஐய உவமைக் கண்ணும் தாமரைக்கும் முகத்திற்கும் பொதுவாகியதொரு தன்மை நோக்கி தாமரையோடு முகத்திடை ஐயம் தோன்ற உரைத்தாராகலின், ஐய உவமையின் பாற்படும்.

167. இடமும் காலமும் மரபும் பற்றி வரும் உவமைகளில் இரண்டற்கு உதாரணம் தந்து விளக்குக. (வி. 49)

அல்லது

இடத்திற்கேற்ற உவமை, காலத்திற்கு ஏற்ற உவமை, சாதிக்கு ஏற்ற உவமை—இவற்றுள் இரண்டனை உதாரணத்தோடு விளக்குக. (வி. 47)

இடத்திற்கு ஏற்ற உவமை:

'பரற்பகை யுழந்த நோயோடு சிவணி
மரற்பழுத் தன்ன மறுநீர் மொக்குள்'.

இதில், கடுஞ் சுரத்தில் நடத்தலால் காலில் உண்டாகும் கொப்புளத்திற்கு அவ்விடத்தில் உண்டாகும் மரல் என்னும் கற்றாழைப் பழத்தை உவமை கூறி இருத்தலின், இது இடத்திற்கு ஏற்ற உவமையாகும்.

காலத்திற்கு ஏற்ற உவமை:

"நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலவ மேல்விரித்த தோகை—தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்."

இதில் கார்காலத்திற்குரிய இந்திரகோபமும், காயா மலரும், தோகை விரித்தாடும் மயிலும் ஆகியவற்றை, அக்காலத்தில் தழலில் தோன்றிய புகையை ஊட்டும் கூந்தலை உடைய மகளிரோடு உவமித்துக் கூறுதலின், இது காலத்திற்கு ஏற்ற உவமையாகும்.

*சாதிக்கு ஏற்ற உவமை:*

**'விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்.'**

*இதில் கல்லாத மனித சாதிக்கு விவேகம் இல்லாத மிருக சாதி உவமையாகக் கூறப்பட்டிருக்கின்றது.*

**பாவிகம்**

168. பாவிகம் இன்னதென விளக்கி உதாரணம் தருக. *(வி 51; பி. ஏ. 65)*

169. பாவிகத்துக்கும் பிற அணிகட்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக. *(வி. 53)*

170. 'பிறனில் விழைவோர் கிளையொடுங்கெடுப'—என்பதன் அணி குறித்து எழுதுக. *(வி. 54)*

*பாவிகம் என்பது பாவ சம்பந்தமுடையது என்று பொருள்படும். பாவமாவது கவிஞனுடைய கருத்து. கவிஞனுடைய கருத்தினாலே காப்பியங்களிலே அமைந்து தோன்றும் குணமே பாவிக அணியாகும். இது தொடர்நிலைச் செய்யுள் முழுவதும் நோக்கிக் கொள்ளப்படும் பொதுவான பண்பாகும். ஏனைய அணிகள் தனிநிலைச் செய்யுளில் கொள்ளப்படும் சிறப்பான பண்பாகும்.*

*'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப*
*பொறையிற் சிறந்த கவச மில்லை*
*வாய்மையிற் கடியதோர் வாளியில்லை'* (உ - ம்)

*'பிறனில்விழைவோர்......கெடுப' என்பது இராமாயணத்திலும், 'பொறையிற்........கவசமில்லை' என்பது பாரதத்திலும், 'வாய்மையிற்...யில்லை' என்பது அரிச்சந்திர*

சரித்திரத்திலும் அமைந்த பொதுத்தன்மைகள் ஆகும். இவை தனித்தனி ஒவ்வொரு நூலிலும் பரந்து காணப் படுதலின் பாவிகமாயிற்று.

குறிப்பு:

எல்லா அணிகளும் ஒரு பாட்டானே உணரப்படுவன ஆதலாலும் பாவிகம் பல பாட்டால் அமைந்து ஒரு நூலாலே உணரப்படுவதாதலாலும் ஆசிரியர் பாவிகத்தைப் புறனடையின் பின்னர் வைத்துள்ளார்.

**பிற அணிகள்**

1. தற்குறிப்பேற்றம்

பெயரும் பொருளும், பெயராத பொருளு மென்னும் இருபொருட் கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை யொழியக் கவி தான் கருதிய வேறொன்றினை அவற்றின் கண் ஏற்றிச் சொல்லுவது தற்குறிப்பேற்றமாகும்.

2. தன்மேம்பாட்டுரை

ஒருவன் தன்னைத்தானே புகழ்வது தன் மேம்பாட்டுரை அணியாகும்.

3. ஒப்புமைக் கூட்டம்

ஒருபொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குண முதலாயினவற்றின் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டமாகும். ஒப்புமைக்கூட்டம் என்பது, சமதன்மை உடையவைகளை ஒருங்கு கூட்டுதல் எனப் பொருள்படும். இவ்வலங்காரம், ஒன்றனைப் புகழ்தற் கண்ணும், பழித்தற் கண்ணும் தோன்றும்.

4. விரோதம்

மாறுபட்ட சொல்லானும் பொருளானும் மாறுபாட்டுத் தன்மை விளைவு தோன்ற உரைப்பது விரோத அணியாகும்.

*5. வாழ்த்தணி*

*இன்ன தன்மை உடையர்க்கு இன்னது நிகழ்க என்று கவி தான் கருதியதனை விதிப்பது வாழ்த்தணியாகும்*

*பிற கேள்விகள்*

171. அதிசயவணி, தற்குறிப்பேற்றவணி—இவற்றின் இலக்கணம் கூறுக. *(பி. ஏ. 64)*

172. பொருளணியியலில் சொல்பற்றியும் இலக்கணம் கூறப்படும் அணிகள் யாவை? *(பி. ஏ. 65)*

173. தற்குறிப்பு, பிறிது மொழிதல், இவற்றிடை வேறு பாடு புலப்படுத்துக. *(பி.ஏ.65)*

174. பல அணிகளின் அடிப்படையாக உவமை அமைந் திருத்தலை விளக்குக. *(பி.ஏ. 65)*

175. நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, உதாத்தம் என்னும் அணிகளை எடுத்துக்காட்டுகள் கொண்டு பொருத்திக் காட்டி விளக்குக. *(எம். ஏ. 63)*

176. நுட்பம், விபாவனை, விருபகவுருவகம், இலேசம், முன்னவிலக்கு—என்னும் இவ்வணிகளை எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்குக. *(எம். ஏ. 64)*

177. ஒட்டணி, இலேசவணி, நுட்பவணி, மாறுபடு புகழ் நிலையணி — இவைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைப் புலப்படுத்துக. *(எம். ஏ. 65)*

*விடைகளை முன்னர்க் கண்டு கொள்க.*

# 2. அகப்பொருள் விளக்கம்

**பாயிரச் செய்தி**

ஆக்கியோன் பெயர்—நாற்கவிராச நம்பி.

வழி—தொல்காப்பியத்தின் வழி.

எல்லை—சார்பு நூல்.

நூற் பெயர்—அகப்பொருள் விளக்கம்.

யாப்பு—தொகுத்துயாத்தல்.

நுதலிய பொருள்—அகப்பொருள்.

கேட்போர்—கற்று வல்லோர்.

பயன்—வீடு பேறு.

காலம்—பாண்டியன் குலசேகரன் காலம்.

களம்—அறிவோரவைக்களம்.

காரணம்—கிளவிகளை அடைவுறக் கோத்தல்.

**அகப்பொருள்**

1. அகப்பொருளின் பகுதிகளும் அது பாடலுட் பயிலும் முறையும் தெளிவு படுத்துக.

(வி. 54)

அல்லது

அகப்பொருளின் பிரிவுகளை விளக்கி அப்பொருள் சொல்லப்படுந் திறனுந் தருக. (வி. 53)

அகப்பொருள் கைக்கிளையும் ஐந்திணையும் பெருந்திணையும் என எழியல்பினை உடைத்தாம். அவ்வகப்

பொருள், இல்லதும் (புனைந்துரை) உள்ளதுமாகிய (உலகியல்) இரண்டு கூறுபாட்டானும் பழைய நெறி பிழையாமற் கூறப்படும்.

கைக்கிளை என்பது ஒருதலைக் காமம் ஆகும். அதாவது ஒரு மருங்கு நிகழும் கேண்மை ஆகும். ஆண்பால், பெண்பால் என்னும் இரண்டனுள் யாதேனும் ஒன்றன்பால் நிகழும் கேண்மையே கைக்கிளையாகும். ஐந்திணை என்பது அன்புடைக் காமம் ஆகும். அன்பாவது, தலைவனும் தலைவியும் மாறுபடாது ஒன்றியிருத்தலாகும். திணை என்பதற்கு நிலம் எனவும் கூறுவர். ஐந்திணைக்கும், குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் பொருந்திய பெயர்கள் ஆகும். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் ஆகும். திணை என்பது இங்கு ஒழுக்கத்தினைக் குறிக்கும். தலைவன் தலைவியருக்கிடையே காணப்படும் ஒத்த அன்பின்மை பற்றிப் பொருந்தாக் காமம் என்றார்.

2. நம்பியகப்பொருள் கூறும் கைக்கிளை பெருந்திணை என்பவை பற்றிய பாகுபாடுகளை விளக்குக.
*(எம். ஏ. 60)*

விடை முன்னர்த் தரப்பட்டுள்ளது.

**ஐந்திணை வைப்புமுறை**

3. ஐந்திணை வைப்பு முறையை நம்பியார் எங்ஙனம் கொண்டார்? இது எக்காரணத்தால் பொருந்தும்?
*(வி. 51)*

*அல்லது*

ஆசிரியர் தொல்காப்பியனார் போல நிலங்களை முல்லை முதலாகவைத்து எண்ணாது, நாற்கவிராச நம்பி குறிஞ்சி முதலாகவைத்து எண்ணிய காரணம் யாது?
*(வி. 61)*

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்று இம்முறை எண்ணாது, குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் என்று ஐந்திணை வைப்புமுறையை நம்பியார் கொண்டார். அவ்வாறு எண்ணியது என்னையோ வெனின்,

'மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்துள், 'சொல்லிய முறையாற் சொல்லவும் படும்' என்ற உம்மையால் பிற வாற்றானும் சொல்லப்படும் என்பது பட நிற்றலானும், பத்துப் பாட்டும் கலித்தொகையும் ஐங்குறு நூறும் கீழ்க் கணக்கும் முதலாகிய சான்றோர் செய்யுட்கள் எல்லாம் வேண்டிய முறையானே வைத்தலானும் இவ்வாறு எண்ணப்பட்டது. மேலும் குறிஞ்சி முதலாகிய பெயர் இந்நிலங் கட்கு ஏற்பட்ட காரணம் யாதெனில், உலகத்தார் வழங்கிப் போந்த முறையாகும். அன்றியும் குறிஞ்சியும் பாலையும் மருதமும் நெய்தலும் என்னும் பொருள்கள் அவ்வந் நிலத் திற்குச் சிறந்தனவாதலால் அவற்றாற் பெற்ற பெயர் எனவு மாம்.

### முதற் பொருள்—உரிப்பொருள்—கருப்பொருள்

4. ஐந்திணைக்கும் உரிய பொதுவாகிய பொருள்கள் எவை? (வி. 59)

அல்லது

அகத்திணைப் பொருட் பாகுபாட்டை விளக்கி ஒவ்வொரு திணைக்கும் உரிய முதற் பொருள் இன்ன வெனத் தருக. (வி. 56)

5. முல்லை நிலத்துக்குரிய முதல் கருவுரிப் பொருள்களை எழுதுக. (வி. 61)

6. நெய்தல் திணைக்குரிய முதல் கருவுரிப் பொருள்களை எழுதுக. (வி. 56)

7. முதற் பொருள், கருப்பொருள்—விளக்குக. (வி. 52)

8. ஐந்து திணைகட்கும் உரிய பெரும் பொழுதுகள் யாவை? சிறுபொழுதுகள் யாவை? (வி. 63, 64)

9. அறுவகைப் பெரும் பொழுது இன்னவெனக் கூறி அவைகளுக்குரிய திணைகளையும் தெரிவிக்க. (வி. 58)

10. சிறு பொழுது எத்தனை? எவ்வெவை எவ்வெத் திணைக்கு உரியவை? (வி. 57)

11. குறிஞ்சி, முல்லை, மருதம் இவற்றிற்குரிய பெரும் பொழுது சிறுபொழுதுகளை எழுது (வி. 64)

12. குறிஞ்சி அல்லது முல்லைக்குரிய ஊர், நீர், பூ, மரம் உணா என்னுங் கருப்பொருள்களைக் குறிக்க. (வி. 50)

13. பாலைத் திணையின் கருப்பொருள் கூறு. (வி. 59)

14. முல்லை பாலைகட்குரிய சிறுபொழுதுகள்; குறிஞ்சிக் குரிய பூ, பெண்டிர்; நெய்தற்குரிய மரம், பறவைகள் யாவை? (எம். ஏ. 54)

*அகத்திணைப் பொருட் பாகுபாடு*

*முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்பன ஐந்திணைக்கும் உரிய பொருள்களாகும். அவற்றுள் முதற் பொருள் நிலமும் பொழுதும் என இரண்டு வகைப்படும். கருப்பொருள் ஆரணங்கு, உயர்ந்தோர், அல்லோர், (தாழ்ந் தோர்), புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் எனப் பதினன்கு வகைப்படும்.*

உரிப்பொருள் என்பது புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் எனப் பத்து வகைப்படும்.

முதற்பொருள்

முதற் பொருள் இரண்டில் நிலம் என்பது வரையும் வரை சார்ந்த இடமும், சுரமும் சுரஞ் சார்ந்த இடமும், புறவும் (காடு) புறவு சார்ந்த இடமும், பழனமும் பழனஞ் சார்ந்த இடமும், கடலும் கடல் சாரந்த இடமும் எனப் பத்துவகைப்படும்.

பெரும் பொழுது, சிறுபொழுது என்று காலம் இரண்டு வகைப்படும். அவற்றுள் பெரும் பொழுது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் என ஆறு பகுதிகளை உடையது. சிறுபொழுதின் வகையாவன, மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் ஆகும்.

பொழுது அட்டவணை

| நிலத்தின் பெயர் | பெரும் பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| பாலை | வேனில், பின்பனி | நண்பகல் |
| முல்லை | கார் | மாலை |
| மருதம் | கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில், | வைகறை |
| நெய்தல் | கார், கூதிர். முன்பன், பினிபனி, இளவேனில், வேனில் | காலை |

கருப்பொருள்

ஆரணங்கு (தெய்வம்)

குறிஞ்சி—சேய் (முருகன்)

பாலை—கன்னி (துர்க்கை)

முல்லை—நெடுமால்

மருதம்—இந்திரன்

நெய்தல்—வருணன்

உயர்ந்தோர்

குறிஞ்சி—பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி.

பாலை—விடலை, காளை, மீளி, எயிற்றி.

முல்லை—குறும்பொறை நாடன், தோன்றல், கிழத்தி, மனைவி.

நெய்தல்—சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி.

அல்லோர்

குறிஞ்சி—குறவர், கானவர், குறத்தியர்.

பாலை—எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்.

முல்லை—இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்.

மருதம்—உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்.

நெய்தல்—நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.

புள்

குறிஞ்சி—கிளி, மயில்.

பாலை— புறா, பருந்து, எருவை, கழுகு.

முல்லை—காட்டுக்கோழி.

மருதம்—வண்டானம், மகன்றில், நாரை, அன்னம்,

பெருநாரை, கம்புள், குருகு, தாரா.

நெய்தல்—கடற்காகம்.

விலங்கு

குறிஞ்சி—புலி, கரடி, யானை, சிங்கம்.

பாலை—செந்நாய். முல்லை—மான், முயல்.

மருதம்—எருமை, நீர்நாய். நெய்தல்—சுறாமீன்.

ஊர்

குறிஞ்சி—சிறுகுடி. பாலை—குறும்பு.

முல்லை—பாடி. மருதம்—பேரூர், மூதூர்.

நெய்தல்—பாக்கம், பட்டினம்.

நீர்

குறிஞ்சி—அருவி, சுனை.

பாலை—நீரில்லாக் குழி, நீரில்லாக் கிணறு.

முல்லை—குறுஞ்சுனை, கான்யாறு.

மருதம்—யாறு, கிணறு, குளம்.

நெய்தல்—உவர்க்கேணி, கவர்நீர்.

பூ

குறிஞ்சி—வேங்கை, குறிஞ்சி, காந்தள்.

பாலை—குராஅம்பூ, மராஅம்பூ.

முல்லை—குல்லை, முல்லை, தோன்றி, பிடவம்.

மருதம்—தாமரை, கழுநீர், குவளை.

நெய்தல்—நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடம்பப்பூ.

மரம்

குறிஞ்சி—சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம், மூங்கில்.

பாலை—உழிஞை, பாலை, ஓமை, இருப்பை.

முல்லை—கொன்றை, காயா, குருந்தம்.

மருதம்—காஞ்சி, வஞ்சி, மருதம்.

நெய்தல்—கண்டல், புன்னை, ஞாழல்.

உணவு

குறிஞ்சி—மலைநெல், மூங்கிலரிசி, தினை.

பாலை—வழியிற் பறித்த பொருள், பதியிற் கவர்ந்த பொருள்.

முல்லை—வரகு, சாமை, முதிரை.

மருதம்—செந்நெலரிசி, வெண்ணெலரிசி.

நெய்தல்—மீனும் உப்பும் விற்றுப் பெற்ற பொருள்.

பறை

குறிஞ்சி—தொண்டகப் பறை.

பாலை—துடி.

முல்லை—ஏறங்கோட் பறை.

மருதம்—நெல்லரிகிணை, மணமுழவு.

நெய்தல்—மீன் கோட் பறை, நாவாய்ப்பம்பை.

யாழ்

குறிஞ்சி—குறிஞ்சி. பாலை—பாலை.

முல்லை—முல்லை. மருதம்—மருதயாழ்.

நெய்தல்—விளரி.

பண்

குறிஞ்சி—குறிஞ்சி. பாலை—பஞ்சுரம்.

முல்லை—சாதாரி. மருதம்—மருதப் பண்.

நெய்தல்—செவ்வழி.

தொழில்

குறிஞ்சி—வெறியாடல், மலைநெல் விதைத்தல், தினை காத்தல், தேனழித்தெடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், அருவி—சுனை நீராடல்.

பாலை—போர்செய்தல், பகற் சூறையாடுதல்.

முல்லை—சாமை, வரகு விதைத்தல், பயிரிடல், கொன்றைக் குழலூதல், ஆவின மேய்த்தல், ஏறு தழுவுதல், குரவைக் கூத்தாடுதல், கான்யாறாடல்.

மருதம்—விழாச் செய்தல், வயற்களை கட்டல். நெல் லரிதல், கடா விடுதல், குளங் குடைதல், புது நீராடல்.

நெய்தல்—மீன் பிடித்தல், உப்புண்டாக்கல், அவற்றை விற்றல், மீனுணக்கல், அவற்றை உண்ணவரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடுதல்.

உரிப்பொருள்

| திணை | உரிப்பொருள் |
|---|---|
| குறிஞ்சி | புணர்தலும், புணர்தல் நிமித்தமும். |
| பாலை | பிரிதலும், பிரிதல் நிமித்தமும். |

முல்லை இருத்தலும், இருத்தல் நிமித்தமும்.

மருதம் ஊடலும், ஊடல் நிமித்தமும்.

நெய்தல் இரங்கலும், இரங்கல் நிமித்தமும்.

15. 'கூதிர் யாமம் முன்பனி யென்றிவை', 'வேனில் நண் பகல் பின் பனி'—என்னும் இச் சூத்திரங்களில் பெரும் பொழுது இரண்டனையும் சேரக் கூறுது இடை யிட்டுக் கூறிய காரணம் யாது? (வி. 61)

முன்பனி கூதிரினளவு சிறப்புடைத்து அன்மையின் அவ்வாறு கூறப்பட்டது. அவ்வாறே பின்பனி வேனிலின் அளவு சிறப்புடைத்து அன்மையின், அது வேனிலோடு சேர்த்துக் கூறப்பெறவில்லை.

ஐந்திணைக்குரிய கைகோள்

எல்லையில்லாத இன்பத்தையுடைய ஐந்திணையிடத்துக் களவு, கற்பு என இரண்டொழுக்கம் நிகழும்.

களவுப் புணர்ச்சி

16. களவுப் புணர்ச்சியின் வகைகளையும் அவை நிகழுங் காலங்களையும் தெளிவுறுத்துக.

உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என களவுப் புணர்ச்சி இரண்டு வகைப்படும். பெருமையும் உரனும் தலை மகற்கு நிலைபெற்ற குணமாதலானும், அச்சமும் நாணும் மடமும் தலைமகட்கு நிலைபெற்ற குணமாதலானும் உள்ளப் புணர்ச்சி முன் நிகழ்தற்கு உரித்தாகும்.

பின்வரும் காட்சி முதலிய பத்தவத்தையும் ஒருங்கே நிகழுமாயின் தலைமகற்கு மெய்யுறு புணர்ச்சி கூடும்.

காட்சி—தலைவன் தலைவியைத் தனி இடத்துக் காண்டல். வேட்கை—தலைவியைப் பெற தலைவன் விரும்பல்.

ஒருதலை யுள்ளல்—இடைவிடாது நினைத்தல். மெலிதல்—உடம்பு வாடுதல்.

ஆக்கஞ்செப்பல்—வருத்த மிகுதியைப் பிறர்க்குரைத்தல்.

நாணுவரையிறத்தல்—நாணத்தின் எல்லையைக் கடத்தல்.

நோக்குவவெல்லாம் அவையே போறல்—காணுமவையெல்லாம் அவளுறுப்புக்களே போலத் தோற்றுதல்.

மறத்தல்—அறிவு திரிதல்; மயக்கம்—மோகித்தல்.

சாக்காடு—இறந்துபடுதல்.

அன்பிணலமைந்த புணர்ச்சி நிகழிடம் பகற்குறியும் இரவுக் குறியும் என்னும் இரண்டு பகுதியினை உடையவாம். அவ்விரண்டில் பகற் குறி இல்லின் எல்லையைக் கடந்ததாகும். இரவுக் குறி இல்லின் எல்லையைக் கடவாததாகும்.

**பிரிவு**

17. இருவகைக் கைகோளிலும் நிகழும் பிரிவு தந்து அவற்றல் அறியப்படும் வாழ்க்கை நிலையுங் குறிக்க. (வி. 54, 63)

அல்லது

பிரிவு எத்தனை வகைப்படும். ஒவ்வொரு பிரிவிற்கும் வரையறுக்கப்பட்ட கால அளவினை எழுது. (வி. 62)

18. களவிற் பிரிவு, கற்பிற் பிரிவு—இவற்றின் வகைகளைக் கூறி விளக்குக, (வி. 57)

19. களவு கற்பென்னும் இரண்டிலும் பிரிகின்ற தலைவன், எவ்வெப் பிரிவிற்கு எவ்வளவு காலம் பிரிந்திருக்கலாம்? (வி. 51)

20. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின் வகைகளை விளக்கு. (வி. 58)

21. பிரிவுக்காலத்தில் அந்தணர்க்கும் மற்றையோர்க்கும் விலக்கப்பட்ட செயல்கள் என்ன? (வி. 50)

23. கற்புக்காலத்துப் பிரிவு வகைகள் யாவை? (எம். ஏ. 50)

அல்லது

கற்புக் காலத்து நிகழும் பிரிவுகள் யாவை? ஒன்றற்கு உதாரணம் தந்து விளக்குக. (வி. 61)

22. துணைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு—இவற்றுக்குக் கால வரையறை என்ன? (எம். ஏ. 54)

24. ஓதல் காவல் தூது என்னும் பிரிவுகளுக்கு உரியவரும் அவற்றிற்குரிய காலவரையறையும் விளக்குக. (எம். ஏ. 60)

*களவொழுக்கத்தின்கண் நிகழும் பிரிவு*

*களவின் கண் பிரியும் பிரிவு, ஒரு வழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் என இரண்டு வகைப்படும். அவற்றுள் ஒருவழித்தணத்தலாவது, ஓரூரின் கண்ணும் ஒரு நாட்டின் கண்ணும் பிரிதலாகும். வரைவிடை வைத்துக் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பொருள்வயிற் பிரிதல் வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலாகும்.*

*மேற்கூறிய இரண்டனுள் ஒருவழித் தணத்தல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையின் அதற்குப் பருவ வரையறை கிடையாது. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதலின் அஃது இரண்டு திங்களின் இகவாமையை உடைத்து.*

மேலே குறிக்கப்பெற்றுள்ள வரைவென்பது களவு வெளிப்படா முன்னும் களவு வெளிப்பட்ட பின்னும் விளையும். முன்னர்க் கூறிய இயற்கைப் புணர்ச்சி முதலாகிய நான்கு வகைப் புணர்ச்சிக் கண்ணும் தலைமகன்றானே தெருண்டு வரைதலும் பாங்கனுலாதல் பாங்கியால் ஆதல் தெருட்டப்பட்டு வரைதலுமாகிய அவை, களவு வெளிப்படாமுன் வரைவாம். புணர்ந்துடன் போய்த் தலைமகன் தன்னூரின் கண்ணே வரைதலும் மீண்டுவந்து தம்மூரின் கண்ணே வரைதலும் உடன்போக் கிடையீடுபட்டுத் தலைமகள் தமரை வழிபட்டு வரைதலுமாகிய இவை களவு வெளிப்பட்டபின் வரைதல் ஆகும். இம்மூன்றனுள் உடன் போய்த் தன்னூரின்கண்ணே வரைதல் ஒருவகைத்தாகும். ஆனல் மீண்டு வரைதல் தலைமகள் மனையின் கண்ணே வரைதலும் தலைமகன் மனையின் கண்ணே வரைதலும் என இரண்டு வகையினை உடைத்து.

கற்பில் நிகழும் பிரிவு

பரத்தையிற் பிரிதல், ஓதுதற்காகச் செல்லுதல், காவல்—தூது இவற்றின் காரணமாகச் செல்லுதல், உதவியின் பொருட்டுப் பிரிதல், நிதியின் பொருட்டுப் பிரிதல் என கற்பின்கண் நிகழும் பிரிவு ஆறு வகைப்படும். பரத்தையிற் பிரியுங்காலத்து, அயன்மனைப் பிரிவு, அயற்சேரிப் பிரிவு, புறநகர்ப் போக்கு, என்ற மூன்று பிரிவும் தலைமகனுக்கு உரியனவாகும். காமக் கிழத்தியர் காரணமாகத் தலைவன் அயல் மனைக்குத் தலைவியைப் பிரிந்து செல்லுவான். இரண்டாவது வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக் கிழத்தியும் காதற் பரத்தையும் இனிய விழவும் காரணமாகத் தலைவன் அயற்சேரியின் கண்ணே பிரிவான். இளமரக்காவின் கண்ணே விளையாடுதல் காரணமாகவும் புனலாடுதல் காரணமாகவும் தலைமகன் புதியளாகிய பரத்தையைத் தேர்மேல் ஏற்றிக்கொண்டு நகர்ப்

புறத்திற்குப் போவான். இம்மூன்று பிரிவின் கண்ணும் தலைமகளுக்கு ஊடல் பொருந்தும்.

ஓதல் என்னும் தொழில், அந்தணர், அரசர், வைசியர் என்ற மூவர்க்கும் உரியதாகும். வேதமல்லாத கல்வி நால்வர்க்கும் உரியதாகும். எனவே வேதம் ஓதற்குப் பிரிதல் அம் மூவர்க்கும் உரித்தாகும். மேலும் படைக் கலங்களைப் பயிறலும் யானை, தேர், குதிரை முதலாயின ஊர்தலும் மூவர்க்கும் உரிய தொழில்களாகும்.

காவற் பிரிவு, அறப்புறங் காவல், நாடுகாவல் என இரண்டு வகைப்படும். இவ்விரண்டினுள்ளும் அறப்புறங் காவல் நால்வர்க்கும் உரியது. ஆனல் நாடு காவல் அரசர்க் குப் பொருந்தும். தூது போகும் தொழில் பார்ப்பனருக்கும் வேந்தர்க்கும் உரியதாகும். ஆனல் அரசனல் சிறப்புப் பெயர் பெற்ற வைசியருக்கும் சூத்திரருக்கும் நாடுகாவல் தொழிலும் தூது போதல் தொழிலும் பொருந்துதற்குரியனவாம். அந்தணர் ஒழிந்த மூவர்க்கும் வேந்தர்க்கும் உற்றுழி உதவும் தொழில் உரியதாகும். பரத்தையிற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும் நால்வர்க்கும் பொருந்தும்.

மேற்கூறிய அறுவகைத் தொழிலுள்ளும் ஓதலும் நாடு காவலும் தூது போதலும் ஒழித்து அல்லாதனவெல்லாம் இழிந்தோராகிய நில மக்களுள் தலைமக்கட்கும் உரியவாம். கல்வி முதலாகிய எல்லா வினைக்கும் தலைமகன் தலைமக ளிடம் சொல்லிப் பிரிதலும் சொல்லாது பிரிதலும் உரியன. ஆனல் தோழியிடம் சொல்லியே பிரிவான். மேலும் தலைவன் தலைவிக்கு அதனைக் குறிப்பினல் உணர்த்தவும் செய்வான். பிரியுங் காலத்து, கால், கலம், ஊர்தி இவற்றின் துணை கொண்டு செல்வான். இம்மூன்றினுள்ளும் கலத்தில் சேறல் என்பது அந்தணர்க்கு முறைமை அன்று. குலமடமாத ரொடு கலமிசைச் சேறலும் பாசறைச் சேறலுமாகிய இரண்டும் வேந்தர் முதலாகிய மூவர்க்கும் குற்றமாகும்.

ஓதல் முதலாகிய ஐந்தின் கண்ணும் தலைவன் செல வழுங்கலும் உண்டு. இல்லகத்துத் தலைமகளையும் தன் னெஞ்சினையும் தேற்றுதல் காரணமாகவும் இடைச்சுரத்துத் தன்னெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவும் தலைவன் முறையே அவ்வில்லின் கண்ணே செலவழுங்குதலும் இடைச் சுரத்தின் கண்ணே செலவழுங்குதலும் உண்டு.

மேற்கூறிய பிரிவுகளுள் ஓதற்குப் பிரியும் பிரிவு மூன்று ஆண்டுகள் எல்லையினை யுடையது. தூது, பொருள் இவற் றின் காரணமாகப் பிரியும் பிரிவு ஓராண்டு எல்லையினைக் கொண்டது.

நீராடிய பின் பன்னிரண்டு நாளும் கருப்படுங் காலம் ஆதலால் பரத்தையிற் பிரிந்த தலைமகன் அப்பன்னிரண்டு நாளும் தலைமகளைப் பூப்புநிகழுங் காலத்துப் பிரியப்பெறான். ஓதற்குப் பிரிந்த தலைவன் அதனை யொழித்து இடையிட்டு மீண்டு வருவதற்கு உடம்படவும் அவ்விடத்துத் தலைமகளை நினைத்துப் புலம்பவும் பெறான். தூது காரணமாகவும் உதவி காரணமாகவும் பிரிந்த தலைமகன் அத்தொழில்கள் உரிய காலத்தில் முடியாது நீட்டித்த காலத்துப் பாசறையிலிருந்து கொண்டு தலைவியை நினைத்து வெறுத்துப் புலம்புதல் பெறும்.

**அறத்தொடு நிற்றல்**

25. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன? அதுநிகழும் இடமும் முறையும் யாவை? (எம். ஏ. 55)

*அல்லது*

அறத்தொடு நிற்றலின் காரணமும், வகையும், நிற்றற் குரியார், நிற்கு நெறியுங் கூறுக. (வி. 56)

26. அறத்தொடு நிற்றற்கு உரியவர் யாவர்? அவர்கள் அறத்தொடு நிற்கும் நெறியாது? (வி. 58)

27. அறத்தொடு நிற்றற்கு உரிய காரணங்கள் யாவை? நிற்கு முறை யாது? (வி. 57)

28. அறத்தொடு நிற்றற்குரியார்களையும் தலைவி அறத் தொடு நிற்குமிடத்தையும் எழுதுக. (வி. 62)

29. தலைமகள் அறத்தொடு நிற்கும் இடங்கள் யாவை? (வி. 64)

*அறத்தோடு நிற்றல் என்பது களவை வெளிப்படுத்தி நிற்றல் என்று பொருள்படும். தலைவன் வரும் வழி உண்டாகிய ஏதத்தினை அஞ்சியவிடத்தும் தமர் வரைவு எதிர் கொள்ளாதவிடத்தும் பிறர் வரைவு நேருமிடத்தும் காவல் கைமிகுந்த விடத்தும் அறத்தொடு நிலை நெறிப்படத் தோன்றும். தலைவி பாங்கிக்கும் பாங்கி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் நற்றாய் தந்தை தன்னையர்க்கும் அறத் தொடு நிற்பர்.*

*பாங்கியிற் கூட்டம் நீங்கிய மூன்று புணர்ச்சிக் கண்ணும் தலைமகன் ஒருவழித் தணத்தலானும் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலானும் செவிலி தலைமகளைக் குறிவயிற் காண்டலானும் இற்செறித்தலானும் தனக்கு வருத்தம் மிகுமாயின் வினவிய விடத்தும் வினவாதவிடத்தும் தலை மகள் பாங்கிக்கு அறத்தொடு நிற்பாள். பாங்கியானவள் முன்னிலைப் புறமொழியினாலும் முன்னிலைமொழியினாலும் செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். செவிலியானவள் நற்றாய்க்கு விளங்கச் சொல்லும். நற்றாய் அறத்தொடு நிற்கும் காலத்துச் சொல்லாட்பெறாள். ஆதலின் தலைவி யின் தந்தையும் தன்னையும் அவள் குறிப்பினால் அறிவர்.*

*தலைமகள் மாட்டு வேறுபாடு கண்டுழிப் பாங்கி தலைவி யையும் செவிலி பாங்கியையும் நற்றாய் செவிலியையும் வினவு வர். தலைமகளும் தலைமகனும் புணர்ந்துடன் போயவிடத்து, தோழியும் செவிலியும் நற்றாயும் அறத்தொடு நிற்பர்.*

30. வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவு, அறத் தொடு நிலை—இவைகளை நம்பியகப்பொருள் வழி நின்று விளக்குக. *(எம். ஏ: 64)*

*விடையினை முன்னர்க் கண்டு கொள்க.*

**வாயில்கள்**

31. ஊடல் நிகழ்வதேன்? தணிக்கும் வாயில்களெவை? *(வி. 51)*

*அல்லது*

ஊடல் தீர்க்கும் வாயில்கள் யாவர்? அவருள் இளை யோர் தொழில்கள் யாவை? (வி. 57)

*அல்லது*

ஊடல் தீர்க்கும் வாயில்கள் ஆவார் யார்? அவர் களுக்குரிய செயல்களைத் தொகுத்துரைக்க. (வி. 55)

*அயன்மனைப் பிரிவு முதலாகிய மூன்று பிரிவின் கண்ணும் தலைமகளுக்கு ஊடல் நிகழும். பாணன், பார்டினி, கூத்தர், இளையர், கண்டோர், இருவகைப் பாங்கர், பாகன், பாங்கி, செவிலி, அறிவர், காமக்கிழத்தி, காதற்புதல்வன், விருந்து, ஆற்றுமை என்பன தலைமகள் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாகும்.*

*வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல், சேயிழை ஊடல் தீர்த்தல், போயுழி அவள் நலம் தொலைவு கண்டு அழுங்கல், தலைவனிடத்துச் செல்ல விரும்பல், சென்று அவனுக்கு உணர்த்தல், சொல்லிய கூற்றெனச் சொல்லல், கிழவோன் வரவு மீண்டுவந்து அரிவைக்குக்கூறல், அணி நலம் பெற்றமை அறியான் போன்று அவளைப் பணிவோடு வினுதல் என்பன பாணர்க்கு உரிய தொழில்களாகும்.*

*செல்வம் வாழ்த்தல், நல்லறிவு கொளுத்தல், கலனணி புணர்த்தல், காமநுகர் புணர்த்தல், புலவி முதிர்காலைப் புலங்கொள ஏதுவிற்றேற்றல், சேய்மை செப்பல், பாசறை*

மேற் சென்று உரைத்தல், மீண்டு வரவு உரைத்தல் என்பன கூத்தர்க்குரியனவாகும்.

இளையர் என்பவர் இரவும் பகலும் தலைமகனுக்கு நீங்காக் கவசம் போலும் தன்மையர். மடந்தையை வாயில் வேண்டல், வாயில் உடன் படுத்தல், அவள் ஊடல் தீர்த்தல், கொற்றவர்க்கு உணர்த்தல், குற்றேவல் செய்தல், முன்சென்று வரவு செப்பல், அவன்திறம் ஒன்றி நின்று உரைத்தல், வினை முடிபுரைத்தல், வழி இயல்பு கூறல், வழியிடைக் கண்டன மொழிதல் முதலியன இளையோர் தொழில்களாகும்.

பார்ப்பனப் பாங்கரும் சூத்திரப் பாங்கருமென பாங்கர் இருவகைப்படுவர். இவ்விருவரும் தலைவனுக்கு இனிய உயிர்த்துணைவராவர். இளமை, யாக்கை, வளமை என்றிவற்றின் நிலையாத் தன்மையினை எடுத்துரைத்தலும் செலவழுங்கு வித்தலும் செலவுடன் படுத்தலும் இன்ன பிறவும் பார்ப்பனப் பாங்கருக்குரிய செயல்களாகும். நன்மையின் நிறுத்தலும் தீமையின் அகற்றலும் பிறவும் சூத்திரப் பாங்கற்கு உரியனவாகும்.

தலைமகளை வாயில் வேண்டலும் வாயில் நேர்வித்தலும் ஊடல் தீர்த்தலும் வினைமுடித்து அதன் பின் வியன்பதி சேய்த்தெனத் தலைமகனைத் தேற்றலும் பாகற்கு இயல்பாகும்.

32. பாணர்க்குரிய செயல்களை எழுது. (வி. 61)

விடை முன்னர்க் கண்டுகொள்க.

33. அறிவர் என்பவர் யார்? அவர்க்குரிய தொழிலென்ன? (வி. 51)

தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதியைப் பயக்கும் நல்லுரைகளைக் கூறும் குருக்களே அறிவராவர். இவர்கள் முன்வரு நீதியும், உலகியலும், பின்வரு பெற்றியும், பிறவும் எடுத்துக் கூறுவர்.

**தலைமகளுக்குரிய ஒழுகலாறு**

34. கற்புக்காலத்தில் தலைமகளுக்குரிய ஒழுகலாறுகள் யாவை? (வி. 63)

*பூப்படைந்திருக்குந் தன்மை சேடியிற் புரவலற்கு உணர்த்தல், நீத்தமை பொருது நின்று கிழவோனைப் பழிக்கும் காமக் கிழத்தியை இடித்துரைத்தல், கிழவோற் கழறல், பின்முறை வேட்ட மனைவியைக் கொழுநனோடு வந்து எதிர் கோடல், அவனோடு பரத்தையைப் பழித்தல், கணவனோடு புறநகர் போகிச் செறிமலர்ச் சோலையும், காவும், கழனியும், வெள்ளருவியும், மலையும், கானமும் கண்டு விளையாடல், ஆறும், கமல வாவியும் குளனும் ஆடி விளையாடல் என்பன எல்லாம கற்புக் காலத்திலே தலைமகளுக்குரிய ஒழுகலாறுகளாகும்.*

**அகவொழுக்கத்தில் வரும் மகளிர்**

35. அகவொழுக்கத்தில் வரும் மகளிர் எவ்வெவ்வகையாக எங்கெங்கு வருவர்? (வி. 52)

*காதற் பரத்தையர், காமக் கிழத்தியர், பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி, விறலி, பாங்கி, செவிலி, தோழி என்பவர்கள் அகவொழுக்கத்தில் வரும் மகளிராவர்.*

*மேற்கூறியவர்களில் காதற் பரத்தையர் என்பவர், சேரிப் பரத்தையர் தம் மகளிராவர். இவர்கள் தம் அன்பினால் தலைமகனோடு கூடுவர். சிறப்பாக இவர்கள் களவொழுக்கத்திற்கு உரியர். மேலும் தலைமகனால் வரைந்து கோடற்குஉரியரும் காதற் பரத்தையருள்ளும் உளர். தலைமகனையும் தலைமகளையும் இகழ்தல், தம்மைப் புகழ்தல், நிகழ்பொருள் காத்தல், காதற் பரத்தையைப் புகழ்தல், தங்களை இகழ்தல் என்பன பரத்தையர்க்குரிய செயல்களாகும்.*

காமக் கிழத்தியர் சேரிப் பரத்தையர் போலப் பலர்க்கும் உரியாரன்றி ஒருவருக்கே உரிமை பூண்டு வருங் குலப் பரத்தையர் மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்து கொள்ளப்பட்டாரர்கும். குடிப்பிறந்தோரை வடுப் படுத்துரைத்தல், மனைவியைப் பழித்தல், வாடா ஊடலுள் தலைவற் கழறல், மனைவிக்கமைந்த ஒழுக்கம்முதலியன காமக் கிழத்தியர்க்குரியனவாகும். பின்முறை வதுவைப் பெருங் குலக் கிழத்தி என்பவளும் காமக் கிழத்தியைப் போன்று மன்றற் புணர்ச்சிக்குரிய மகளிராகும்.

செலவிற்றேற்றலும், புலவியில் தணித்தலும், வாயில் வேண்டலும், வாயில் நேர்வித்தலும் விறலிக்கு உரியன.

பிரிவுழி விலக்கல், பிரிவு உடன்படுத்தல், பிரிவுழித் தேற்றல், பிரிவுழி அழுங்கல், வாயில் வேண்டல் முதலா யினவெல்லாம் பாங்கிக்குரிய தொழில்களாகும்.

செவிலி என்பவள் தலைமகளுடைய நற்றாய்க்குத் தோழி யர்கித் தலைமகட்கு வரும் துன்பம் களைந்து நல்லறிவும் ஆசாரமும் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாயாகும். முன்வரு நீதியும் உலகியல் முறைமையும் பின்வரும் பெற்றி யும் தெளியச் சொல்லுதல் செவிலியின் கடனாகும்.

தோழி என்பவள் செவிலிக்கு மகளாய் நன்மையும் தீமையும் ஆராய்தலுடனே தலைவிக்கு உற்ற துணையாய் அவளது வருத்தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணையாம்.

**எண்வகை மன்றல்**

36. மறைமன்ற லெட்டனைக் குறித்து, அவற்றை எழு திணைக் குரிமைப்படுத்தி விளக்குக. (வி. 56)

37. எண்வகை மணங்களில் கைக்கிளைக்கும் பெருந் திணைக்கும் உரிய மணங்கள் யாவை? (வி. 61)

மன்றலெட்டாவன, பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் எனவிவை. அவற்றுள் பிரமமாவது பிரமசாரியாய்த் தக்கானுமாய் இருப்பானுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவரும் உடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது பிரசாபத்தியமாகும். ஆரிடமாவது ஒன்றானு மிரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது. வேள்வி ஆசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது தெய்வமாகும். கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தலைமகனும் தலைமகளும் தனியிடத்து எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவமாகும். தலைமகட்குப் பொன் பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்வது ஆசுரமாகும். இராக்கதமாவது தலைமகடன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது. துயின்றோள் மாட்டும் களித்தோள் மாட்டும் சென்று சேர்வது பைசாசமாகும்.

மேற்கூறிய எட்டனுள் ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றும் கைக்கிளைக்கு உரியனவாகும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கும் பெருந்திணைக்கு உரியவாம். காந்தர்வம் அன்பின் ஐந்திணைக்கு உரியது.

**களவின் கிளவித்தொகை**

38. களவின் வரலாற்றை அதன் கிளவித்தொகை கொண்டு தொகுத்தெழுதுக. (வி 53)

களவென்பது காந்தருவ மணத்தோடு ஒத்த இயல்பினை உடையது என்று புலவர் சொல்லுவர். களவின் கிளவித்தொகை பதினேழாகும். அவை பின் வருவன:

1. இயற்கைப் புணர்ச்சி

ஊழினால் தலைவன் தலைவியை எதிர்ப்பட அவ்விருவரும் மனம் ஒப்பி, தாமே கூடி இன்புறுதல்.

2. வன்புறை (வன்பு—வலிமை; உறை—உறுத்தல்)

தலைவி ஐயுற்றகால் தலைவன் அவளது ஐயம் நீங்கும் வகையில் வற்புறுத்திக் கூறல்.

3. தெளிவு

தலைவன் கூறியதைத் தலைவி உண்மை எனத் தெளிந்து ஆற்றுதல்.

4. பிரிவுழி மகிழ்ச்சி

தலைவி பிரிந்து செல்லுங்கால் அவள் போகின்ற அழகினைக் கண்டு தலைவன் மகிழ்தல்.

5. பிரிவுழிக் கலங்கல்

தலைவி பிரிந்தகால் தலைவன் கலங்கிக் கூறல்.

6. இடந்தலைப்பாடு

முதல் நாள் கூடிய இடத்தே தலைவன் மறுநாளும் வந்து தலைவியைக் கூடுதல்.

7. பாங்கற் கூட்டம்

பாங்கனது உதவியினால் தலைவன் தலைவியை மூன்றாம் நாள் கூடுதல்.

8. பாங்கி மதியுடம்பாடு

தலைவியின் வேறுபாடு கண்ட பாங்கி, ஆராய்ந்து தலைவியின் புணர்ச்சி உண்மை அறிந்து தன் மதியை உடன்படுத்தல்.

9, பாங்கியிற் கூட்டம்

பாங்கி கூட்டி வைக்கத் தலைவன் தலைவியைக் கூடுதல்.

10. பகற்குறி

பகற்குறியில் தலைவன் தலைவியைக் கூடுதல். ஆனால் மற்றை நாள் தன் வேட்கை மிகுதியால் பகற்குறி இடத்து வந்து நிற்கப் பாங்கி குறியிடத்துத் தலைவியைச் செலுத்தாது மறுத்துக் கூற, அதனால் தலைவன் வருந்திச் செல்லுதல் ஒரு சார்பகற் குறியாகும்.

11. பகற்குறி இடையீடு

பகற்குறிக்கண் வந்த தலைவன் குறிக்கட் செல்லாது இடையீடுபட்டுப் போதல்.

12. இரவுக்குறி

இரவுக் குறியில் தலைவன் தலைவியைக் கூடுதல்.

13. இரவுக்குறி இடையீடு

இரவுக் குறிக்கண் வந்த தலைவன் அல்லகுறிப் படுதலால் இடையீடுபட்டுப் போதல். இது எட்டாம் நாள் நிகழ்ச்சியாகும்.

14. வரைதல் வேட்கை

மேற்கூறியபடி இடையீடு பட்டதனால் தலைவி வரைதல் வேட்கையால் கூறுதல்.

15. வரைவு கடாதல்

தலைவனிடம் பாங்கி வரைவு கூறி வினாதல்.

16. ஒருவழித் தணத்தல்

வரைவு வினவிய பாங்கியிடம் வரைதற்கு உடன் பட்ட தலைவன் தன் ஊர்க்கு ஒருவழிப் போய் வருகின்றேன் என்று கூறிச்செல்லுதல்.

17. வரைவிட வைத்துப் பொருள்வயிற் பிரிதல்

வரைவை இடையிலே வைத்து வரைதற்கு வேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல்.

**கைக்கிளை**

39. காட்சி முதலிய கைக்கிளைப் பகுதிகள் நான்கன் தன்மைகளை விளக்குக. (வி. 50)

*கைக்கிளையானது காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் என நான்கு வகைப்படும்.*

*காட்சி*

*முற்பிறப்பினும் காதலராய் இருந்த இருவரையும் மறு பிறப்பினும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டனுள் நல்வினையின் காரணமாய், குலத்தாலும் செல்வத்தாலும் அறிவாலும் பிறவாற்றாலும் ஒத்த தலைவனும் தலைவியும் தனியிடத்து எதிர்ப்படுவர்.*

*ஐயம்*

*தலைவியின் வடிவும் அவளைத் தான் பார்த்த இடமும் சிறந்துழி தலைவன்பால் ஐயம் நிகழும்.*

*துணிவு*

*எழுதிய வல்லி, தொழில் புனைகலன், வாடிய மலர், கூடிய வண்டு, நடை பயில் அடி, புடை பெயர் கண், அச்சம் முதலியன தலைவன்பால் தோன்றிய எண்ணிலா ஐயங்களைப போக்குவனவாகும்.*

குறிப்பறிதல்

தலைவியினது கண் அவளுள்ளத்தே நிகழும் வேட்கையினைத் தலைவனுக்கு உணர்த்தும்.

40. இயற்கைப் புணர்ச்சியின் கிளவிகளைத் தொகுத்து எழுதுக.

தெய்வங் கூட்டத் தன்மனம் வேருய்த் தலைவன் தலைமகளைக் கூடுதலே இயற்கைப் புணர்ச்சியாகும். கலந்துழி மகிழ்தல், நலம் பாராட்டல், ஏற்புறவணிதல் என்னும் இம் மூன்று கிளவியும் தெய்வப் புணர்ச்சியின் விரியாகும். வேட்கையுணர்த்தல், மறுத்தல், உடன்படல், கூட்டம் என்று தலைமகளாற் புணரும் புணர்ச்சி நான்கு வகைப் படும்.

**வன்புறை**

41. வன்புறையின் வகை விரிகளைக் கூறு. (வி. 59)

களவியலில் காணப்பெறும் வன்புறை

தலைவி ஐயுற்றவழித் தலைவன் ஐயுறவு தீர வற்புறுத்திக் கூறல் ஆகும். இது ஐயந்தீர்த்தல், பிரிவறிவுறுத்தல் என இரண்டு வகைப்படும்.

அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல், பெருநயப்புரைத்தல், தெய்வத் திறம் பேசல், பிரியேன் என்றல், பிரிந்து வருகென்றல், இடம் அணித்தென்றல், என்ற ஆறும் வன்புறையின் விரியாகும்.

42. 'மணிபொன் சொரியுங்கை வாணன்றென் மாறை மருவினர் போல்
தணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ்சார லகத்தலர்தேங்
கணிபொன் சொரியுநின் சாரன்மென் காந்தளங் கையகத்தே'—

இப்பாடலில் அமைந்த துறையைப் புலப்படுத்துக.

இடம் அணித்தென்றல்.

**பிரிவுழி மகிழ்ச்சி**

43. பிரிவுழி மகிழ்ச்சி என்பதை இரண்டு உதாரணங்களால் விளக்குக. *(எம்.ஏ. 56)*

தலைவி பிரிந்து போகும்போது அவள் போகின்ற தன்மையைக் கண்டு தலைவன் மகிழ்தல் பிரிவுழி மகிழ்ச்சியாகும். செல்லுங் கிளத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல், பாகனொடு சொல்லல் என்ற இரண்டும் பிரிவுழி மகிழ்ச்சியின் விரியாகும்.

1. செல்லுங் கிழத்தி செலவு கண்டு உளத்தோடு சொல்லல் :

"அகிலேந்து கூந்த லொருகையி லேந்தி
யசைந் தொருகை
துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத்
துளி கலந்த
முகிலேந்து பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந்
நீர்த் துறைவாய்
நகிலேந்து பூங்கொடி போற்செல்லு மானெஞ்ச
நம் முயிரே".

2. பாகனொடு சொல்லல் :

"தென்பாற் றிலகமன் னன்றஞ்சை வாணன்றென்
மாறை முந்நீர்
வன்பாற் றிரண்முத்த வண்டலின் மேல்வரு
மேத மஞ்சி

முன்பார்த்தென் னெஞ்சம் வரும்வழி பார்த்து
முறை முறையே
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு
பெண் ணணங்கே",

### இடந்தலைப்பாடு

44. இடந்தலைப்பாட்டின் வகையும் விரியும் எடுத்துரைக்க• (வி. 57)

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து சென்ற தலைமகன் அடுத்த நாள் அவ்விடத்தே வந்து தலைமகளைக் கூடுதல் இடந்தலைப்பாடாகும். இது தெய்வம் தெளிதல், கூடல், விடுத்தல் என மூவகைப்படும். தந்த தெய்வம் தருமெனச் சேறல், முந்துறக் காண்டல் (தலைவியை முந்துபோலக் காண்டல்), முயங்கல் (கூடல்), புகழ்தல், ஆயத்துய்த்தல் (தோழியர் கூட்டத்திடத்துச் செலுத்தல்) என்ற ஐந்தும் இடந்தலைப்பாட்டின் விரியாகும். இவற்றுள்ளே தந்த தெய்வம் தருமெனச் சேறல் தெய்வந் தெளிதற்குரியது. காண்டல், முயங்கல், புகழ்தல் என்னும் மூன்றும் கூடற்குரியன; ஆயத்துய்த்தல் விடுத்தற்குரியது.

### பாங்கிமதியுடம்பாடு

45. மதியுடம்பாடு பற்றி விளக்கி எழுதுக. (வி. 56)

பாங்கி மதியுடம்பாடாவது பாங்கி அறிவொருப்படுத்தல். அதாவது பாங்கி தலைவியின் வேறுபாடு கண்டு புணர்ச்சி உண்மை அறிந்து ஆராய்ந்து தன் மதியை உடன்படுத்தல் பாங்கி மதியுடம்பாடாகும். அது முன்னுற வுணர்தல், குறையுற வுணர்தல், இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் என மூன்று வகைப்படும். அவற்றுள் முன்னுற வுணர்தலாவது முன்னரே தலைவியிடத்தே உற்றதாகிய வேறுபாட்டினால் பாங்கி உணர்தல். குறையுற

வுணர்தலாவது தலைமகன் குறையுற்று நிற்றலர்ல் பாங்கி உணர்தல். இருவரும் உள்வழியவன் வரவுணர்தலாவது தானும் தலைவியுமாகிய இருவரும் ஓரிடத்திருந்துழித் தலைவன் வருதலால் பாங்கி உணர்தல்.

46. 'இவ்வகை யேழினு மையமுற் றோர்தலும்'—இதிற் கூறிய ஏழின் திறத்தையும் விளக்கி வரைக. (வி. 59)

பாங்கி மதியுடம்பாட்டில், முன்னுற வுணர்தலில் பாங்கி, நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு, என்ற ஏழினுலும் களவினை ஐயுற வுற்றறிவாள். அவற்றுள் நாற்றமாவது கூந்தலும் நெற்றியும் முன்போலாகாது தலைமகன் புணர்ச்சியால் மான்மதம் முதலியனவும் பல பூக்களும் கலந்து நாறுதல். தோற்றமாவது தந்நிலை திரிந்து வேறுபட்டுக் காட்டும் தோள், முலை, கண் முதலிய உறுப்புக்களின் பொலிவு. ஒழுக்கமாவது சிற்றில் புனைதல் சிறுசோறடுதல் முதலியவைகளை வெறுத்துப் பெண்டன்மைக்கியைய ஒழுகுதலுந் தெய்வந் தொழாமை முதலியனவுமாம். உண்டியாவது பண்டையிற் குறைந்த உண்டி. செய்வினை மறைத்தலாவது தலைவனெடு பட்ட நினைவுஞ் செயலுமாகிய அவைகளைப் பிறர்க்குப் புலப்படாமல் மறைத்தல். செலவாவது பண்டுபோல் வேண்டியவர்று நடவாது சீர்பெற நடந்து ஓரிடத்தில் சேறல். பயில்வாவது செவிலி மாட்டுத் துயிலாது வேருேரிடத்துப் பயிலல். செலவு ஆயத்தோடு கூடாது தனியே செல்லல் என்பாரும், பயில்வு ஓரிடத்திலே நிற்றல் என்பாரும் உளர்.

47. பாங்கிமதிஉடன்பாட்டில் தலைவன் கூறுவனவாக வருவனவற்றை மட்டும் எடுத்துரைக்க. (வி. 57)

குறையுணர்தல்:

1. பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தல்—தலைவன் தோழியை இரந்து குறையுறுதற்கெண்ணல்;

2. ஊர் வினுதல்—தலைவன் தோழியை ஊர் வினுதல்.

3. பேர் வினுதல்—தலைவன்........வினுதல்.

4. கெடுதி வினுதல் — தலைவன் தோழியைத் தான் கெடுத்த வேழத்தை வினுவல்.

5. ஒழிந்தன வினுதல்—பேசாமைக் காரணம் வினுதல்.
இருவருமுள்வழி அவன்வரவுணர்தல்:

1. (தலைவன்) கையுறை ஏந்தி வருதல். (கையுறை—கையிற் கொடுப்பது.)

2. தலைவனவ்வகை வினுதல்.

**பாங்கியிற் கூட்டம்**

48. பாங்கியிற் கூட்டம்—பற்றி விளக்குக. (வி. 55)

அல்லது

பாங்கியிற் கூட்டம் இதனை நம்பியகப்பொருள் வழி நின்று நிறுவுக. (எம். ஏ. 62)

பாங்கி கூட்டிவைக்கத் தலைவன் தலைவியைக் கூடுதல் பாங்கியிற் கூட்டமாகும். பாங்கியிற் கூட்டம் பன்னிரண்டு வகைப்படும். அவையாவன:

1. இரந்து பின்னிற்றல்—தலைவன் பாங்கியின்பாற் குறையுற்று நிற்றல்.

2. சேட்படை—பாங்கி மறுத்தல்.

3. மடற் கூற்று—தலைவன் மடல் ஏறுவல் எனக் கூறுதல்.

4. மடல் விலக்கு—பாங்கி அவன் மடலேறுதலை விலக்கல்.

5. உடன்படல்—தலைவனது குறையை முடிக்க நேர்தல்: இது குறைநேர்தல் எனவும்படும்.

6. மடற்கூற்றொழிதல்—தலைவன் மடலேறாமல் அதனை ஒழித்தல்.

7. குறை நயப்பித்தல்—பாங்கி தலைவனது குறையை முடித்தற்குத் தலைவியை விரும்புவித்தல்.

8. நயத்தல்—தலைவி விரும்புதல்.

9. கூட்டல்—பாங்கி குறியிடத்துத் தலைவியை உய்த்தல்.

10. கூடல்—தலைவியைத் தலைவன் கூடுதல்.

11. ஆயங்கூட்டல்—பாங்கி தலைவியை அழைத்துச் சென்று பாங்கியரிடத்தில் சேர்த்தல்.

12. வேட்டல்—தலைவன் பாங்கியின் சொற்படி விருந்து விரும்பல்.

49. குறைநேர்தல், மடற்கூற்றொழிதல்—இவைகட்கு உரிய கிளவிகள் யாவை? (வி. 64)

குறை நேர்தலும் மடற்கூற்றொழிதலும் களவியலில் காணப்பெறும் பாங்கிற் கூட்டத்தின் வகைகளைச் சாரும். பாங்கி தலைவனது குறையை முடிக்க நேர்தல் குறை நேர்தலாகும். இது உடன்படல் எனப்படும். மடற்கூற்றொழிதல் என்பது தலைவனது குறையைத் தீர்க்கப் பாங்கி உடன்பட்ட காரணத்தால் தலைவன் 'நான் மடலேறுவல்' என்று முன்னர்க் கூறியபடி மடலேறாது அதனை விலக்குதல் ஆகும்.

தலைவி இளமைத் தன்மை பாங்கி தலைவர்க்கு உணர்த்தல், தலைவன் தலைவி வருத்திய வண்ணம் உரைத்தல், பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பல், தலைவன் தலைவி

செவ்வி எளிமை செப்பல், பாங்கி என்னை மறைப்பின் எளிதென நகுதல், அந்நகை பொறுது அவன் புலம்பல், பாங்கி தலைமகனைத் தேற்றல், பாங்கி கையுறை ஏற்றல், கிழவோன் ஆற்றல், ஆகிய ஒன்பதும் மேற்கூறிய இரண்டிற்கும் உரிய கிளவிகளாகும். ஆனால் இதனுள் பாங்கி கூற்றுயினவெல்லாங் குறைநேர்தற்கும் தலைமகன் கூற்றுயினவெல்லாம் மடற்கூற்றொழிதற்கும் உரியன எனக் கொள்ளுதல் வேண்டும்.

**மடலேறுதல்**

50. **மடலேறுதல் பற்றிக் களவியலுட்காணும் செய்திகளைத் தொகுத்துரைக்க.**

பாங்கியை இரந்து குறைபெறுது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்குத் தலைமகன் மடலேற்றினை உலகின்மேல்வைத்து உரைத்தலும் அம் மடலேற்றினைத் தலைமகன் தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி தலைமகள் அவயவத்தருமை சாற்றலும் தலைமகன் தன்னைத்தானே புகழ்தலும் பாங்கி அருளியல் கிளத்தலும் பாங்கி கொண்டுநிலை கூறலும் மடற் கூற்றிற்கும் மடல் விலக்கிற்குமுரிய கிளவிகள் ஆகும். இவற்றுள்ளே தலைமகன் கூற்றுயின வெல்லாம் மடற் கூற்றிற்கும் பாங்கி கூற்றுயினவெல்லாம் மடல் விலக்கிற்கும் உரியன.

தலைவன் மடலேறுவனென்று கூறுதல் மடற் கூற்றுகும். தோழி மடலேறுதலை விலக்குதல் மடல் விலக்காகும். தோழி குறை முடித்தற்கு நேர்ந்ததும் தலைமகன் மடலேறும் திறத்தை நீங்குதல் மடற்கூற்றொழிதலாகும். இவை மூன்றும் பாங்கியிற் கூட்டத்தின்பாற்படும்.

மடல் ஏறுதலாவது தன் குறைதீரப்பெறுத தலைமகன் பனங்கருக்காற் குதிரையும் பனையிலுள்ள மற்றவற்

ருன் வண்டில் முதலியனவும் செய்து, தன் உடம்பு முழு தும் நீறு பூசிக்கொண்டு, பூளைப்பூ, எலும்பு, எருக்கம்பூ ஆகியவற்றை மாலையாகக் கட்டித் தரித்துக்கொண்டு, அம் மாவிலேறி அதனைச் சிலர் ஈர்த்துச் செல்ல வீதியிற் செல்லுதல்.

ஒருசார் பகற்குறி

51. ஒரு சார் பகற்குறி நிகழ்ச்சிகள் யாவை?

அல்லது

ஒரு சார் பகற்குறியின் வகைகளை எழுதி அவ்வகை கள் ஒவ்வொன்றிற்குமுரிய விரிவுகளை முறைப்படுத்தி எழுதுக.

ஒரு சாரார் கூறும் பகற்குறி இரங்கலும் வன்புறையும் இற்செறிப்புணர்த்தலும் என மூவகையுடையதாகும்.

1. இரங்கல்—தலைவன் பிரிந்துழித் தலைவி வருந்துதலும் அதுகண்டு பாங்கி புலம்பலும் தஞ்சம் பெறாது தலைவன் வருந்துதலுமாம்.

2. வன்புறை—பாங்கி தலைவியை இடித்துரைத்தல்.

3. இற்செறிப்பு உணர்த்தல்—தலைவியைப் புறத்திற் போகாதபடி இல்லின் கண் செறித்தமையைப் பாங்கி தலைவனுக்கு உணர்த்துதல்.

விரி (14)

1. இரங்கல்—கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டிரங்கல், பாங்கி புலம்பல், தலைவன் வாராது பொழுது நீட்டிக்கத் தலைவி வருந்துதல், முன்னிலைப் புற மொழிதல், பாங்கியொடு பகர்தல், நீங்கற் கருமை தலைவி நினைந்திரங்கல், தலைவன் தஞ்சம் பெறாது நெஞ்சொடுகிளத் தல் என்ற ஏழும் இரங்கலுக்குரியன. இவ்வேழனுள்ளே

இறுதியினின்ற ஒன்றொழிந்த ஆறும் வரைதல் வேட்கைக்கும் உரியன.

2. வன்புறை—தலைவியைப் பாங்கி கழறல், தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல், தலைவிக்கு அவன் வரவு பாங்கி சாற்றல் என்னும் மூன்றும் வன்புறைக்குரியன.

3. இற்செறிப்புணர்த்தல்—சிறைப்புறமாக இற்செறிப்பு அறிவுறுத்தல், முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல், முன்னின்றுணர்த்தல், முன்னின்று உணர்த்தி ஓம்படை சாற்றல் என்ற நான்கும் இற்செறிப்புணர்த்துதற்குரியன. இற்செறிப்பாவது புறத்திற்போய் விளையாடாமல் இல்லினுள்ளே அடக்கிவைத்தல்.

52. கெடுதி வினாதல், உலகியலுரைத்தல், கொண்டு நிலை கூறல், கையடை கொடுத்தல், இத்துறைகட்கு விளக்கங் கூறுக. (வி. 51)

1. கெடுதிவினாதல்—(களவியல்; பாங்கிமதி உடன்பாடு; குறையுறவுணர்தல்) தலைவன் தோழியைத் தான் கெடுத்த வேழத்தை வினவல்.

2. உலகியலுரைத்தல்—தோழி தலைவனுக்குத் தலைமகளை உலக முறைப்படி வரைந்துகொள்ளென்று கூறுதல். (களவியல்; பாங்கியிற் கூட்டம்; இரந்து பின்னிற்றல், சேட்படை):

3. கொண்டு நிலை கூறல்—இறந்து படுமாறு நிற்குந் தலைவனைத் தாங்கிக்கொண்டு நிற்றற்குரிய சொற் கூறுதல். (களவியல்; பாங்கியிற் கூட்டம்; மடல் விலக்கு).

4. கையடை கொடுத்தல்–(வரைவியல்; உடன்போக்கு) பாங்கி தலைமகனைத் தலைவியிடம் கொண்டு சென்று கையிற் கொடுத்து ஓம்படை கூறல்.

"மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப

மறுகி ஞர்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே''—
இஃது யார் கூற்று? விளக்குக. (வி. 50)

இஃது தலைவன் கூற்று. இது பாங்கிக்குத் தலைமகன் மடலேற்றினை உலகின்மேல் வைத்து உரைத்தற்குச் செய்யுளாகும்.

**வரைவு கடாதல்**

53. வரைவு கடாதலின் வகைகள் எவை? (வி. 59)

பாங்கி தலைவனோடு வரைவு கூறி வினுதல் வரைவு கடாதல் ஆகும். அது பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என நான்கு வகைப்படும். பொய்த்தல் என்பது தோழியானவள் தலைவியைத் தலைவன் மணந்துகொள்ளும்படி செய்ய எண்ணித் தலைவனிடம் பொய்யாயினவற்றைத் தானே புனைந்து கூறுதலாகும். தலைவன் குறிக்கண் வருதலைத் தோழி குறிப்பாகவும் வெளிப்படையாகவும் மறுத்தல் மறுத்தலாகும். கழறல் என்பது தோழி 'நீ தலைவியை மணந்து கொள்ளாமல் களவின்கண் ஒழுகுதல் நின்னோடு முதலியவற்றிற்கு ஏற்றது அன்று' எனத் தலைவற்குக் கூறுதலாகும். தோழி தலைவனுக்கு மெய்யாயினவற்றைக் கூறுதல் மெய்த்தல் எனப்படும்.

54. தலைவன் வரைந்துகொள்ள வேண்டுமென்பதைக் குறிக்கும் கூற்றமைந்த துறைகளுள் ஆறனைக் குறித்து விளக்குக. (வி. 53)

1. அலரறிவுறுத்தல்—நின் களவொழுக்கம் அலராயிற்றென்று (பழி மொழி) தோழி தலைவனொடு கூறி வரைவு கடாதல்.

2. தாயறிவுறுத்தல்—நின் களவொழுக்கத்தைத் தாயறிந்தாளென்று தோழி தலைவனொடு கூறி வரைவு கடாதல்.

3. வெறியச்சுறுத்தல்—தலைவியின் நோய் தணிக்கச் செவிலியும் நற்றாயும் வெறியாடலை விரும்பினர் என்று அச்சமுறுத்திக் கூறி வரைவு கடாதல்.

4. பிறர் வரைவுரைத்தல்—தலைமகளைப் பிறர் வரைய விரும்பினரென்று அச்சமுறுத்திக் கூறி வரைவு கடாதல்.

5. வரைவெதிர்வுரைத்தல் — தலைமகனை நீ வரைய வேண்டிய அந்தணரோடுவரின் நமர் நின்னை ஏற்றுக் கொள்வரென அவர் உடன்பாடு கூறி வரைவு கடாதல்.

6. வரையுநாளுரைத்தல்—உலகத்து மணம்புரியுநாள் வந்ததென்று கூறி வரைவு கடாதல்.

ஒருவழித்தணத்தல்

55. ஒருவழித்தணத்தல் என்பதனை விளக்கி அதன் வகையினையும் எழுதுக. (வி. 64)

வரைவு கூறிய பாங்கியொடு வரைதற்கு உடன்பட்ட தலைமகன் தன் ஊர்க்கு ஒருவழிப்போய் வருகிறேன் என்று கூறிப்போதல்.

வகை: செலவறிவுறுத்தல், செலவுடன்படாமை, செலவுடன்படுத்தல், செலவுடன்படுதல், சென்றுழிக்கலங்கல், தேற்றி ஆற்றுவித்தல், வந்துழிநொந்துரை.

பன்னிருகிளவிகள் (விரி)

1. தன் பதிக்ககற்சி (பிரிதல்) தலைவன் சாற்றல்—செலவறிவுறுத்தல்.

2. பாங்கி தலைவனைச் செலவு விலக்கல்—செலவுடன்படாமை.

3. தலைவன் நீங்கல் வேண்டல்—செலவுடன்படுத்தல்.
4. தலைமகனைப் பாங்கி விடுத்தல்—செலவுடன்படுதல்.
5. தலைவிக்கு அவன் செலவுணர்த்தல்—செலவறிவுறுத்தல்.
6. தலைவி நெஞ்சொடு புலத்தல்—சென்றுழிக் கலங்கல்.
7. காமமிக்க கழிபடர்கிளவி—சென்றுழிக் கலங்கல்.
8. தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்—தேற்றியாற்றுவித்தல்.
9. தலைமகன் வந்தமை உரைத்தல்—தேற்றியாற்றுவித்தல்.
10. வந்தோன் தன்னொடு நொந்து வினுதல்—வந்துழி நொந்துரைத்தல்.
11. தலைவன் பாங்கியொடு நொந்து வினுதல்—வந்துழி நொந்துரைத்தல்.
12. தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை கூறல்—வந்துழி நொந்துரைத்தல்.

**வரைவின் இலக்கணம்**

56. வரைவின் இலக்கணம் கூறி வரைவுக்குரிய கிளவிகள் இன்னவென விளக்குக. **(வி. 53, 56)**

அல்லது

வரைவியலில் கூறப்படும் கிளவித்தொகைகளை எழுது. **(வி. 64)**

தலைவன் தலைவியைக் குரவர் முதலாயினுர் உடன்பட்டுக் கொடுப்ப மணம்புரிந்து கொள்ளுதலும் கொடாமை மணம்புரிந்து கொள்ளுதலும் வரைவாகும். வரைவுமலிவும், அறத்தொடு நிலையும் வரைவிற்குரிய கிளவியின்

தொகையாகும். வரைவு மலிதலாவது வரைவு தொடங்கி நடக்கும் முயற்சி மிகுதல். அறத்தொடு நிற்றலாவது களவை வெளிப்படுத்தி நிற்றல்.

57. "தண்டார் தழுவிய வேலண்ணல் வாணன்றென்
றஞ்சை வெற்பில்
வண்டார் குழலிதன் வண்ணமுங் கண்ணும்
வடிவுமுன்னாள்
கண்டா ரறியும் படியன வேயல்ல காரணமொன்
றுண்டா லுயிரனை யாயயி ராம லுரை
யெனக்கே"

—இஃது எத்துறைக்கு மேற்கோள்? (வி. 63)

இஃது தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதற்குச் செய்யுளாகும். இது செவிலி அறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளுள் ஒன்றாகும். மேலும் இது வரைவியலைச் சாரும்.

**உடன் போக்கு**

58. உடன்போக்கின் காரணமும் நிகழும் திறமும் வரைக. (வி: 53, 56)

களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை மூன்றினுள் உடன் போக்கும் ஒன்றாகும். உடன் போக்கு என்பது உடன் போதல் என்று பொருள்படும். உடன்போக்கு எட்டுவகையினையுடைத்து. அவை கீழே தரப்பட்டுள்ளன.

1. போக்கறிவுறுத்தல் — பாங்கி தலைவியை உடன் கொண்டு செல்லும்படி தலைவனுக்குச் சொல்லுதல்.
2. போக்குடன்படாமை—தலைவனும் தலைவியும் அதனை மறுத்தல்.

3. போக்குடன்படுதல்—உடன்கொண்டு செல்லுதலன்றித் தலைவிக்கு வேறு தஞ்சம் இன்மையைத் தலைவனுக்கும், கற்பின் மேன்மையைத் தலைவிக்குங் கூறி, அவ்விருவரையும் உடன்போக்கிற்கு உடன் படும்படி செய்தல்.

4. உடன்படுதல் — உடன்போக்கிற்குத் தலைவனும் தலைவியும் சம்மதித்தல்.

5. போக்கல்—தலைவனுடன் தலைவியைப் பாங்கி செல்ல விடல்.

6. விலக்கல்—தலைவன் தலைவியின் தளர்ச்சி கண்டு அவளுடன் ஓரிடத்தில் தங்கியபோது கண்டோர் அன்பினால் போக்கை விலக்கித் தங்கள் பாடியில் தங்கிச் செல்லும்படி கூறுதல்.

7. புகழ்தல்—தலைவன் தலைவியை உவந்து கூறுதல்.

8. தேற்றல்—கண்டோர் தலைவன்பதி அணிமையானமையைக் கூறி விடுப்பத் தலைவனுடன் சென்ற தலைவிக்குத் தன்பதி அடைந்ததனைக் கூறித் தலைவன் அவளைத் தேறச் செய்தல்.

59. பாங்கியிற் கூட்டம், உடன் போக்கு—இவைகளை நம்பியகப்பொருள் வழிநின்று விளக்குக (எம். ஏ. 64)

*விடைகளை முன்னர்க் கண்டுகொள்க:*

**கற்பொடு புணர்ந்த கவ்வை**

60. கற்பொடு புணர்ந்த கவ்வையாவது யாது? அதன் வகைகள் யாவை? (வி. 58)

*அல்லது*

கற்பொடு புணர்ந்த கவ்வை பற்றி நம்பியகப்பொருள் வழிநின்று நவிலுக. (எம். ஏ. 63)

கற்பொடு புணர்ந்த கவ்வை என்பது களவு வெளிப் பாட்டிற்குரிய கிளவித் தொகையில் ஒன்றாகும். தலைவி தலைவனுடைய உடைமையாய்க் கற்பொடு கூடியிருத்தலை அயலார் விரவிய சேரியினர் பலரும் அறிதல் கற்பொடு புணர்ந்த கவ்வை (அலர் வெளிப்பாடு) ஆகும். இது ஐந்து வகைப்படும்.

1. செவிலி புலம்பல்—தன் புதல்வி காதலனுடன் சென்றதனை உணர்ந்து செவிலி புலம்பல்.

2. நற்றாய் புலம்பல்—தன் புதல்வி காதலனுடன் சென்றதனை உணர்ந்து நற்றாய் புலம்பல்.

3. கவல் மனை மருட்சி—நற்றாய் வீட்டின்கண் இருந்து வருந்துதல்.

4. கண்டோர் இரக்கம்—தலைவியின் தோழிமார்களும் தாயும் வருந்துதலைக் கண்டோர் இரங்கிக் கூறுதல்.

5. செவிலி பின் தேடிச் சேறல்—செவிலி தலைவியைப் பின்னே தேடிக்கொண்டு செல்லுதல்.

**அனைமருட்சி**

61. 'எனவிவை ஐந்து மனை மருட்சிக்குரிய'—அனைமருட்சி யாது? ஐந்தும் யாது?

அல்லது

அனை மருட்சி என்பது யாது? விளக்குக. (வி. 57)

அனைமருட்சி-மனையின் கணிருந்து நற்றாய் வருந்துதல்.

நிமித்தம் போற்றல், நற்றாய் சுரந்தணிவித்தல், நற்றாய் தன் மகள் இளமைத் தன்மைக்கு உளமெலிந்து இரங்கல், நற்றாய் தன் மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்று இரங்கல் என்ற ஐந்தும் அனைமருட்சிக்குரியவாம்.

**மீட்சி**

62, மீட்சி என்பதனை நம்பியகப்பொருள் வழிநின்று நிறுவுக. (எம். ஏ. 62)

*வரைவியலில் காணப்படும் மீட்சி என்பது தலைவியைத் தேடிச் சென்ற செவிலி மீண்டு வருதலும் உடன்போன தலைவனும் தலைவியும் மீண்டு வருதலாகும்.*

*இதனது வகைகள் வருமாறு :*

1. *தெளிவித்தல்—செவிலி நற்றாய்க்குத் தலைவி நெடுந் தூரஞ் சென்று விட்டதனை ஒளியாது கூறி அவளைத் தெளிவித்தலும் உடன்போய் மீண்டு வருகையில் தலைவன் தலைவியினது ஊரை அடைந்தமையைக் கூறித் தலைவியைத் தெளிவித்தலுமாகும்.*
2. *மகிழ்ச்சி — தலைவிக்கு முன் செல்கின்றவர்கள் அவளது வரவினைப் பாங்கியருக்குக் கூறப் பாங்கியர் மகிழ்தலும் அவர்கள் சென்று நற்றாய்க்குக் கூறலும் அது கேட்ட நற்றாய் மகிழ்தலுமாம்.*
3. *வினுதல் — தலைவனுடன் திரும்பிவரும் தலைவியின் வருகையைக் கேட்ட நற்றாய், "தனது மகளைத் தன் மனைக்கே தலைவன் கொண்டு வருவனோ? அன்றித் தன் நெடுநகர்க்கே கொண்டு செல்வனோ!" என்று வெறியாடுபவனைக் கேட்டல்.*
4. *செப்பல்—முன்சென்றோர் பாங்கியருக்குத் தலைவியின் வருகையைச் சொல்லுதல்.*

**தன்மனை வரைதல்**

63. தன்மனை வரைதலின் விரி இன்ன எனக் கூறுக. (எம் ஏ. 56)

*தலைமகன் மீண்டு வந்து தன்மனைவியின் கண்ணே வரைதல் தன்மனை வரைதலாகும். இது, வினுதலும் செப்பலும் மேவுதலும் என மூன்று வகைப்படும். பணிமொழி நற்*

ரூய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினுதல், செவிலிக்கு இருளை வரைந்தமை உணர்த்தல், வரைந்தமைசெவிலி நற்ருய்க்கு உணர்த்தல், உற்ருங்கிருவருந் தலைவி இல் வந்துழித் தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்று என்றல், பாங்கி தானது முன்னே சாற்றியது உரைத்தல் என்ற ஐந்தும் தன்மனை வரைதலின் விரியாம். (இருளை—தோழி).

**கற்பு**

64. கற்பென்னும் கைகோளிலக்கணமும் கற்பிற்குரிய கிளவிகளும் தருக. (வி. 53, 56)

கற்பாவது தன் கணவனைத் தெய்வம் என்றுணர்வதோர் கொள்கை. அது உள்ளம் மகிழ்தலும், ஊடுதலும், ஊடலுணர்த்தலும், பிரிவும், பிறவும் பொருந்தியதாகும்.

இல்வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு, ஓதற்பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள் வயிற் பிரிவு என்ற ஏழும் வளமலி கற்பின் கிளவித்தொகையாகும்.

65. இல்வாழ்க்கை பற்றி நம்பியகப்பொருள் வழிநின்று நவிலுக. (எம். ஏ. 63)

தலைவனும் தலைவியும் இல்லின்கண் வாழும் வாழ்க்கையின் மேன்மையைக் கூறுதலே இல்வாழ்க்கை என்னும் கிளவியாகும். இது கற்பியலைச் சாரும்.

கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி, பாங்கி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி என்பன இல்வாழ்க்கையின் வகைகளாகும். அவற்றுள் கிழவோன் மகிழ்ச்சி என்பது தலைமகன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலால் விளங்கும் தலைவனது மகிழ்ச்சியாகும். தலைவி தான் வருந்தாதிருந்த

தன் காரணத்தைப் பாங்கிக்கு உரைத்தலால் விளங்கும் தலைவியின் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சியாகும். தோழியினது மகிழ்ச்சி பாங்கி மகிழ்ச்சியாகும். இது வரையும் நாளளவும் ஆற்றி இருந்தமையைத் தலைவியையும் தலைவனையும், தோழி வினவுதலாலும் மணமனை வந்த செவிலிக்குத் தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள அன்பையும் உறவையும் அவர்களின் வாழ்க்கையின் நலத்தினையும் கூறுதலாலும் விளங்கும். செவிலி மகிழ்ச்சி என்பது செவிலியிடத்துக் காணப்பெறுகின்ற மகிழ்ச்சியாகும். இதற்குக் காரணம் மணமனை சென்று வந்த செவிலி நற்றாய்க்குத் தலைவியின் கற்பின் தன்மையையும் தலைவன் தலைவி ஆகியோரது வாழ்க்கைச் சிறப்பையும் அவ்விருவர் அன்பினையும் உணர்த்தலே ஆகும்.

**உணர்த்த உணரா ஊடல்**

66. உணர்த்த உணரா ஊடல் பற்றி நம்பியார் உணர்த்துவன என்ன?

உணர்த்தவுணரா ஊடலாவது தெளிவித்தலாலே தெளிவு பெறாத ஊடல் என்பதாகும். தலைவி புதல்வற் பயந்து வெள்ளணி அணிந்து அதனைத் தலைவற்கு அறிவுறுத்தற்குச் சேடியை விடுப்ப, அவன் தலைவி தன்னைமருது ஏற்றுக்கொள்ளுதற்கு அவளை வாயிலாகுமாறு வேண்டுதல், புதல்வனைப் பயந்து தலைவி நெய்யாடியதனைத் தோழி தலைவற்குரைத்தல், தலைவன் தன் மனத்து உவகை கூர்தல், பாங்கி தலைவிக்குத் தலைவன் வரல் சாற்றல், தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல், தலைவி தலைவன் விடுத்த வாயில்களை மறுத்தல், பாணன் புலந்து கூறல், தலைவி விறலி வாயின் மறுத்தல், விருந்தொடு வந்துழித் தலைவி பொறுத்தல் கண்டு தலைவன் மகிழ்தல், ஊடல் வெளிப்படநோக்கிச் சீறேலென்று அவள் சீறடி தொழுதல்,

நீர் எனதுஅடிபணிதலை எமது தங்கையாராகிய பரத்தையர் காணின் என்னாய் முடியும் என்று தலைவி கூறல், அங்கவர் யாரையும் அறியேன் என்று தலைவன் கூறல், தலைவி காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல், பாங்கி தலைவியைப் புலவி தணித்தல், தலைவி புலவி தணியாளாகத் தலைவன் ஊடல், பாங்கி தலைவனை அன்பிலை கொடியை என்றிகழ்தல், பிற வும் உணர்த்தவுணரா ஊடற்குரியனவாகும். மேலும் மகனும் ஆற்றாமையும் வாயிலாகத் தலைவி வரவெதிர்க் கோடல், வந்த பாங்கியோடு மைந்தனைப் புகழ்தல், தலைவி தலைவனைப் புகழ்தல், பாங்கி தலைவியைப் புகழ்தல் என்பன வும் உணர்த்த வுணரர் ஊடற்குரியனவாம்.

**67. அறப்புறங்காவல், காலிற் சேறல், பிரிவிடையழுங் கல், வாயினேர்வித்தல்—இவற்றை விளக்குக.**

1. அறப்புறங் காவல்—காவற்றொழில், அறப்புறங் காவலும் நாடு காவலும் என இருவகைப்படும். அவற்றுள் அறப்புறங் காவலாவது, வரியில்லாத இறையிலி நிலத்தைக் காவல் செய்தலாகும். அறப் புறங் காவல் என்னும் இத்தொழில் அந்தணர் முதலிய எல்லார்க்கும் உரியதாகும்.

2. காலிற் சேறல் — அந்தணர் முதலிய நால்வரும் பிரிந்து நாடிடையிட்டுச் செல்லுங்கால் காலினாலே நடந்து செல்லுவர்.

3. பிரிவிடையழுங்கல் — தலைவன் பிரிந்துழித் தலைவி வருந்துதல். (கற்பியல்—பிரிவுழிக் கலங்கல்; கள வியல்—வரைவிடைவைத்துப் பொருள் வயிற் பிரித லின் காரணமாய் பிரிவுழிக் கலங்கல்; ஒரு வழித் தணத்தலில் தலைவன் சென்றுழிக்கலங்கல்.

4. வாயினேர்வித்தல் — தலைமகளை வாயில் ஏற்றுக் கொள்ளும்படி செய்தல். (கற்பியல்—பரத்தையிற் பிரிவு).

68. சேட்படை, ஓம்படை, அறத்தொடுநிற்றல், உடன் போக்கு, உணர்த்த உணரா ஊடல், வாயிற் கூட்டம் இவற்றைப் பொதுவாக விளக்கி திணைக்கு உரிமைப் படுத்துக. (வி. 54)

1. சேட்படை—பாங்கி தலைவன் குறையைத் தீர்க்க உடன்படாமல் மறுத்தல். (களவியல்—பாங்கியிற் கூட்டம்).

2. ஓம்படை—(பாதுகாப்பு) பாங்கி தலைமகளை ஆயத் துச் சேர்த்து மீண்டு வந்து தலைவனை எதிர்ப்பட்டு நின் வழிபாட்டிற்கிசைந்து நின் வரைப்பட்ட என் தோழியை நீ பாதுகாத்துக்கொள்ளென்று கூறல். (களவியல்—பாங்கியிற் கூட்டல்).

3. அறத்தொடு நிற்றல்–களவை வெளிப்படுத்திநிற்றல். (வரைவியல்).

4. உடன் போக்கு—தலைவன் தன் ஊருக்குத் தலைவி யைக் கொண்டு செல்லல். (வரைவியல்).

5. உணர்த்த உணரா ஊடல் — தெளிவித்தலாலே தெளிவு பெறாத ஊடல். அதாவது தீர்க்கத் தீரா ஊடலாகும். (கற்பியல்).

6. வாயிலிற் கூட்டம்—ஊடலைத் தணிக்கும் வாயில் களாலாகிய கூட்டம். ஊடலைத் தணிக்கும் வாயில் கள் முன்னரே கூறப்பட்டுள்ளன.

69. கெடுதி வினுதல், இருளை வம்பெனல், வெள்ளணி யணிந்து விடுதல்—இத்துறைகளை விளக்குக. (வி. 54)

1. கெடுதி வினுதல்—முன்னரே கூறப்பட்டுள்ளது.

2. இருளை வம்பெனல்—காலங்கண்டு புலம்பிய தலை விக்குப் பாங்கி இது காலம் அன்று, வம்பென்று

அவளை ஆற்றுவித்தல் காரணமாகக் காலம் மறைத்துக் கூறுதல். வம்பு—நிலையில்லது. (களவியல்).

3. வெள்ளணியணிந்து விடுதல்—தலைவி புதல்வற் பயந்து வெள்ளணியணிந்து அதனைத் தலைவற் கறிவுறுத்தற்குச் சேடியை விடுப்ப, அவன் தலைவி தன்னை மறாது ஏற்றுக்கொள்ளுதற்கு அவளை வாயிலாகுமாறு வேண்டுதல். (கற்பியல்—உணர்த்த வுணரா வூடல்).

70. இரந்து பின்னிற்றல், தெய்வத்திறம் பேசல், வாயில் பெற்றுய்தல், பயந்தோர்ப் பழிச்சல், கழற்றெதிர் மறுத்தல்—இவற்றை விளக்குக. (வி. 57)

1. இரந்து பின்னிற்றல்—தலைவன் தலைவியை இரந்து வழிபட்டு நிற்றல். (களவியல்—தலைவியிற் புணர்ச்சி விரி).

2. தெய்வத்திறம் பேசல்—தலைவன் ஊழின் கூறுபாட்டைக் கூறுதல். (களவியல்—வன்புறை).

3. வாயில் பெற்றுய்தல்—தலைவிக்குச் சிறந்தாளாகிய பாங்கியின் சார்பினைத் தலைவன் பெற்று உய்ந்தேனென்று எண்ணுதல். (களவியல்—பிரிவுழிக்கலங்கல்).

4. பயந்தோர் பழிச்சல்—தலைவியின் பெற்றோரைத் தலைவன் வாழ்த்துதல். (களவியல்—பிரிவுழிக் கலங்கல்).

5. கழற்றெதிர் மறுத்தல்—தலைவன் பாங்கன் கண்டித்ததை மறுத்துக் கூறுதல். (களவியல்—பாங்கற் கூட்டத்து விரி).

71. செலவழுங்கல் என்பது என்ன? எதன் பொருட்டு அது நிகழும்? (வி. 56)

ஓதற்ருெழில் முதலிய ஐந்து தொழிற் கண்ணும் பிரிந்து செல்லும் தலைமகன் செல்லுதற்கன்றிச் செல்லாது தவிர்த்தற்கும் உரியனுகும். தலைமகளையும், தன் மனத்தை யும் கலங்கலினின்றும் (அலமரல்) நீக்கும் பொருட்டு அது நிகழும். பிரிந்து செல்லக் கருதிய தலைமகனுக்கு இல்லின் கண்ணேயிருந்து செலவழுங்குதலும் இடைச் சுரத்தின் கண்ணே செலவழுங்குதலுமாகிய இரண்டும் உரியனவாகப் பொருந்தும்.

72. விளக்குக :— 1. வன்புறை 2. இடந்தலைப்பாடு 3. அல்லகுறி 4. வருந்தொழிற்கருமை 5. வன்பொறை 6. முன்னிலைப் புறமொழி.

1. வன்புறை : (களவியல், கற்பியல் இரண்டிலும் வரும்).

1. களவியல்—கிளவித் தொகையில் ஒன்று. தலைவி ஐயுற்றவழித் தலைவன் ஐயுறவுதீர வற்புறுத்திக் கூறல். இது, ஐயந் தீர்த்தல், பிரிவறிவுறுத்தல் என இரண்டு வகைப்படும்.

2. களவியல்—ஒருசார் பகற்குறி. பாங்கி தலைவியை இடித்துரைத்தல்.

3. களவியல்—வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு. தலைவிக்கு வற்புறுத்தல்.

4. கற்பியல் — பிரிவு. பிரிவுழிவருந்தும் தலைவியை இகுளை இடித்துக் கூறல்.

2. இடந்தலைப்பாடு—இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து சென்ற தலைமகன் அடுத்த நாள் அவ்விடத்தே வந்து தலைமகளைக் கூடுதல்.

3. அல்லகுறி—தலைவனும் தலைவியும் தோழியும் தங்களுக்குள் குறித்துக்கொண்டபடி தலைவனுல் நிகழ்த்தப்படுதற்குரிய புள்ளெழுப்புதல், நீரிற் கல்லெறிதல் முதலிய

குறிகள் பிறிதொன்றனுல் நிகழ்த்தப்படத் தலைவி குறிக்கண் வந்து தலைவனைக் காணுது சென்ருள். பிறகு தலைவன் அங்கு வந்து தலைவியைக் கூடப்பெருமற் சென்ருன். இங்ஙனம் தலைவனுல் நிகழ்த்தப்படுதற்குரிய குறிகள் பிறிதொன்றினுல் நிகழ்த்தப்படுதலின் அது அல்ல குறியாயிற்று. (களவியல்).

4. வருந்தொழிற்கருமை—தலைவன் இரவுக் குறிக்கண் வருவதற்கு இடையூருகவே நிகழ்ச்சிகள் நிகழ்தல். (களவியல்).

5. வன்பொறை: (களவியலிலும் கற்பியலிலும் வரும்).

1. களவியல்—வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல். தலைவன் பிரிவினுல் உளதாகிய பொறுத்தற்கரிய துயரத்தைத் தலைவி பொறுத்துக்கொண்டிருத்தல்.

2. கற்பியல்—பிரிவு. தலைவன் பிரிவைத் தலைவி வலிதிற் பொறுத்தல்.

6. முன்னிலைப் புறமொழி-முன்நிற்பாருக்குக் கூறவேண்டுவனவற்றைப் பிறருக்குக் கூறுவார்போலக் கூறுதல்,

73, வன்புறை, அல்லகுறி, இகுளை வம்பென்றல்—
இவற்றை விளக்குக. (வி. 63)

விடையினை முன்னர்க் கண்டுகொள்க.

74. குறையுறவுணர்தலை இன்னதென விளக்கி ஒருதாரணமுந் தருக. (வி. 53)

குறையுறவுணர்தலென்பது பாங்கி மதியுடம்பாட்டின் ஒருவகையாகும். குறையுறவுணர்தலாவது தலைமகன் குறையுற்று நிற்றலால் பாங்கி உணர்தல். இது களவியல் பகுதியைச் சாரும்.

'தண்பட்ட மேவும் வயற்றஞ்சைவாணன்
தமிழ்ச்சிலம்பிற்
பண்பட்ட தேமொழிப் பாவையன் னீர்பனை
பட்டகையும்
மண்பட்ட கோடு மதம்பட்ட வாயும் வடிக்கணை தோய்
புண்பட்ட மேனியு மாய்வந்த தோவொரு
போர்க்களிறே'. (உ - ம்)

இப்பாடல் குறையுற வுணர்தலில் கெடுதி வினாதல் என்னும் துறைக்கு உதாரணமாகும். தலைவன் தோழியைத் தான் கெடுத்த வேழத்தை வினவல் கெடுதி வினாதலாகும்.

75. 'ஆகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன் வருந்தொழிற் கருமை பொருந்துதலுரிய'—இதிற் குறிப்பிட்ட ஏழு எவை? (வி. 58)

தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரற் காட்டுதல் என்ற ஏழும் இரவுக் குறிக்கண் தலைமகன் வருந்தொழிற்கருமை பொருந்துதற்குரியன வாகும். இது இரவுக் குறியிடை யீட்டின் வகைகளில் ஒன்றாகும்; களவியல் பகுதியைச் சாரும். தலைவன் இடைவிடாது வருதற்கு உளதாம் தடை வருந்தொழிற்கருமை யாகும். தாய் துஞ்சாமைக்குக் காரணம் மகளுக்கு அறிவும் ஆசாரமும் கற்பித்திருத்தல் எனவும் நாய் துஞ்சாமைக்குக் காரணம் ஊர்கொண்ட பெருவிழா எனவும் கூறுவர். (காவலர் கடுகுதல்—நகர் காப்பாளர் விளக்கோடு விரைந்து வருதல். அல்லுக்குறி—இரவுக்குறி.)

76. 'கள்வரைக்கண் காட்டுவர் போலக்
கொள்ளுங் குரல் கூவுங் கோழி'—
இது எதற்கு உதாரணமாகக் கூறப்பட்டது? (வி. 52)

*கோழி குரற் காட்டுதற்குச் செய்யுள். (களவியல்—இரவுக்குறி இடையீடு—வருந்தொழிற் கருமை.)*

77. 'என்மானை யென் மனையிற் றருமோ தன்னையீன்ற தானெனக்கே'—
திணையும் இடமும் புலப்படுத்துக. (வி. 55)

*இது நற்றாய் தலைமகனுளங்கொள வேலனை வினாதலுக்குச் செய்யுளாகும். (வரைவியல்—மீட்சி விரி). மகள் வருகின்றாளெனக் கேட்ட தாய் நம் மனைக்கே வருமோ, தன் நெடுநகர்க்கே கொண்டுபோமோ எனத் தலைமகன் குறிப்பறிதற்கு வேலனை (வெறியாட்டாளனை) வினவா நிற்றல்.*

78. 'எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண்ணிலவே'—
இது எதற்கு எடுத்துக் காட்டாக வந்தது? (வி. 57)

*இது நிலவு வெளிப்படுதற்குச் செய்யுளாகும்.*

*(களவியல்—இரவுக் குறி இடையீடு—வருந்தொழிற் கருமை).*

**அகப்பாட்டுறுப்புக்கள்**

79. அகப்பாட்டுறுப்புக்களாகக் கூறப்படுவன யாவை? அவற்றுள் நான்கினை விளக்குக. (வி. 57)

*அல்லது*

அகப்பாட்டுறுப்புக்கள் யாவை? விளக்கி வரைக.
(எம்.ஏ,55)

80. கைகோள், கிளவி, துறை, கூற்று-விளக்குக. (வி. 51)

*திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை என்ற பன்னிரண்டும் அகப்பாட்டுறுப்புக்களாகும்.*

கைகோளென்பது ஒழுக்கமாகும். அது களவும் கற்புமென இரண்டு வகைப்படும். அகப்பொருளில் கூற்றிற்கு உரியோர், உரியரல்லாதார் இவர் எனக் கூறி கூற்று நிகழும் இடங்களைக் கூறுதல் கூற்று எனப்படும்,

கேட்போர் என்பது தலைவன், தலைவி இருவரது கூற்றினைக் கேட்கும் பார்ப்பான் முதலாகிய பதின்மரையும் பார்ப்பானும் அறிவருமாகிய இருவர் கூற்றினைக் கேட்கும் தலைமகன் முதலாகிய எல்லோரையும் குறிக்கும்.

நெறிப்பட்ட கருமமான களவும், கற்பும் நிகழும் நிலம் இடமாகும். இறந்த காலமும் நிகழ் காலமும் எதிர் காலமும் என அவைவே நின்று உலகத்துள்ள பொருள்களை அறியும்படியாக நடப்பது காலம் என்னும் உறுப்பாகும். இத்தன்மையர்க்கு இவ்விடத்து இன்னது தரும் என்னும் குறிப்பினை வெளிப்படுப்பது முன்னமாகும்.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை என்னும் எட்டுவகை மெய்ப்பாடும் அவ்விடத்து நிகழும் பொருளைக் கேட்டோர் மெய்யின் கண்ணே வெளிப்பட நிற்பன மெய்ப்பாடு என்னும் உறுப்பாகும்.

ஒரு சொல்லேயாயினும், ஒரு குறிப்பேயாயினும் கூட்டிப்பொருள் முடித்தல் வேண்டி நிற்பது எச்சமாகும். இத்திணைக்கே இப்பொருள் உரித்தாவது என்னுமல் எல்லாத் திணைக்கும் பொதுவாய் நிற்கும் நிலைமை, பொருள் வகையாகும்.

மேற்கூறிய மக்களும் மாவும் முதலாயினவன்றிப் பிற ஒன்றின் ஆயினும் அவற்றை முன் சொல்லியவற்றோடும் பொருந்தும் வண்ணம் ஆராய்ந்து இலக்கணம் வழுவாத படித் தன்னையன்றி உரைப்போரும் கேட்போரும் உண்டாகலின்றி, கவி சொல்லும் புலவன், தானே கூறுவது துறை என்னும் உறுப்பாகும்.

81. அகப்பாட்டின் உறுப்புக்களை ஓர் உதாரணச் செய்யுளைக் கொண்டு விளக்குக. *(வி. 64)*

*"உழையும்வெங் காளமும் போலுங்கண் ணுளொரு
காலமுள்ளங்
குழையுமெம் பாலென்று கொண்டநெஞ் சேகலிக்
கோடை மண்மேன்
மழையுமந் தாரமும் வந்தன்ன வாணன்றென்
மாறையின் மாந்
தழையுநம் போலிங்ங னேகவின் வாடத்
தவஞ் செய்ததே"*

என்னும் பாட்டிற்குத் திணை - குறிஞ்சி; கைகோள் - களவு; கூற்று - தலைமகன் கூற்று; கேட்போர் - நெஞ்சு; இடம் - தனியிடம்; முன்னிலையுமாம். காலம் - இறந்த காலம்; பயன் - குறை நேர்தல். முன்னம் - இவ்விடத்து எனக்கிது தகும் என்பது; மெய்ப்பாடு - மருட்கை; எச்சம் - இனியென் செய்வேமென்னுஞ் சொல்; பொருள்வகை - சொற்றொறும் சொற்றொறும் பொருளாற்று வந்தமையாற் புனல்யாற்றுப் பொருள்கோளாம்.

82. அகப்பொருள் கூற்றிற்கு உரியவர், உரியரல்லாதவர் இவர் எனக் கூறுக.

*களவில் கூற்றிற்குரியார்:*

*தலைவன், தலைவி, பார்ப்பனப் பாங்கன், பாங்கி, செவிலி.*

*கற்பில் கூற்றிற்குரியார்:*

*நற்றாய், கண்டோர், பாணர், கூத்தர், விறலி, பரத்தை, அறிவர்.*

*கூற்றிற்கு உரிமை இல்லாதார்:*

*பயந்தோன், ஊரவர், அயலவர், சேரியோர்.*

83. நற்றாய் யாரோடு கூறுவள், யாரோடு கூறாள்?
(எம்.ஏ.;வி. 56)

நற்றாய் கூற்று நிகழாத இடம்: தலைவன் தலைவியுடன் நற்றாய் கூறாள்.

நிகழும் இடம்: உடன்போக்கின் பின்னர் நற்றாய் அந்தணர், தெய்வம், அயலவர், அறிவர், மனத்துன்பத்தினை உணர் பவர், செவிலி ஆகியவரோடு உரையாடுவாள்.

84. "சாற்று எழுவரும் தலைவன் தலைவியொடு"—ஈண்டுக் கூறிய எழுவரை விளக்குக. (வி. 62)

பார்ப்பான், பாங்கன், பாணன், கூத்தர், விறலியர், பரத்தையர், அறிவர் ஆகிய எழுவரும் தலைமகனோடும் தலைமகளோடும் இடந்தொறும் பொருந்தியவற்றைக் கூறுவர்.

85. அகப்பொருள் விளக்கத்தில் மெய்ப்பாடு விளக்கப்படு வது ஏன்? (வி 55)

விடை முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

**பொருள் வகை**

86. உள்ளுறை யுவமம், இறைச்சிப் பொருள்—இவை புலப்படு நெறி காட்டுக. (வி. 53, 54)

87. உள்ளுறையுவமம் எங்ஙனம் வரும்? (வி. 51)

அகப்பாட்டிடத்து, உவமைப் பொருளும் இறைச்சிப் பொருளும் என்று கூறப்பட்ட இரண்டு வகைப் பொருளும் வரும். அவற்றுள், உவமப் பொருள் உள்ளுறை உவமம், வெளிப்படை உவமம் என இருவகைப்படும். இவ்விரண்டு உவமத்துள்ளும் உள்ளுறையுவமமாவது ஆராய்ந்தறியும் பகுதியினைக்கொண்டு புள்ளொடும் விலங்கொடும் பிற வொடும் தோன்றும்.

"இழைவிளை யாடு மிளமுலை சாயற் கிடந்தமஞ்ஞை
கழைவிளை யாடுங் கடிப்புனங் காத்துக் கலையகலா
துழைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு
முன்பொருட்டான்
மழைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே".
(உ - ம்)

இப் பாடலில் மானைப் பிரியாது கலை விளையாடும் எனவே அதுபோல் நீயும் தலைவியைப் பிரியாது விளையாடுக என உள்ளுறையுவமம் விலங்கொடு தோன்றியது.

தொழிலும், பயனும், வடிவும், நிறனும் புலப்படுமாறு நின்று விளங்குவது வெளிப்படை உவமமாகும். இறைச்சிப் பொருளாவது தெய்வ முதலாகிய பொருளின் கண்ணே பிறக்கும்.

**அகப்புறப் பெருந்திணை**

88. அகப்புறப் பெருந்திணை யுணர்த்துக. (வி. 54)

மடலேறுதல், விடைதழால், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபதநிலை, தபுதாரநிலை, என்பன இயற்பெயர் கூடாவாயின் அகப்புறப் பெருந்திணைக்காகும். எனவே இயற்பெயர் கூடுமாயின் புறப்பொருட் பெருந்திணை என்பதாயிற்று.

இவற்றுள் மடலேறுதலாவது, தன்குறை தீறப்பெறாத தலைமகன் பனங்கருக்காற் குதிரையும், பணையிலுள்ள மற்றவற்றால் வண்டில் முதலியனவும் செய்து, தன் உடம்பு முழுவதும் நீறு பூசிக்கொண்டு, பூளைப்பூ, எலும்பு, எருக்கம்பூ ஆகிய இவற்றை மாலையாகக் கட்டித் தரித்துக்கொண்டு, அம்மாவிலேறி அதனைச் சிலர் ஈர்த்துச்செல்ல வீதியிற் செல்லுதல் ஆகும். வெல்லுந் திறலுடைய தலைமகன் தான் விரும்பிய தலைமகளை மணத்தற் பொருட்டுக் கொல்லுந்

திறலமைந்த ஓர் எருத்தினைப் பிடித்துத் தழுவி அடக்குதல் விடை தழாஅல் ஆகும். கோல்வளையாளை முற்றத்துறந்த துறவு குற்றிசையாகும். தன்னை முற்றத்துறந்து நீங்கிய தலைமகனைக் கோற்றொடி நங்கை முன்னின்று பழிதூற்றுதல் குறுங்கலியாகும். சுரத்திடையில் தலைவியை இழந்த தலைமகன் வருந்தும் நிலை சுரநடை எனப்படும். முதுபாலை என்பது சுரத்தின்கண் தலைவனை இழந்த தலைமகள் மனங்கவன்று புலம்பும் நிலை ஆகும், தலைமகனை இழந்த தலைமகள் தவமேற் கொண்ட நிலை தாபதநிலை என்று சொல்லப் படும். ஆனால் தபுதார நிலை என்பது மனைவியை இழந்த பின் கொழுநன் தனிமையில் இருக்கின்ற நிலை ஆகும்.

**அகப்பாட்டினுள் பாடப்படுவோர்**

89. அகப்பாட்டுட் குறிக்கப்பெறும் தலைவர் யாவர்? அவர்க்குப் பயின்றுவரும் பெயர்கள் யாவை? *(வி. 54)*

*அல்லது*

அகப்பாட்டுத் தலைமகட்குக் கூறப்படும் பெயர்களை வகைப்படுத்திக் கூறுக. *(வி. 59)*

அகப்பாட்டினுட் பாடப்படுவோர் பாட்டுடைத் தலைமகனும் கிளவித் தலைமகனும் ஆவர். இவ்விருவருள்ளும் உயர்ந்தோன் பாட்டுடைத் தலைவனாகும். இவ்விருவருக்கும் நிலப்பெயர் முதலாகிய ஐந்து பெயரும் கூறுவர். அவற்றுள் நிலப்பெயராவன, மலைநாடன், சோணாடன், பாண்டியநாடன் என்றாற் போல்வனவும்; சிலம்பன், ஊரன் என்றாற் போல்வனவுமாம். வினைப்பெயராவன, கடம்பெறிந்தான், தூங்கெயிலெறிந்தான் என்றாற்போல்வனவும்; கோவலன், வேட்டுவன் என்றாற் போல்வனவுமாம். பண்புகொள் பெயராவன, நெடுஞ்சேரலாதன், பெருவழுதி என்றாற்போல்வனவும்; தோன்றல், அண்ணல் என்றாற் போல்வனவுமாம்.

குலப்பெயரர்வன, சேரன், சோழன் என்றாற் போல்வனவும், குறவன், ஆயன் என்றாற் போல்வனவுமாம். இயற்பெய ராவன குரவராதியராற் பெற்ற பெயராகும். இப் பெயர்க ளுள், குரவராதியராற் பெற்ற பெயரினைக் கிளவித் தலை மகற்குப் புலவர்கள் சொல்ல மாட்டார்கள்.

90. பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் எனப்படு வார் யாவர்? பாடலொன்றைக் கொண்டு குறிப் பிடுக. (வி. 54)

'அரிற்பவர் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் நெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சிக்
கோன் முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே',

இப் பாடலில் பாட்டுடைத் தலைமகன் கிளவித் தலை மகன் என்னும் இருவர் பெயரும் வந்தது. அஞ்சி என்பது பாட்டுடைத் தலைவன் பெயர். ஊரன் என்பது கிளவித் தலைவனைச் சுட்டிய பெயர்.

# 3. புறப்பொருள் வெண்பாமாலை

1. புறப்பொருள் வெண்பாமாலை பாயிரம் குறிப்பிடும் வரலாற்றுச் செய்திகள் என்ன? (வி. 51)

*புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியராகிய ஐயனரிதனார் சேரர் பரம்பரையில் உதித்தவர் என்பதும் இதற்கு முதனூல் ஆசிரியர் அகத்தியனாருடைய மாணாக்கர் பன்னிருவராலும் அருளிச் செய்யப்பட்ட பன்னிரு படலம் என்பதும் அகத்தியரானவர் தேவர்கள் வேண்டிக்கொள்ள பொதியமலையில் இருந்தார் என்பதும் சேரர்கள் வில் வித்தையிற் சிறந்து விளங்கினாரென்பதும் புறப்பொருள் வெண்பாமாலை பாயிரம் குறிப்பிடும் வரலாற்றுச் செய்திகளாகும். மேலும் பாயிரச் செய்யுளானது ஆசிரியர் இந்நூலினை இவ்வுலகத்திலுள்ளவர் குற்றமற்ற புறப்பொருளை வழுவுதலின்றித் தெரிந்துகொள்ளுதற் பொருட்டு இயற்றினார் என்றும் கூறுகின்றது.*

2. வெட்சி, கரந்தை ஆகிய இரு திணைகளாலும் அறியலாகும் பழங்கால வரலாற்றுக் குறிப்புக்கள் யாவை? (வி. 55)

*பகைவருடைய பசுக்களைக் கவர்தல் வெட்சித் திணையாகும். இதற்கு வெட்சி மரத்தின் செந்நிறமான பூவையேனும் மாலையையேனும் சூடுதல் மரபாகும். மணிமுடி தரித்த மன்னர்களில் ஒருவன் தன் மாற்றானோடு போர் புரிய எண்ணி, தன் வீரர்களை விளித்துப் பகைவனின் ஆநிரைகளைக் கவர்ந்து வரும்படிப் பணிக்க, வீரர்கள் துடியை முழக்கி, வெட்சிப் பூவைச் சூடி, நற்சொல் கேட்டுப் பின்னர் பகைவரது பசுப்புலம் நோக்கிச் செல்வர். இதற்*

கிடையில் ஒற்றர்கள் வந்து ஆநிரையைப்பற்றித் தாம் அறிந்தவற்றை அறைவர். பின்னர் வீரர்கள் பகைவரது நிரை நின்றுள்ள குறுங்காட்டின் வாயில்களைச் சுற்றிநின்று, காவலாளரைக் கொன்று குவித்து நிரைகளைக் கைக் கொண்டு, எதிர்த்த பகைவரொடு பொருது வென்று, நிரையைக் காட்டுவழியிடத்து செலுத்திச் செல்வர். ஊரை அடைந்ததும் வீரர்கள் நிரையினை ஒவ்வொருவரது தகுதிக்கு ஏற்பப் பகுத்து அளித்து, மதுவை அருந்தி மனங் களித்து ஆடி மகிழ்வர். மேலும் கிணைப்பறை கொட்டும் பொருநன், பாணன், விறலி முதலியவர்களுக்கும் மது வழங்கப்படும். ஒற்றர்கள், கரிக்குருவியின் நிமித்தத்தை அறிந்து கூறியவர்கள், துடிகொட்டுவோர் முதலியவர்களுக்குரிய சிறப்பினைச் செய்த பின்னர் வீரர்கள் துர்க்கையினை வழிபடுவர். வீரர்களின் இல்லக் கிழத்தியர் வள்ளி வேடம் கொண்டு முருக பூசை பண்ணும் வேலனோடு வெறியாட்டு ஆடி அகங்குளிர்வர்.

பகைவர் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டல் கரந்தைத் திணையாகும். கொட்டைக்கரந்தை என்னும் பூடின் பூவினைச் சூடுதல் இதற்கு உரியதாகும். பகைவர் தம்நாட்டின் நிரைகளைக் கவர்ந்து சென்றதை அரசனது ஆணைப்படி அறையப்படும் பறையினால் அறிந்த வீரர்கள், கரந்தைப் பூவினைச் சூடி, வீரக்கழலைக் காலிடத்தே கட்டி, வில்லினைக் கையிலே கொண்டு, பகைவரைப் பின்தொடர்ந்து சென்று, அவரைக் கண்டு பொருது வென்று நிரையை மீட்டு வருவர். போரில் இறந்துபட்ட வீரர்களைப் பாணர்கள் புகழ்ந்து கூறுவர். வெற்றிபெற்ற வீரர்கள் தம் மேம்பாட்டைத் தலைவனிடம் கூறி மகிழ்வர். அவர்களுக்கு அரசன் நஞ்சை முதலியவற்றைக் கொடுத்து மகிழ்வான்.

**3. கரந்தைத் திணையின் இலக்கணம் விளக்கி அதன் துறைகள் இவையெனக் கூறுக. (வி. 48).**

இலக்கணம்: மேற்கேள்விக்குரிய விடையில் கண்டு கொள்க.

துறைகள்:

1. கரந்தை—பகைவர் கைப்பற்றிய நிரையை மீட்டல்.
2. கரந்தையரவம்—பகைவர் பசு நிரையைக் கைப் பற்றியதைக் கேள்வியுற்ற வீரர் விரைவிற்றிரளுதல்.
3. அதரிடைச் செலவு—வீரர் பகைவர் சென்ற வழி யிடத்தே செல்லல்.
4. போர்மலைதல்—வெட்சியாருடன் போர்செய்தல்.
5. புண்ணொடு வருதல் — வெற்றிவீரர் விழுப்புண்ணு டனே வருதல்.
6. போர்களத்தொழிதல்—போர் புரிந்து களத்தில் மடி தல்.
7. ஆளெறிபிள்ளை—தாளொருவனாய் நின்று வீரரைக் கொன்று குவித்தல்.
8. பிள்ளைத் தெளிவு—வீரன் மகிழ்ந்து கூத்தாடுதல்.
9. பிள்ளையாட்டு—பகைவரது சூடர்மாலையைச் சூடித் தன் வேலைக் கையிலே பிடித்து ஆடியது.
10. கையறுநிலை—வாட்பூசலிலே இறந்தோனைப் பற்றி யாழ்ப்பாணர் கூறல்.
11. நெடுமொழிகூறல்—வீரனொருவன் தன் மேம்பாட் டினை மன்னனுக்குக் கூறல்.
12. பிள்ளைப் பெயர்ச்சி—நிரையை மீட்டுவந்த வீர ருக்கு மன்னன் தண்ணளி செய்தது.
13. வேத்தியன் மலிபு—வீரவேந்தனது மேம்பாட்டினை வீரர் சொல்லியது.

14. குடிநிலை—பழமையும் தறுகண்மையுமுடைய மறக் குடியினரின் வரலாற்றினைச் சொல்லுதல்.

4. வஞ்சித்திணையொழுக்கம் யாது? அதன் துறைகளிற் சிறந்தன நான்கினை விளக்குக. (வி. 53, 56)

*அல்லது*

வஞ்சியில் பகைவர் நாடு பாழ்படுத்தப் பெறுதலைக் கூறும் துறைகள் மூன்றினைக்கூறி இலக்கணம் தருக. (வி. 53)

*அல்லது*

வஞ்சிப்படலத்தால் விளங்கும் போர்முறைகள் யாவை? (வி. 57)

*பகைவருடைய நாட்டைக் கொள்ள நினைந்து போர் செய்வதற்கு மேற்செல்லல் வஞ்சித்திணையாகும். இதற்கு வஞ்சிக்கொடியின் பூவினைச் சூடுதல் வழக்கம். இது வஞ்சி யரவம் முதலிய இருபது துறைகளை உடையது. அவற்றுள் சில வருமாறு:*

1. *உழபுல வஞ்சி—பகைவருடைய நாட்டைக் கொளுத்துதல்.*

2. *மழபுலவஞ்சி—பகைவர் நாட்டிலுள்ள மனைகள் பாழ்படும்படி கொள்ளைகொள்ளுதல்.*

3. *பெருவஞ்சி—பகைவர் நாட்டை இரண்டாவது முறையும் நெருப்புக் கொளுத்துதல்.*

*இம் மூன்றும் பகைவர் நாடு பாழ்படுத்தப் பெறுதலைக் கூறும் துறைகள்.*

4. *ஒருதனிநிலை—வெள்ளந் தள்ளாதபடி கல்லாற் கட்டின கரையைப் போலப் பெரும் படையை ஒரு வீரன் தடுத்து நிற்றல்.*

5. தழிஞ்சி—தனக்குக்கெட்டோடுவார் முதுகுப்புறத்துக் கூரிய வாளோச்சாத மறப்பண்பு.

6. பெருஞ் சோற்றுநிலை—பகைவர் நாட்டை அழித்துத் தருவர் என்று சொல்லி மிக்க சோற்றை வீரர்க்கு அளித்தல்.

7. கொடை வஞ்சி—பாடிய புலவர்களுக்குப் பரிசில் கொடுத்தல்.

5. உழிஞைத்திணை நிகழ்ச்சிகளைக் குறித்து ஒரு தொகுப்புரை எழுதுக. (எம். ஏ. 55; வி. 57)

பகைவருடைய மதிலைக் கொள்ளக் கருதிய மன்னர் உழிஞைப் பூவையேனும் மாலையையேனும் சூடிச் செல்வர்.

அரசன் முதலில் குடையையும் வாளையும் நன்னாளில் புறவீடு செய்வான். பின்னர் முரசத்திற்குப் பூசை செய்து முழக்கிப் படைகளுடன் அவன் எழுவான். பகையரசனின் மதிலின் புறத்தே தங்குவான். வீரர்கள் பகைவருடைய மதிலின் இயல்பை அறிந்து கூறுவார்கள்; சிலர் கேடகப் படையைச் சிறப்பிப்பர். யானையை ஏவி மதிற்கதவைப் பிளக்கச் செய்து மதிலைக் கைக்கொள்ளுவர்; காவற் காட்டைக் கடந்து புகுவர். காவற்காட்டைக் கடந்ததும், அகழியின் புறத்தே தங்கி, நாவாய், தோணி முதலியவற்றில் ஏறிப் பகைவருடன் வீரர் போர் புரிவர். பின்னர் அஞ்சாமல் மதிலின்மேல் ஏணியைச் சார்த்தி ஏறி அதற்குள் அமைந்த காவற் காட்டில் குதிப்பர்; அரணிலுள்ளவர்களோடு பொருது வெல்வர். விடியற்காலையில் மதிலிலுள்ள அரசன் முரசம் அதிர, புறத்திலுள்ள அரசன் சினம் மிகுந்து, 'இன்று மாலைக்குள் இம்மதிலைக் கைக்கொண்டு உட்புகுந்து பிறகே சமைத்து உண்போம்' என்று சபதம் கூறி, மதிலை அழித்து யானைகளைக் கைக்கொள்வான். பின்னர் அதனுள் கழுதை ஏரால் உழுதுவித்துக் கவடியையும்

குடை வேலையும் விதைப்பான். வீரர் மன்னவனது வாளைத் தீர்த்த நீரால் மஞ்சனமாட்டுவர். மன்னன் வெற்றியைப் புகழ்வர். மதிலகத்து அரசனுடைய மகளை வேண்டி முற்றுகையிடலும் உண்டு. சில பகையரசர் பணிந்து திறை கொடுத்தலும் உண்டு.

6. தும்பைத் திணையொழுக்கத்தைக் கூறி அதன் துறைகளுள் சிறந்தன மூன்றினிலக்கணந்தருக. (வி. 53)

அல்லது

தும்பைப் படலத்துப் பொருளைத் தொகுத்தொரு கட்டுரை வரைக. (எம். ஏ. 48)

7. வஞ்சியிலும் தும்பையிலும் உள்ள போர்முறைகளின் வேறுபாடு என்ன?

போர் புரியத் தொடங்குகையில் அரசர்கள் தும்பை மாலையையேனும் பூவையேனும் சூடிப் பின் போர் புரிவர். அக்காலத்து நிகழ்வன வருமாறு:

தும்பை அவரம்—போர் செய்வதற்கு முன்பு அரசன் தன் படை வீரர்களுக்குப் போர்ப் பூவாகிய தும்பையையும், யானை குதிரை முதலிய வரிசைகளையும் வழங்குவான்.

தானை மறம் :

1. இருவகைச் சேனையும் பொருது மடியாது காத்தல்.
2. படை கெடும், படும் என்று ஓராது போர் செய்தல்.
3. பகைவருடைய கேட்டிற்கு இரங்கல்;

யானைமறம்—இளம் களிற்றின் வீரத்தைக் கூறுதல்.

குதிரை மறம்—குதிரைப் படையின் வேகத்தைக் கூறுதல்.

தார் நிலை—1. தூசிப்படையைத் தடுப்பனென ஒரு வீரன் தனது தறுகண்மையைக் கூறுதல்.

2. ஒரு வேந்தனைப் பல வேந்தர் எதிர்த்த வழி வீரன் தானே எதிர்த்தல்.

தேர் மறம்—வேந்தன் தேரின் நன்மையைக் கூறல்.

பாடாண் பாட்டு—யானையை எறிந்து பட்ட வீரர்க்குப் பாணர் உரிமை செய்தல்.

இருவருந்தபுநிலை—இரு திறச் சேனைகளும் அரசரும் ஒருங்கே படுதல்.

எருமை மறம்—கைவேலை யானைமேல் விட்டெறிந்து வந்த படையை நிர் ஆயுதனாய் நின்று வெற்றி கொண்டது.

தூழில்—அரசர் சேனையைக் கொன்று வேலைச் சுழற்றி ஆடுதல்.

தூழிலாட்டு—தன் மார்பைப் பிளந்த வேலைப் பிடுங்கி பகைவர் மீது எறிதல்.

முன்றேர்க் குரவை—தேர் முன்னே வீரர் ஆடுதல்.

பின்றேர்க் குரவை—வீரரோடு பாணிச்சியர் தேரின் பின் ஆடுதல்.

பேய்க் குரவை—தேரின் முன்னும் பின்னும் பேயாடுதல்.

களிற்று நிலை—யானையை எறிந்து அதன் கீழ்ப்பட்டு இறத்தல்.

ஒள் வாளமலை—வாள் வீரர் வீரக்கழலணிந்தவனுடன் ஆடுதல்.

தானை நிலை—இரண்டு சேனையும் வீரத்தைப் புகழப் புகழப் போர்க்களத்தில் வீரன் நிலைத் தூண்போல் நிற்றல்.

வெரு வருநிலை—மார்பைப் பல அம்புகள் பிளப்பவும் வீரன் நிலத்தில் விழாது நிற்றல்.

சிருங்கார நிலை—பகைவர் புகழும்வண்ணம் களத்தில் பட்டவனை அன்பும் கற்பும் மிக்க மனைவியர் தழுவுதல்.

உவகைக் கலுழ்ச்சி—வாளாற் போழப்பட்டுக் கிடக்கும் கொழுநனைக் கண்டு மனைவியர் மகிழ்ந்து கண்ணீர் விடுதல்.

தன்னை வேட்டல்

1. தனது அரசன் களத்துப் பட்டானாக ஒரு வீரன் உயிரை ஆகுதி பண்ணல்.

தன்னை வேட்டல்

2. களத்துப்பட்ட கணவனைக் காணவேண்டி மனையாள் போர்க்களத்துச் செல்லுதல்.

தொகை நிலை—புகழை நாட்டி எல்லோரும் போர்க்களத்தில் மடிதல்.

8. துடியர், பாணர், விறலியர், கூத்தர், ஆகியவர்களைப் பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலையால் அறிவன யாவை? (வி. 57)

1. துடியர்: துடி என்னும் பறையை முழக்குபவர் துடியர் ஆவர். நிரை கவர்ந்து வந்த பின்னர், அரசன் ஆநிரையைத் துடியருக்கும் கொடையாகக் கொடுப்பான். பகைவர் முனையிடத்துப் போகும் பொழுதும், ஆநிரைகளை மன்றத்திடத்துச் செலுத்தும் காலத்தும் துடி முழக்கப்படும்.

2. பாணர்: பாண் என்பது சாதிப்பெயர். பெரிய புகழையுடையான்றனது தேரின் பின் வளையினை யுடைய பாணிச்சியர் ஆடி வருவர். பாணர் இசைக்கு ஒத்த யாழுடனே எங்கும் பாடித்திரிவர். தலைவன் பொருட்டுத் தலைவியைக்காண பாணன் வருவான்.

3. விறலியர்: பாணிச்சியரே விறலியராவர். இவர்கள் நன்கு பாடி ஆடுவர். இவர்களுக்கும் அரசன் ஆநிரைகளைப் பரிசாகக் கொடுப்பான். அழகிய மொழியையுடைய விறலியர்க்குப் பிடி உவமை யாகச் சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் மதுவுண்டு மகிழ்வர் என்ற செய்தியும் காணப்படுகின்றது.

4. கூத்தர்: சிலைபோன்ற புருவத்தினையுடைய வஞ்சிக் கொம்பன்ன விறலியர்தம் தலைவர் என்று இவர்கள்

சொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் நன்கு கூத்தாடுவர். தலைவனைக்கண்டு துதித்து மீண்ட இரப்பாளன் கூத்தாடுமவரை வழியிலே செலுத்துவான். இது கூத்தராற்றுப்படை என்று கூறப்படும். இவ்வாறு பாணனை வழியிலே செலுத்துவது பாணாற்றுப் படை எனப்படும்.

9. வாகைத்திணையின் ஒழுக்கம் யாது? அதன் துறைகளுள் சிறந்த நான்கனை விளக்குக. (வி. 56)

வாகை மாலையைச் சூடிப் பகைவர்பால் வெற்றிகொள்வர் அரசர். இப்படலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், மறமகளிர் முதலியவர்களின் இயல்பும் சிறப்பும் சொல்லப்படும்.

1. முன்றேர்க்குரவை—அரசனது தேரின் முன் பேயாடுதல்.
2. பார்ப்பன வாகை—பார்ப்பார் அரசன் வெற்றியை யாகம் வேட்டுச் சிறப்பித்தல்.
3. வேளாண் வாகை—அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூவரும் விரும்ப அவர் ஏவல் வழியே செல்லல்.
4. பொருந வாகை—நின் கீர்த்தியின் மிகுதியைப் பார்த்துப் பிறரை இகழுதலை ஒழி என்று சொல்லுதல்.

10. வெறியாடுதல், புள்மொழிதல், கிடங்குப்போர், குரவை-இவை பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலையால் அறிவன யாவை? (வி. 57)

வெறியாடுதல்

1. வெறியாட்டு (வெட்சி)—அழகிய ஆபரணத்தையுடையார் நினைத்த தொழில் முடிய முருக பூசை பண்ணுமவனோடு வள்ளிக் கூத்தை ஆடியது.

ஆபரணம் விளங்கும் மெல்லிய முலையினையும் பூப்போன்ற அரிபரந்த கண்ணினையும் ஒளிமிக்க நுதலினையும்

உடையவள்தான், நறுநாற்றத்தினை உடம்பிலே நிறுத்தி, மாலை பக்கத்தே அசைய, வேலினையுடைய பிள்ளையாராகிய முருகனுக்கு, வள்ளி நாயகியின் வேடங்கொண்டு ஆடும் கூத்தைக் காணின், அரனும் அகமகிழ்வான்.

2. வள்ளி (பாடண்)—ஆபரணத்திஞல் சிறந்த முலையுடையார் நெஞ்சு நெகிழ வேலினையுடைய குமரனுக்கு வெறி எனனும் கூத்தை ஆடியது.

திரண்ட வார்சியங்கள் ஒலிப்பத் தொடியினையுடையார், ஆபரணமிலங்கச் சூலத்துடனே, வேணியினை உடையான் புதல்வனுக்கு வெறியாட்டாளனுடன் வளளிக்கூத்து ஆடுவர்.

3. வெறியாட்டு (பெருந்திணை)—மணம் நாறு மாலை உடையாள், தலைவனது அருளைக்கருதி அவ்விடத்து அந்நிலைமையைத் தாயறியாதபடி வேங்கைப் பூவைச் சூடிய முருகற்கு வெறிக்கூத்து ஆடியது.

மயக்கத்தினையுடைய அயன்மனை மகளிருடனே, அன்னை சொல்லையும் அஞ்சி, அகனற மனையிடத்தே ஆடும் வெறிக்கூத்தை தலைவனது அருளைக் கருதி, தலைவன் வருவனோ வாராணே என்னும் ஐயப்பாடு நீங்க தலைவி ஆடினள்.

**புள்மொழிதல்**

புள்மொழிதல் என்றால் நிமித்தம் கூறுதல் எனப்பொருள்படும். வெட்சியில் வீரர்கள் புறப்படுவதற்கு முன்னர் நிமித்தம் பார்த்துப் புறப்படுவர். பகைவரது ஆனிரையைக் கைக்கொண்ட அவர்கள் 'புள் வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்' அவ்வானிரையைப் பங்கிட்டுக் கொடுப்பர். தப்பாது நிமித்தஞ் சொன்னோர்க்கு வஞ்சியாது வழங்குதல் பிள்ளை வழக்கு எனப்படும்.

**கிடங்குப் போர்**

கிடங்கு என்பது அகழியைக் குறிக்கும். நொச்சியில், வீரர்கள் காவற் காட்டையும் அகழியையும் காத்து நின்று படுவர். இவ்வாறு இறந்துபட்ட வீரரின் வெற்றியைக் கூறுதல் செருவிடை வீழ்தல் எனப்படும். காவற்காடும் அகழும் காவல் புரிவார், சிங்கமொத்த சினவேலராவர். அவர்கள் தங்கள் மெய்யுடன் உயிரைக் காத்தலை வேண்டார். கிடங்குப் போர் உழிஞையில் நடைபெறும். அகழியிடத்துப் போர் செய்தல் பாசிநிலை எனப்படும்.

**குரவை**

குரவை, முன்றேர்க் குரவை, பின்றேர்க் குரவை என இரண்டு வகைப்படும்.

11. வீரர்கள் வெற்றிக் களிப்பால் ஆடும் பலவித ஆடலியல்புகளையெல்லாம் தொகுத்துக் கூறுக. *(வி. 51)*

கரந்தையில், வீரர்கள் வேலிடத்திற் குடர்மாலையைச் சூட்டி மகிழ்ந்து ஆடுவர். இதற்குப் பிள்ளையாட்டு எனப் பெயர். தும்பையில் வீரர்கள் அரசர் சேனையைக் கொன்று வேலைச் சுழற்றி ஆடுவர். மன்னனது தேரின் முன்னும் பின்னும் வீரர்கள் ஆடுவர். இவைகள் முறையே நூலில், முன்றேர்க் குரவை, பின்றேர்க் குரவை என வழங்கப் பெறும். ஒரு சில வாள் வீரர் வீரக் கழலணிந்தவனுடன் ஆடுவர். இதனை ஒள்வாளமலை எனக் கூறுவர். உழிஞையில் பரிசையை உடைய சேனைத் தலைவர் ஆடிப் பகைவருடைய அரணை அடைவர். இதற்குக் குற்றுழிஞை எனப் பெயர்.

12. புறப்பொருள் வெண்பா மாலையுள் தலைவன், தலைவி, தாய், மகன்—இவரை யிழந்து துன்புறுதலைக் கூறும் துறைகள் எவை? எப்படலத்துள் இவைகூறப்பட்டன? *(எம். ஏ. 54)*

1. முதுபாலை—கணவனை இழந்தவளது தன்மையைக் கூறல்.

2. சுரநடை—தலைவியை இழந்தவனது தன்மையைச் சொல்லுதல்.

3. தலைப்பெய்நிலை—மாதா இறந்த முறையைக் கூறல்.

4. பூசன் மயக்கு—பிள்ளை இறந்தானுக்குச் சுற்றத்தார் செய்யும் ஆரவாரத்தைக் கூறுதல்.

இந்நான்கு துறைகளும் பொதுவியற்படலத்துள் கூறப்பட்டன.

13. புறம், புறப்புறம், அகப்புறம் என்ற பகுதிகளுள் எவ் வெப் புறத்திணைகள் சேர்வனவாம்? (எம். ஏ. 54)

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை—புறம்.

வாகை, பாடாண், பொதுவியல்—புறப்புறம்.

கைக்கிளை, பெருந்திணை—அகப்புறம்.

14. பழந்தமிழ் வீரர் அஞ்சாமை மிக்கவர் என்பதை இந் நூல் கொண்டு விளக்குக. (வி. 57)

பழந்தமிழ் வீரர் அஞ்சாமை மிக்கவர் என்பவர் என்ப தைப் பின்வரும் துறைகளால் நன்கு அறியலாம்.

1. ஆளெறிபிள்ளை (கரந்தை)—பொருவாரை விலக்கித் தானொருவனாய் நின்று வீரரை வெட்டுதல்.

2 ஒரு தனிநிலை (வஞ்சி)—வெள்ளந் தள்ளாதபடி கல் லாற் கட்டின கரையைப் போலப் பெரும் படையை ஒரு வீரன் தடுத்து நிற்றல்.

3. மறக்காஞ்சி (காஞ்சி)—பகைவர் வேல்பட்ட புண் ணைக் கிழித்துக்கொண்டு வீரன் இறத்தல்.

4. குற்றுழிஞை (உழிஞை)—அழிவில்லாத பகைவர் அரண் மீது தான் ஒருவனுமே போர் செய்தது.

5. எருமை மறம் (தும்பை)—கைவேலை யானை மேல் விட்டெறிந்து, வந்த படையை படைக்கலமில்லாது நின்று வெற்றி கொண்டது.

6. நூழிலாட்டு (தும்பை)—தன் மார்பைப் பிளந்த வேலைப் பிடுங்கி பகைவர் மீது எறிதல்.

7. வெருவருநிலை (தும்பை)—மார்பைப் பல அம்புகள் பிளப்பவும் வீரன் நிலத்தில் விழாது நிற்றல்.

8. தானைநிலை (தும்பை)—இரண்டு சேனையும் வீரத்தைப் புகழப் போர்க்களத்தில் வீரன் தூண் போல் நிற்றல்.

9. களிற்று நிலை—(தும்பை)—யானையை எறிந்து அதன் கீழ்ப்பட்டு இறத்தல்.

10. தார் நிலை (தும்பை)—தூசிப் படையைத் தடுப்பனென ஒரு வீரன் தன் தறுகண்மையைக் கூறல்.

15. பழந் தமிழ் வீரர் நாட்டையாளும் அரசனிடத்துப் பேரன்பும் நன்றியுணர்ச்சியும் உடையவர் என்பதை இந்நூல் கொண்டு விளக்குக. (வி. 57)

பின்வரும் துறைகளின் வாயிலாகப் பழந்தமிழ்வீரர் நாட்டையாளும் அரசனிடத்துப் பேரன்பும் நன்றி யுணர்ச்சியும் உடையவர் என்பதை அறியலாம்.

1. வேத்தியன் மலைவு (வெட்சி)—அரசனது மேம்பாட்டினை வீரர் சொல்லுதல்.

2. தார்நிலை (தும்பை)—ஒரு வேந்தனைப் பல வேந்தர் எதிர்த்த வழி வீரன் தானே எதிர்த்தல்.

3. தன்னை வேட்டல் (தும்பை)—தனது அரசன் களத்துப்பட்டானாக ஒரு வீரன் உயிரை ஆகுதி பண்ணல்.

4. அவிப்பலி (வாகை)—போரிடத்து வீரர் செஞ்சோற் றுக்கடன் கழித்தது.

16. உழவுத் தொழில், வாணிபம்—இவை வெண்பாமாலை யுள் சிறப்பிக்கப்பட்டவாற்றை வரைக. (வி. 54)

வாகைப்படலம், ஒழிபு இவையிரண்டு பகுதியிலும் உழவுத் தொழில், வாணிபம் சிறப்பிக்கப்பட்டுள்ளன,

1. வாகைப்படலம்:—

1. வாணிக வாகை-பொல்லாத வினையினின்றும் நீங்கிய வாணிகனைப் பற்றிய ஆறு செய்தியும் உயர்த்திச் சொல்லப்படுகின்றது. [உழுது, ஆனிரையைப் பாது காத்துக் குற்றமில்லாத கூலங்களை விற்று, நான் மறை கற்று, முத்தீயை அராதித்துப் பொருளைச் சீர்தூக்காது கொடுக்கும் கொடையினை உடைய முதல் வணிகர் எல்லார்க்கும் வேந்து.]

2. வேளாண்வாகை—முற்பட்ட அந்தணர் அரசர் வணிகரென்னும் மூவரும் நெஞ்சு விரும்ப மெய்ம் மையால் அவரவர் ஏவல்வழியே செல்லும் வேளா ளன் சிறப்புக் கூறியது. ['முன் சொன்ன மூவரும் விரும்ப அவர் ஏவின காரியத்தை மறுக்காது ஏற்றுக் கொண்டு, தனக்கு நீதிநூல் ஏவின சொல்வழுவாறுய் முறையே நின்று, கழனியுள் உழுமவன், பூமியில் உள்ளார்க்கெல்லாம் உயிரை அனையவன்.']

3. கிணைநிலை—உழவனைக் கிணைகொட்டுவோன் சிறப் பித்தது. ['ஏர்வாழ்க' என்று சொல்லி கிணையை மாசைத் துடைத்துக் குன்றை யொக்கும் நெற் போர் வினையுடைய உபகாரிதன் செல்வத்தை வாழ்த்த இன்று நீங்கும், எங்கட்கு மிடி.]

2. ஒழிபு:—

1. உழவன் வென்றி—நிலத்தின் செவ்வியைப் பார்த்து, மிக்க வயலிடத்தும் கொல்லையிடத்தும் பரக்க

ஏரைப்பூட்டி உழுது நற்காலத்தால் நெல், வரகு முதலிய எட்டுணவினையும் பூமியிடத்துத் தாயாரைப் போல, பல்லுயிர்க்கும் ஆக்கம்தர, வித்தி விளைப்பான்.

2. வாணிகவென்றி — காட்டையும், நீர்ச்சுழியையும் அஞ்சானாய்ச் சகடம் பலவும் மரக்கலம் பலவும் இடந்தோறும் செலுத்தி, பல பண்டமும் விற்கும் வணிகனின் பொருளிற் பற்றிலனாய்ப் பிறர்மிடியைத் தன் கையாலே நீக்குவான்.

17, மன்னுறு தொழில், தன்னுறு தொழில், நாட்கோள், அரவம்—இவைகளை இன்னவென்று விளக்குக. (வி. 51)

வெட்சி, மன்னுறு தொழில், தன்னுறு தொழில் என இரண்டு வகைப்படும்.

1. மன்னுறு தொழில்—அரசன் ஏவச் சென்று நிரை கவர்தல்.

2. தன்னுறு தொழில்—அரசன் ஏவாது சென்று நிரை கவர்தல்.

3. அரவம்—போர்வீரர் படையெடுக்கக் கிளர்ந்து எழுதல்.

4. நாட்கோள்—நல்ல நாள் அல்லது நேரம் எனப் பொருள்படும். வஞ்சியில், அணிசெய்த குடையையும் வாளையும் நல்ல நாளில் அனுப்புவர். இவை முறையே குடைநிலை, வாணிலை எனப்படும். உழிஞையிலும் அனுப்புவர். இவை முறையே குடை நாட்கோள், வாணாட்கோள் எனப்படும்.

18. 'குடக்கணீ கொண்டுவா'—திணை, துறை, பொருள் கூறுக. (வி. 52, 56)

திணை—வெட்சி.

துறை—விரிச்சி. நற்சொல் கேட்டல்.

பொருள்—மாலைக்காலத்து முற்றத்திலே வீரர் கூட்டம் திரண்டு நிற்பக் கட்சாடியிலிருக்கும் கள்ளை நீ எடுத்துக் கொண்டுவா வென்றாள்; எனவே நமக்கு வெற்றியைத் தரும்.

19. புலனறி சிறப்பு, பிள்ளை வழக்கு—இத்துறைகள் எத் திணையில் வந்தன? இவற்றின் பொருளை விளக்குக. (வி. 53)

இத்துறைகள் வெட்சியில் வந்தன.

புலனறி சிறப்பு—பகைவர் நாட்டின் கண் சென்று ஒற்றறி வித்தோர் முதலியோர்க்கு ஒன்று இரண்டு பசுக்களை அதிகமாகக் கொடுத்தல்.

பிள்ளை வழக்கு—நிமித்தஞ் சொன்னார்க்குச் சில பசுக்களை அதிகமாகக் கொடுத்தல்.

20. பிள்ளை வழக்கு, ஆளெறி பிள்ளை, பிள்ளைத் தெளிவு, பிள்ளையாட்டு, பிள்ளைப் பெயர்ச்சி—இவற்றுள் எவை யேனும் மூன்றனைத் தம்முள் வேறுபாடு தோன்ற விளக்குக. (எம். ஏ. 48)

ஆளெறி பிள்ளை—(கரந்தை) பொருவாரை விலக்கித் தானொருவனாய் நின்று வீரரை வெட்டுதல்.

பிள்ளையாட்டு—(கரந்தை) வேலிடத்திற் குடர்மாலையைச் சூட்டி ஆடுதல்.

பிள்ளைப் பெயர்ச்சி—போர் வென்ற வீரர்க்கு அரசன் வரிசை கொடுத்து மரியாதை செய்தல். இதுவும் கரந்தைத் திணையைச் சார்ந்ததாகும்.

பிள்ளைத் தெளிவு—(கரந்தை) துடியின் கண் மகிழ்ந்தொலிப் பத் தன் புண்ணைப் பிரியப்பட்டு விரும்பிக் கூத்தாடியது.

பிள்ளை வழக்கு—19-வது கேள்வியைப் பார்க்கவும்.

21. நெடுமொழி—சொற்பொருள் கூறி விளக்குக, நெடுமொழி கூறலுக்கும் வஞ்சினக்காஞ்சிக்கும், புறத்திறைக்கும் புறத்துழிஞைக்கும் வேறுபாடென்ன? (வி. 52, 51)

நெடுமொழி என்றால் உயர்ந்த புகழ் எனப்படும். ஒரு வீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தானே உயர்த்திக் கூறல் நெடுமொழி கூறல் என்னும் துறையாகும். இது கரந்தைத் திணைக்குரியது. வேந்தன் மறவர் சேனையைக் கிட்டித் தன்னுடைய ஆண்மைத் தன்மையை உயர்த்திக் கூறுதல் நெடுமொழி வஞ்சியாகும். இத்துறை வஞ்சித் திணைக்குரியது.

மன்னன் வஞ்சினங் கூறுதல் வஞ்சினக் காஞ்சியாகும். புறத்திறையாவது பகைவர் குறும்பைச் சூழ்தலாகும். இது வெட்சித் திணைக்குரியது. உழிஞைத் திணையிலும் புறத்திறை உண்டு. பகைவரின் அரணின் பக்கத்தில் பாடி வீடு கொள்ளுதல் உழிஞைப் புறத்திறையாகும். காவற் காட்டைக் கடந்து கிடங்கின் அருகை அடைதல் புறத் துழிஞை ஆகும்.

22. ‘கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்த குடி’—
திணை கூறி இலக்கணம் விளக்குக. (வி. 53)

கரந்தைத்திணை. துறை—குடிநிலை. பழமையும் தறுகண்மையு முடைய மறக்குடியின் தன்மையைக் கூறுதல் குடிநிலையாகும்.

23. கொற்றவள்ளை—எத்திணையில் எப்பொருளில் வரும்? (வி. 52)

திணை—வஞ்சி.

பொருள்—அரசன் கீர்த்தியைச் சொல்லி பகைவர் நாடு கெடுவதற்கு வருந்தியது.

24. 'தாழார மார்பினான் றாமரைக்கண் சேர்ந்தனவாற்
பாழாய்ப் பரிய விளிவது கொல்—யாழாய்ப்
புடைத்தே னிமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்
நடைத்தே ரொலிகறங்கு நாடு'—
பொருளும் திணையும் துறையும் தருக. (வி. 53)

பொருள் — ஆரந்தாழ்ந்த மார்பினையுடையவன் கண்கள் சிவந்தனவால், யாழையொப்ப முரன்று பக்கத்திலே வண்டுகள் ஆர்க்குமாலையினையும் பொலிவினையுடைய மண்ணினையுமுடைய மைந்தர் சிறு தேரோசை ஆரவாரிக்கும் நாடு பாழாய்க் கண்டாரிரங்கக் கெடும் போலும்.

திணை—வஞ்சி. துறை—கொற்றவள்ளை.

25. மாராயம்—சொற்பொருள் கூறி விளக்குக, (வி. 52)

மாராயம் என்பது அரசனாற் செய்யப்படுஞ் சிறப்பு என்று பொருள்படும். மறமன்னனாற் சிறப்புப் பெற்ற வீரரின் தன்மையைக் கூறுதல் மாராய வஞ்சி என்னும் துறையாகும். இது வஞ்சித் திணைக்குரியது.

26. தழிஞ்சி எவ்வெத்திணையில் வந்தது? அங்கங்கதன் இலக்கணம் யாது? (வி. 52, 53, 55, 56)

அல்லது

வஞ்சித் தழிஞ்சிக்கும் காஞ்சித் தழிஞ்சிக்கும் உள்ள வேறுபாடு கூறுக. (எம். ஏ. 56)

தழிஞ்சி, காஞ்சித் திணையிலும் வஞ்சித் திணையிலும் வரும். தனக்குக் கெட்டோடுவார் முதுகுப் புறத்துக் கூடிய வாளோச்சாத மறப்பண்பு வஞ்சித் தழிஞ்சியாகும்.

பரந்த சேனை தங்களெல்லையிற் புகாதபடி அரிய வழியைக் காத்தல் காஞ்சித் தழிஞ்சியாகும்.

27. பெருஞ்சோறு—சொற்பொருள் கூறி விளக்குக. (வி. 52)

பெருஞ்சோறு என்றால் மிக்க சோறு என்று பொருள் படும். பகைவர் நாட்டை அழித்துத் தருவர் என்று சொல்லி மிக்க சோற்றை வீரர்க்கு அளித்தல் பெருஞ் சோற்றுநிலை என்னும் துறையாகும். (வஞ்சித்திணை).

28. படைவழக்கு—திணை கூறி விளக்குக. (வி. 53)

திணை—காஞ்சித்திணை.

அரசன் வீரர்க்குப் படை வழங்கல் படை வழக்காகும். அதாவது மறக்குடியில் தறுகணவர்க்கு, போர் வெல்லும் யானைப்பினையுடைய தலைவன் இலைத்தொழிலான் மிக்க வேல் பலவற்றையும் வழங்கித் தலையளி செய்வான்.

29. வஞ்சினம்—சொற்பொருள் கூறி விளக்குக. (வி 52)

30. வஞ்சினக் காஞ்சிக்கும் நெடுமொழிகூறலுக்குமுள்ள வேறுபாடென்ன? (வி. 51)

இவ்வாறு செய்வேனென்று கூறுதல் வஞ்சினங் கூறுதலாகும்.

வஞ்சினக் காஞ்சி—மன்னன வஞ்சினங் கூறுதல்.

நெடுமொழி கூறுதல் (கரந்தை)—ஒரு வீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தானே கூறுதல்.

நெடுமொழிவஞ்சி—வேந்தன் மறவர் சேனையைக் கிட்டித் தன்னுடைய ஆண்மைத்தன்மையை உயர்த்துக் கூறியது.

31. 'நகையம ராய நடுங்க நடுங்கான்
தொகையம ரோட்டிய துப்பிற்—பகைவர்முன்
நுங்கிச் சினவுத ஞேஞ ஞுதிவேலாற்
பொங்கிப் பரிந்திட்டான் புண்'—
திணையும் துறையும் புலப்படுத்துக. (வி. 55)

திணை—காஞ்சி. துறை—மறக்காஞ்சி. பகைவர் கெடும்படியாக அரசன் போர் செய்தல் மறக்காஞ்சியாகும்.

விளக்கம்: மகிழ்ச்சி மேவும் தன் கூட்டம் குலையக் குலையாஞய்ச் செறிந்த போரைத் துறந்த வலியினையுடைய மாற்ருர் தன்முன்னெல்லையைக் கொண்டு கோபித்தலைப் பொருஞகி வேலின் நுதியாலே வெகுண்டு புண்ணினை அறுத்திட்டான்.

32. மகட்பாற் காஞ்சி, மகண் மறுத்தல், மகட்பாலிகல்—
இவற்றிடை வேறுபாடு என்ன? (எம். ஏ. 54)

மகட்பாற் காஞ்சி—மகளைக் கேட்ட அரசஞேடு மாறுபடுதல்.

மகட் பாலிகல் (உழிஞை)—மகள் வேண்டிய அரசனுடைய தன்மையைக் கூறுதல்.

மகள்மறுத்துமொழிதல் (நொச்சி)—பகை அரசன் பெண் கேட்க மறுத்து மொழிதல்.

33. 'பாயினுர் மாயும் வகையாற் பலகாப்பும்
ஏயிஞ ரேய விகன்மறவர்—ஆயிஞர்
ஒன்றி யவரற வூர்ப்புலத்துத் தார்தாங்கி
வென்றி யமரர் விருந்து'—

இதன் திணையையும் துறையையும் விளக்குக.
(எம். ஏ. 56)

திணை: நொச்சி. பகையரசர் தன்னுடைய மதிலின் புறத்தே வந்து முற்றுகை செய்த காலத்தில் அரசன் நொச்சிப் பூவையேனும் மாலையையேனும் சூடித்

தன் மதிலைக் காத்து நிற்பது நொச்சித் திணை யொழுக்கமாகும்.

துறை: மறனுடைப்பாசி. சினச் சேனையையுடைய சின மன்னர் வீரசுவர்க்கத்திடத்துப் போன போக்கைச் சொல்லியது மறனுடைப் பாசியாகும்.

விளக்கம் :

அரணைச் சூழப் பரந்தார் படுமுறையாற் பலகாவலையும் ஏவினார்; ஏவின மாறுபாட்டையுடைய வீரர் ஆயினார், எதிராகக் கிட்டினவர் கெட ஊரிடத்துத் தூசிப் படையைத் தடுத்து வெற்றியினையுடைய தேவர்கட்கு விருந்து ஆயினார்.

34. 'ஆருயிரைக் கூற்றம் விழுங்கியபின் வீடுகொண்டற் ருல்'—திணை துறை, கூறி விளக்கந் தருக. (வி. 56)

திணை: கரந்தை. துறை: கரந்தை.

மாறுபட்டெழுந்தார் மறஞ்சாயத் தலைக்கொண்ட நிரையை மீட்டது கரந்தையாகும்.

விளக்கம்

ஆரவாரியா நின்ற கடல் சூழ்ந்த ஞாலத்துப் பெறுதற் கரிய உயிரைக் கூற்றுவன் உண்டபின்புமீட்ட தன்மைத்து; மறக்குடிகள் கரந்தையைத் தலையிலே சூடித் தாங்கொள்ளு மது, பகைவர் கைப்பற்றின ஆனிரையை.

35. 'நெய்யணிக செவ்வே னெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக—வையகத்து
முற்றக் கடியரண மெல்லா முரணவிந்த
கொற்றக் குடை நாட் கொள'—
திணையும் துறையும் புலப்படுத்துக. (வி. 57)

திணை—உழிஞை, துறை—குடைநாட்கோள்.

**விளக்கம் :**

பகைவரது அரணைக் கொள்ள நினைந்து வெற்றி மன்னவன் தன் குடையைப் புறவீடு செய்தல்.

**உதாரணம்**

பகைவர் குருதியாடிச் சிவந்த வேல்கள் நெய்யிட்டு அலங்கரிப்பனவாக; குதிரையும் யானையும் போர்க்குச் செய்த பண்ணினைக் களைக; வெற்றிக் குடையைப் புறவீடு விட, வையகத்து காவற் குறும்புகள் எல்லாம் மாறுபாடு கெட்டன.

36. கந்தழி—விளக்கித் திணையொடு தொடர்பு காட்டுக. (வி. 56)

கந்தழி, உழிஞை, பாடாண் ஆகிய இரு திணைகளிலும் வரும்.

1. உழிஞை—திருமால் வீரசோ என்னும் அரணத்தை அழித்த வீரத்தைக் கூறுதல்.

**உதாரணம்**

சோவென்னும் அரணத்தை அந்நாள் திகிரிகொண்டு அழித்தவனும் இவன்; இந்நாள இவன் பகையாக எதிர்ப்பார் யார் எக்காலத்தும்?

2. பாடாண்—வளைந்த திகிரியை உடையவன் சோ வென்னும் அரணத்தினை அழித்த வெற்றியினைச் சிறப்பிததல்.

**உதாரணம்**

மணியையுடைய ஆனிரையிடத்துக் கோவலனாக அவனை எண்ணாதே; அவன் மாயவன்; அவன் கோபிக்க, அசுரர் கட்டின வீரக்கழல் நெகிழ விழியழலக் கையில்

தொடியுடைய மகளிர் மயங்கச் சோலையென்னும் அரண் சுற்றுநெருப்புள்ளே தங்கினது.

37. முற்றுழிஞை—விளக்கித் திணையொடு தொடர்பு படுத்துக. (வி. 56)

**விளக்கம்**

சிவபெருமான் சூடிய உழிஞையின் சிறப்பைக் கூறல்.

**உதாரணம்**

*உழிஞையின் மிகுதியை வேறுணர்வார் யாவர் தாம்! விளங்கும் கொத்திற் பொலிவு கொண்ட கொன்றையை யுடைய செஞ்சடையானும் பெருமை கொண்ட உழிஞை யைச் சூடி திரிபுரங்கள் மூன்றையும் சுட்டான்.*

38. காந்தள்—விளக்கித் திணையொடு தொடர்பு காட்டுக. (வி. 56)

அல்லது

காந்தள்—விளக்குக. (வி. 55)

அல்லது

காந்தள் விளக்கி உதாரணம் தருக. (வி. 53)

*திணை—உழிஞைத் திணை.*

**விளக்கம்**

*கறுத்த கடலிட்டுச் சூரபன்மாவைக் கொன்றவ னுடைய காந்தள் பூவின் மிகுதியைச் சொல்லியது.*

**உதாரணம்**

*கிரவுஞ்ச கிரியை எறிந்தவனும் அழகு மருவின காந்தளைச் சூடினன். முரசு முழங்கும் கடல் போன்ற சேனையிடத்துப் பூசலை நினைந்து யாவர் சூடார் பூவினை?*

39. புறத்திறை—விளக்குக். (வி. 55)

அல்லது

புறத்திறை—எவ்வெத் திணைகளில் எவ்வெப் பொருளில் வரும். (வி. 52)

40. புறத்திறைக்கும், புறத்துழிஞைக்கும் உள்ள வேறுபாடென்ன? (வி. 51)

*புறத்திறை வெட்சியிலும் உழிஞையிலும் வரும்.*

*1. புறத்திறை (வெட்சி)-பகைவர் குறும்பைச் சூழ்தல்.*

*ஒருவரும் தப்பிப் போகாதபடி விசாரித்து, யுகாந்த காலத்துக்கு நெருப்பை ஒப்ப முற்படப் பூசலில் எதிர்ந்தார் மாபாடுறுகெடத் தம் ஒற்றராலே ஆராய்ந்து மிகுந்த வலியினை உடையோர் அரணினை வளைந்து கொண்டார். பிழைத்திருப்பார் இவ்விடம் யாரும் இல்லை.*

*2. புறத்திறை (உழிஞை)—பகைவரின் அரணின் பக்கத்தில் பாடி வீடு கொள்ளுதல்.*

*வீரக்கழலை உடையவன், பகைவர் புகுமிடமும் ஓடிப்போம் வழியும் இன்றி, பல மன்னரும் மயங்கத் தன் சேனையைக் கைவளரவிட்டு, வாட் சேனையினையுடைய பகைவர் அரணத்தின் பக்கத்திலே பாடி வீடு கொண்டான். புறத்துழிஞை—காவற் காட்டைக் கடந்து கிடங்கின் அருகை அடைதல். ஆளைப் பற்றுகை தப்பாத முதலை வாழும் அகழியை வாளினையுடைய மற மன்னன் அடைந்து விட்டான். இனி மதிலிடத்து, ஒள்ளிய வளையினையுடைய பெண்கள் வெய்தாக உயிர்ப்ப, வெல்லுதற்கரிய பூசல் நடைபெறும்.*

41. பாசி-சொற்பொருள் கூறி விளக்குக. (வி. 52)

அல்லது

பாசிநிலை—விளக்குக. (வி, 55)

பாசி என்பது கிடங்கு அல்லது அகழி எனப்பொருள் படும். பகைவருடைய வலிகெட அகழியிடத்துப் பூசலை மேற்கொண்டது பாசிநிலையாகும். இத்துறை உழிஞைக் குரியது.

ஓட்டமும் ஒருமரத் தோணியும் மேல்கொண்டு பொருந்தா தார் ஒழியர்ராய்க் கொன்று வெகுளவும், மலர் நிறையும் கிடங்கிலே, அம்பின் வாயிலே அநேகர் பட்டார்.

42. முற்று முதிர்வு, வாண் மண்ணு நிலை-விளக்குக. (வி. 55)

இவ்விரண்டு துறைகளும் உழிஞைப் படலத்திற்குரியன.

1. முற்றுமுதிர்வு — மதிலினுள்ளோரின் காலை முர சொலிப்பப் புறத்திருந்தோரது சினத்தைக் கூறல்.
2. வாண்மண்ணு நிலை—நீராட்டிய வாளின் சிறப்பைக் கூறல்.

பக்கத்துள்ள மன்னர் எல்லாம் தன் புகழைப்பாட பதாகையாற் சிறந்த தேரினை உடையான், தீர்த்த நீரும் மலரும் சொரிந்து திக்கு விளங்கக் கூரிய வாளினை, வீர முரசு ஆர்ப்ப இந்த அரணிடத்தே கள வேள்வி விட்டான்.

43, தொகைநிலை எவ்வெத்திணையில் வந்துள்ளது? அங் கங்கதன் இலக்கணம் யாது? (வி. 53)
தொகைநிலை-திணை கூறி விளக்கி அதற்கு உதா ரணம் தருக. (வி. 53)

தொகை நிலை, உழிஞை, தும்பை என்னும் இரண்டு திணைகளிலும் வரும்.

1. உழிஞை—எல்லா அரசரும் அவன் தாள் வணங்கல்.

உதாரணம்

சம்புத் தீவினுள் அவன் தாள் நிழலை அடைந்து சொன்ன சொல்லை ஏற்றுக் கொள்ளாது மாறுபாட்டை ஏற்றுக்கொண்ட மன்னர், சேனையால் சிறந்த வெற்றியை உடைய அவன் அரணின் முன்னே நின்று மாறுபாடு கெட்டார்.

2. தும்பை—புகழை நாட்டி அனைவரும் போர்க்களத்தில் மடிதல்.

உதாரணம்

பூமி தனிமைப் பட்டுப் புலம்ப, வேலினையுடைய வேந்தரிருவரும் போர்க்களத்துப் பட்டார்; அவர் தேவியர் செந்நெருப்பில் புகுந்தனர். ஆனால் இன்னமும் கூற்றத்தின் வயிறு நிறைந்தின்று.

44. யானை மறம், குதிரை மறம் இவற்றிற்கு உதாரணம் தந்து திணை புலப்படுத்துக. (வி. 56, 53)

1. யானை மறம்—தும்பைத்திணையில் வரும். இளம் களிற்றின் வீரத்தைக் கூறல்.

உதாரணம்

வீரக்கழல் வேந்தன் யானை, பேயும் கழுகும் கூற்றும் தனது பின் படர, பகைவர் உயிரைக் குடித்தற் பொருட்டு வெகுண்டு வரும்.

2. குதிரை மறம்—இத்துறை தும்பையிலும் நொச்சியிலும் வரும்.

1. தும்பை—குதிரைப் படையின் வேகத்தைக் கூறுதல்.

உதாரணம்

பகைவர் தம் வில், வேல் படைகள் வந்தபடி அறியாத வகை தலைமயங்கிய வாட்பொருள் வெய்ய வலியினையும்

வீரக்கழலினையுமுடைய மன்னன் விளங்கும் தலையாட்டத் தினை உடைய் குதிரை, கொடிய வில்லில் தொடுத்து விட்ட நீண்ட அம்பு போல முற்பட்டு வரும்.

2. நொச்சி—மதிலிடத்துப் பாயும் குதிரையின் தன்மை யைக் கூறுதல்.

**உதாரணம்**

சேனையிடத்து வென்றி வீரர்காள்! ஒப்பில்லாத ஒரு குதிரை பக்கத்தே கவரியிட எழுந்து மேகத்தை ஒத்துப் பகைவர் உயிரை உண்பான் வேண்டிக் கடுகி வரும். இதனைத் தடுத்தற்கரிது! தடுத்தற்கரிது! தடாதே கொண்மின்!

45. தானை மறம்—திணை கூறி விளக்குக.

திணை—தும்பை.

**விளக்கம்**

இருவகைச் சேனையும் பொருது மடியாது பாது காத்தலும், படைகெடும், படும் என்று ஓராது போர் செய் தலும், பகைவருடைய கேட்டிற்கு இரங்கலும் இதன் பாற் படும்.

46. 'உறுசுடர் வாளோ டொருகால் விளங்கின் சிறு சுடர்முற் பேரிருளாங் கண்டாய்'—பொருளும் திணை யும் துறையும் தருக. (வி. 53, 56)

பொருள்—(பகைவர் சேனையை) மிக்க ஒளியினையுடைய வாளுடனே யான் ஒருகால் தடுப்பின் சிறிய விளக்கின் முன்னர் பெரிய இருள் போல மறைந்தோடும் காண்.

திணை—தும்பை.

துறை—தார்நிலை.

தார்நிலை—தூசிப்படையைத் தடுப்பனென, அரசர்க்கு ஒரு வீரன் தன் திறமையைக் கூறியது.

47. எருமை மறம், ஏமவெருமை—வேறுபாடு எடுத்துக் காட்டுக, (வி. 57)

1. எருமை மறம்—சேனை முதுகிட்டும் தான் பெயராதது.

**உதாரணம்**

கண்டார் நடுங்கும் போரிடத்துக் காலாள் வெள்ளம் புறமுதுகிட்டோடவும், தான் போகானாய்த் தன்கைவேலை ஊன்றி பகைவர் வாட்படை வெள்ளம் தன்மேலே அடர்ந்து வர, தறு கண் வீரன் நெருப்புப்போல விழித்துக் கோபித்து நெடிய கையை உடைய யானைப் பிணத்தின் நடுவே நின்றான்.

2. ஏமவெருமை—வாட்போருள் தான் எறிந்த வேல் களிற்றின் மத்தகத்துக் குளிப்பத் தோள் வலியால் வெற்றி பெற்றது.

**உதாரணம்**

தோளே கொம்பாக மதர்த்த எருமையேறு போல வெகுண்டு போரை விரும்பிச் சிவந்த கண்ணிணையுடைய மறவன், கையிலேந்திய வேலைக்கடிய யானைமேல் விட்டு முன்பு வெற்றி பெற்றது போல, மேல் வரும் படையை விலக்கி, ஆயுதமேது மில்லாது நின்று தன் மெய் வலியால் பின்னரும் வெற்றி பெற்றான். (இது தும்பைத் திணையாகும்).

48. நூழில், நூழிலாட்டு-வேறுபாடு எடுத்துக்காட்டுக. (எம். ஏ. 56)

1. நூழில்—அரசர் சேனையைக் கொன்று வேலைச் சுழற்றி ஆடுதல்.

**உதாரணம்**

சுழலும் விழியினையுடைய பேய்கள் வீழ்ந்த குட்டரைச் சூடுதலை மேற்கொண்டன; மீளுதல் ஒழிந்த வேற்போருள் மாறுபட்டவர் மார்பகத்தை உருவின வேலைப் போரைவிரும் பினோன் கையிலே திரித்து ஆடுதலை மேற்கொண்டான்.

2. நூழிலாட்டு—தன் மார்பைப் பிளந்த வேலைப்பிடுங்கி பகைவர்மீது எறிதல்.

**உதாரணம்**

கழல் வீரன், வெய்தான மிகுங்கனலைச் சிதறி மணநாறு மார்பகத்தைப் போழ்ந்த வேலைப் பறித்துக் கையிடத்துப் பற்றினான். போரிடத்து வேந்தர் மாறுபாடு இனி என்னுமோ! (இது தும்பைத் திணையாகும்).

49. முன்றேர்க்குரவை—எவ்வெத் திணைகளில் எவ்வெப் பொருளில் வரும்? (வி. 52. 55)

முன்றேர்க்குரவை, தும்பை, வாகை என்ற இரு திணை களிலும் வரும்.

1. தும்பை (பொருள்)—தேர் முன்னே வீரர் ஆடுதல்.

**உதாரணம்**

மணியான் அமைந்த பசும் பூணினையுடைய கழல் வேந்தன் நடத்தும் திரண்ட மணியினையுடைய திண்ணிய தேர்மேற் கொடி, போர்க்களத்து மேகத்து நிறைந்த மின் போன்று முறையே ஆடாநிற்க, அமையாத வீரர் முன்னே ஆடுவர்

2. வாகை (பொருள்)—அரசனது தேரின் முன் பேயா டுதல்.

**உதாரணம்**

பொருந்தாத மன்னரை வெட்டிக் களவேள்வி வேட் டான் முரசு முழங்கவென்ற தேரின் முன், 'கெடாத

நன்மையைச் செய்தவன் நெடுங்காலம் 'வாழ்வானாக' எனச் சொல்லிப் புலால் நாறும் வாயினையும் புற்கென்ற தலையினையும் உடைய பேய் கூத்தாடும்.

50. பின்றேர்க் குரவை—எவ்வெத் திணைகளில் எவ்வெப் பொருளில் வரும்? (வி. 52)

இத்துறை தும்பை, வாகைத்திணைகளில் வரும்.

1. தும்பை (பொருள்)—வீரரோடு பாணிச்சியர் தேரின் பின் ஆடுதல்.

**உதாரணம்**

திக்கிலே விளங்கும் சேனையை உடையானது தேர், யாழையுடைய பாணிச்சியரும் வீரரும் பின்பாகப் பாடுதலுடனே கூத்தாட வரும்.

2. வாகை (பொருள்) — வீரக் கழலினையுடையான் தேரின் பின் தொடியணிந்த பாணிச்சியர் வீரரோடு கூத்தாடியது.

**உதாரணம்**

பொய்யாத செங்கோலினையுடைய அரசனைத் துதித்து வெற்றியினையுடைய வீரரும், அழகிய மொழியினையுடைய பாணிச்சியரும், வெவ்விய பூசலிடத்துத் தேரின் பின்னே கைகோத்தாடும்.

தும்பையின் முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை போர்க்குச் செல்லும் தேரின் பின்னே நடைபெறும். வாகையில் வென்று நின்ற தேரின் பின்னே நடைபெறும்.

51. 'வாளை பிறழுங் கயங்கடுப்ப வந்தடையார்
ஆளமர் வென்றி யடுகளத்துத்—தோள்பெயராக்
காய்ந்தடு துப்பிற் கழன்மறவ ராடினார்
வேந்தொடு வெள்வாள் விதிர்த்து'—
திணை, துறை புலப்படுத்துக. (வி. 57)

திணை—தும்பை; துறை—ஒள்வாளமலை.

ஒள்வாளமலை—வாள் வீரர் வீரக்கழல் அணிந்தவனுடன் ஆடுதல்.

**விளக்கம்**

வாளை மீன் மிளிரும் மடுவினையொப்ப, வந்து பொருந்தா தார் வீரர் மேவும் வெற்றியினையுடைய கொலைக்களத்துத் தோளைப் பெயர்த்து வெகுண்டு கொல்லும் வலியினையுடைய கழல் வீரர், அரசனுடனே வாளினை அசைத்து ஆடினர்.

52. உவகைக்கலுழ்ச்சி, மூதின்முல்லை—இவற்றுள் கூறப் பெறுஞ் செய்தி என்ன? (வி. 51)

53. உவகைக்கலுழ்ச்சி—திணை கூறி விளக்கி அதற்கு உதாரணம் தருக. (வி. 53)

உவகைக் கலுழ்ச்சி

திணை—தும்பை.

**விளக்கம்**

வாளால் போழப்பட்டுக் கிடக்கும் கொழுநனைக்கண்டு மனைவி கண்ணீர் விடுதல்.

**உதாரணம்**

போர்க்களத்துப் போர் செய்ய வந்த தறுகண்ணர் கையிட்டு வாள் துணிசெய்ய, வளையலையுடைய மனைவி தன்வெற்றிச் சிங்கத்தை ஒத்த கொழுநன் கிடப்ப, அவன் வெற்றிக் கிடக்கை கண்ட உள்ளத்து மகிழ்ச்சியால், செவ் வரி கருவரி பரந்த கண்ணகமெல்லாம் நீர் பரந்து வீழ கின்றாள்.

2. மூதின் முல்லை

**விளக்கம்**

கொல்லும் வேலினையுடைய வீரர்க்கல்லது அந்தமறக் குடியில் மடப்பத்தினையுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித்தது.

**விளக்கம்**

தங்கள்மேல் எடுத்துவந்த சேனையைப் பொருளாய்ப் பிள்ளைவாயின் முலையை வாங்கி வேலை வளைவு தவிர்த்து முன்னோர்தம் நடுகல்லைக் காட்டிப் பழைய மறக்குடியிற் பேதையானவள் பூசலுக்குப் பிள்ளையைப் போவாயாக வென்று சொன்னாள்.

54. தன்னை வேட்டல்—திணை கூறி விளக்கி உதாரணம் தருக. (வி. 53)

திணை—தும்பை.

**விளக்கம்**

தனது அரசன் களத்துப் பட்டானாக ஒரு வீரன் உயிரை ஆகுதி பண்ணல்.

**உதாரணம்**

மாலையினையும் வீரக்கழலினையும் உடைய வெவ்வியோன், அரசன் விண்ணிடத்துச் சென்ற காரணத்தால், வாளே சுருவமாக, அபிமானம் ஓம நெய்யாக, மறமே சமிதையாக வாட்போராகிய ஒள்ளிய தீயுள் தன் உயிரை ஆகுதி பண்ணினான்.

55. பார்ப்பன வாகை, பார்ப்பன முல்லை இவற்றின் வேறுபாடுகளைப் புலப்படுத்துக. (வி. 56)

1. பார்ப்பன வாகை—பார்ப்பார் அரசன் வெற்றியை யாகம் வேட்டுச் சிறப்பித்தல்.

குற்றத்தைச் சுடும் நெருப்புத்தானாகி எல்லோரும் போற்ற விரும்பின பரந்த அனலை உடைய யாகத்திடத்து,

கடலே வேலியாகவுடைய நிலத்திடத்து நான்கு வேதத்தினையும் கற்ற அரசன் சிறப்புடன் வீற்றிருப்பான்.

2. பார்ப்பன முல்லை—பார்ப்பாரின் நன்மை மிகுந்த முறையைக் கூறல்.

56. 'வெள்ளம்போற் றானைவியந்து விரவாரை
எள்ளி யுணர்த லியல்பன்று—தெள்ளியார்
ஆறுமே லாறியபி ன்றித்தங் கைக் கொள்ளார்
நீறுமேற் பூத்த நெருப்பு'—

பொருளும் திணையும் துறையும் தருக. (வி. 53, 56)

பொருள்—தெள்ளியார், வெம்மை ஆறுமாயின், ஆறியபின் அல்லது பொடிமூடிய தழலை தங்கள் கையில் ஏந்தார். இது போல் யாம் கடல் போன்ற சேனையுடையேம் என்று கருதி பகைவரை இகழ்தல் தன்மையன்று.

திணை—வாகை.

துறை—பொருநவாகை. பொருள்—பகைவரை எள்ளற்க எனல்.

57. பகையரசரை மதியாமல் இகழ்ந்து கூறுவனவாக வரும் துறைகளை எடுத்துரைக்க. (வி. 57)

1. நெடுமொழிகூறல் (கரந்தை): மன்னரின் மேம்பட்ட நிறைமதி போலும் கொற்றக் குடையினையுடையோர்க்கு ஒரு வீரன் தன்னுடைய மேம்பாட்டைக் கூறியது.

2. நெடுமொழிவஞ்சி: பகைவர்தம் சேனையைக் கிட்டித் தன்னுடைய ஆண்மைத் தன்மையை உயர்த்திச் சொல்லியது.

3. வஞ்சினக் காஞ்சி: வெய்ய கோபத்தையுடைய மன்னவன் பகைவரைத் தாழப் பண்ணுவான் வேண்டி இவ்வாறு செய்வேனெனச் சொல்லுதல்.

4. மகட்பாற் காஞ்சி: அழகிய ஆபரணத்தினையுடையாளை எனக்குத் தருகவென்று சொல்லும் அரசனோடு மாறுபட்டு நின்றது.

5. மகண்மறுத்து மொழிதல்: வெய்யதான பகையையுடையவன் மகளை வேண்ட அழகிய குறும்பினுள்ளோன் மறுத்துச் சொல்லியது.

58. 'என்றெட்டின் வழிபடர்தல் வல்லதவை'—எட்டு வழிகளாவன யாவை?

அனுயோகமும் உத்தரமும் முறைமையாக அனுயோகத்தையும் உத்தரத்தையும் புத்திபண்ணித் தொடையும் விடையும் முறைமையும் என்றிவை தப்பாத சயபத்திரத்தை விரும்பித் தோல்வியும் வெற்றியும் நெறியாலே நிச்சயிக்கும் முறைமையை மேற்கொண்டு எட்டின் நெறியே செல்ல வல்லது அவைக்களம். இது அவையமுல்லை என்னும் துறைக்குரிய உதாரணப்பகுதியாகும். குற்றம் கெட நடுவு சொல்லும் அவைக்களத்துச் சான்றோர் தன்மையைச் சொல்லுவது அவைய முல்லையாகும். இத்துறை வாகைத் திணைக்குரியது.

எட்டாவன: குடிப்பிறப்பு, கல்வி, குணம், வாய்மை, தூய்மை, நடுச்சொல், அழுக்காறின்மை, அவாவின்மை.

59. வாடைப் பாசறை, கணிவன் முல்லை, அருளொடு நீங்கல் ஆகியவற்றை வாகைப்படலத்தில் வைத்துப் பேசியிருப்பதன் பொருத்தத்தை ஆராய்க.

(எம். ஏ. 56)

ஒரே வகையான ஒழுக்கம் பூண்ட இருவருள் ஒருவர் ஒருவரைவிடச் சிறத்தலே வாகையாகும். அங்கிலையில், கடமையே பெரிதென எண்ணி, காதலியை மறந்து, மனத்

தில் நிகழ்ந்த போராட்டத்தில் வெற்றிபெற்றுப் பாசறையில் இருக்கும் தலைவனைப் பற்றி வாடைப் பாசறையும், சோதிட நூல் வல்லவனது கீர்த்தியைக் கணிவன் முல்லையும், பற்றை ஒழித்துத் துறவுகொண்டவனது சிறப்பை அருளொடு நீங்கலும் கூறுவதால், இத்துறைகள் வாகைத் திணையில் இடம்பெற்றுள்ளன.

60, அடியில் வரும் துறைகள் இன்னின்ன திணையின எனக் கூறி விளக்குக:-பூசன் மாற்று, பிள்ளைப் பெயர்ச்சி, உழபுலவஞ்சி, இருவருந்தபுநிலை, இயன் மொழி வாழ்த்து, (எம். ஏ. 56)

1. பூசன் மாற்று (வெட்சி): பின் தொடர்ந்தோரை நிரை கவர்ந்த வீரர் வீழ்த்தல்.

2. பிள்ளைப் பெயர்ச்சி (கரந்தை): புள்ளை விலக்கிப் பூசலைத் தாங்கினவனை மாலையினையுடைய மன்னன் தண்ணளி செய்தது.

3. உழபுலவஞ்சி: பொருந்தாதாருடைய நல்ல நாட்டை மிக்க நெருப்பைக் கொழுத்தியது.

4. இருவருந்தபுநிலை (தும்பை): போர் செய்யும் சேனையிரண்டும் களத்திற்பட இருவர் அரசரும் பட்டது.

5. இயன்மொழி வாழ்த்து (பாடாண்):

1. இத்தன்மையோர் இத்தன்மை வழங்கினர், நீயும் அத்தன்மையார்போல் அப்படியான பொருள்களை எமக்குத் தருவாயாக என்று சொல்லி எத்தன்மையோரும் உணர உய்த்துச் சொல்லியது.

2. மயக்கமற்ற மிக்க புகழினையும் குதிரையாற் பூட்டப்பட்ட தேரினையுமுடைய அரசன் தன்மையைச் சொல்லினும் அது இயன்மொழி வாழ்த்தே யாகும்.

61. குதிரை மறம், தழிஞ்சி—இத்துறைகள் இவ்வித்திணை யில் இவ்விவ் விலக்கணத்தோடு வருவன என்பதை விளக்கி வரைக. (எம். ஏ. 48)

*விடை முன்னரே கூறப்பட்டுள்ளது.*

62. மதில் காத்தல் நொச்சியாயிருக்க அதனுள் எயிறனை யழித்தல் என்னுந் துறையென்று காணப்பெறுவது ஏற்புடைத்தாகுமோ? (வி. 51)

*எயிறனையழித்தல் என்னும் துறை, மதிலின் அழி வைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. எயிலின்கண் நிகழ்ந்த அழிவைப்பற்றித்தான் கூறுகின்றது. எனவே நொச்சியில் இத்துறை காணப்பெறுவது ஏற்புடைத்தாகும்.*

63. கந்தழி, தழிஞ்சி, புறத்திறை, மண்ணுமங்கலம்— இவை எவ்வெத்திணையுள் எவ்வெவ்வாறு வரும்? (வி. 57)

*கந்தழி, தழிஞ்சி, புறத்திறை-விளக்கம் முன்னர்க் கூறப் பட்டுள்ளது. மண்ணு மங்கலம் உழிஞையிலும், பாடாண் திணையிலும் வரும். பணியாதார் அரணைகிய கன்னியுடன் வதுவை பொருந்திய மிகுதியைச் சொல்லியது உழிஞை மண்ணுமங்கலமாகும். எண்ணுதற்கரிய மிக்க புகழினை யுடைய அரசன் பொருந்தி மஞ்சனம் பண்ணும் மங்கலத் தினது மிகுதியைச் சொல்லியது பாடாண் மண்ணு மங்கல மாகும்.*

64. மூதின்முல்லை, ஏருண்முல்லை—இவற்றின் இலக்கணம் என்ன? எடுத்துக் காட்டுடன் விளக்குக, (வி 56) ஏருண்முல்லை, வல்லாண்முல்லை—வேறுபாடுஎடுத்துக் காட்டு. (வி. 56)

*1. மூதின்முல்லை—மறக்குடிப் பெண்களின் சினத்தைச் சிறப்பித்தது.*

எடுத்துக்காட்டு: தம்மீது எடுத்து வந்த சேனையைப் பொருளாய்ப் பிள்ளைவாயின் முலையை வாங்கி வெற்றியையுடைய வேலை வளைவு தவிர்த்து, தன் வழியினுள்ளோர் நடுகல்லைத் தான் அவனுக்குக் காட்டிப் பழைய மறக்குடிப் பெண்ணானவள் பூசலுக்குப் பிள்ளையைப் போவாயாக என்று சொன்னாள்.

2. ஏறாண் முல்லை—மென்மேல் சிறந்து விளங்கும் மறக்குடியின் ஆண்மைத் தன்மையை உயர்த்திக் கூறுதல்.

எடுத்துக்காட்டு:—கல்லிலே பொருந்தி நின்றான் என் தகப்பன்; என் தலைவன் போர்க்களரியிலே பட்டான்; என் தமையன்மார் பகைவரை எதிர்த்து நின்று பூசலிலே விழுந்தார்; என் புதல்வன் தன் சேனை கெடவும், கெடாதே பின்னே நின்று தன்கை சென்று அம்பைச் செலுத்தப் பகையரசன் மேலே சென்று முள்ளம் பன்றி போலே பட்டுக் கிடந்தான்.

3. வல்லாண்முல்லை—இல்லையும் ஊரையும் இயல்பினையும் சொல்லிச் சொல்லி ஆண்மைத் தன்மையைச் சிறப்பித்தல்.

இம் மூன்றும் வாகைப் படலத்திற்குரியன.

65. பொருளொடுபுகறல், அருளொடுநீங்கல்—இவற்றின் இலக்கணங்களை எடுத்துக்காட்டுடன் தருக. (வி, 56)

இவ்விரண்டு துறைகளும் வாகைப் படலத்திற்குரியன.

1. பொருளொடு புகறல்—பூமியில் விருப்பத்தை நீக்கி மெய்யாய பொருளிடத்து விருப்பத்தைச் செலுத்தியது பொருளொடு புகறல் ஆகும்.

எடுத்துக்காட்டு: —'இனி மூப்பு நம்மை அணுகும்; இளமை கழிந்தது; நோய் நம்மை இனி வாட்டி வதைக்கும்; ஐம்புலனும் ஒடுங்கி மெய்யறிவினை அறிதல் அவசியம்.

2. அருளொடு நீங்கல்—உலகத்துத் துயரத்தைப் பார்த்துப் பற்றொழித்தல்.

எடுத்துக்காட்டு:—' கலக்கிய நோவுகளையுடையவாய்க் கைகடந்து நம்மை நடத்திய சரீரம் ஒடிவதற்கு முன்னே உலகமாகிய கண்ணியுள்ளே அகப்படாது நன்னெறிக்கட் சேர்தல் உறுதி.'

66. வள்ளிக் கூத்து—சொற்பொருள் கூறி விளக்குக? (பி. 52)

வள்ளிக் கூத்தென்பது பெண்கள் குமரனுக்கு வள்ளி என்னும் கூத்தாடுதல் ஆகும். அதாவது பூண் முலையார் மனமுருக வேல் முருகற்கு வெறி என்னும் கூத்தை ஆடுவர். அதுகால் திரண்ட வாச்சியங்கள் ஒலிக்கும்; வெறியாட்டாளன் ஆடுவான். அவனுடன் அணிகலன்களை அணிந்த பெண்களும் ஆடுவர்.

இத்துறை பாடாண் படலத்தினைச் சார்ந்தது.

67. பேய்களின் செயல்களாகப் புறப்பொருள் வெண்பா மாலையில் வரும் துறைகளை எல்லாம் ளக்குக. (எம். ஏ. 48)

புறப்பொருள் வெண்பாமாலையில் பின் வரும் துறைகள் பேய்களின் செயல்களைப்பற்றிக் கூறுகின்றன.

1. பேய்நிலை (காஞ்சி)—போரிடத்து வீழ்ந்த வேலினையுடையான் திறப்பாட்டை நோக்கி, நீங்குதல் ஒழிந்து காத்து நின்றது.

2. பேய்க் காஞ்சி (காஞ்சி)—பிணம் மிக்க போர்க்களத்திலே பட்ட வீரரைப் பார்த்து பேய் அச்சமுறுத்தல்.

3. தொட்ட காஞ்சி (காஞ்சி)—அகன்ற இல்லிலே தலைமகனுடைய புண்ணைக் காக்க, நான்ற முலையினையும் பெரிய வாயினையும் உடைய பேய்மகள் புண்ணைத் தீண்டியது.

4. தொடாக்காஞ்சி—வீரனது புண்ணைத் தீண்டப்பேய் அஞ்சியது.

5. பேய்க்குரவை—அரசன் செலுத்தும் மணியை யுடைய தேரின் பின்பும் முன்பும் பேய் ஆடியது.

6. களவேள்வி—கொல்லும் வலியினையுடைய பேய் வயிறுர உண்ண, வலியினை உடையான் களவேள்வி வேட்டது.

7. முன்றேர்க் குரவை (வாகை)—வெற்றியான் மிக்கவனது தேரின் முன் பேயாடியது.

68. வாளும் குடையும் பற்றி அமையும் துறைகள் யாவை? (வி. 55)

அல்லது

பழங்காலப் போரில் முரசு, குடை, வாள் ஆகியவை எவ்வெவ்வாறு போற்றப்பட்டன? (வி. 57)

1. வாள்:

1. வாள்நிலை (வஞ்சி)—வாளைப் புறவீடு செய்தல்.
2. வாள்செலவு (காஞ்சி)—வாளைப் புறவீடு செய்தல்.
3. வாளுட்கோள் (உழிஞை) — வாளைப் புறவீடு செய்தல்.
4. வாண்மண்ணுநிலை (உழிஞை)–நீராட்டிய வாளின் சிறப்புக் கூறல்.
5. வாள்மங்கலம் (பாடாண்)—அரசனது வாளைப் புகழ்தல்.

2. குடை:

1. குடைநிலை (வஞ்சி)—குடையைப் புறவீடு செய்தல்.
2. குடைச்செலவு (காஞ்சி) — குடையைப் புறவீடு செய்தல்.

3. குடைநாட்கோள் (உழிஞை)—குடையைப் புறவீடு செய்தல்.

4. குடைமுல்லை (வாகை) — அரசனது குடையைப் புகழ்தல்.

5. குடை மங்கலம் (பாடாண்)—அரசனது குடையைப் புகழ்தல்.

பண்டு அரசர்கள் போருக்குப் புறப்படுவதற்கு முன்னர் தங்கள் வெற்றிக் குடையினையும் வாளினையும் அலங்கரித்துப் புறவீடு செய்வர்.

# 4. சில முக்கிய சூத்திரங்கள்

## தண்டியலங்காரம்

செய்யுள் என்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகங் குளகம் தொகைதொடர் நிலையென
எத்திறத் தனவும் ஈரிரண் டாகும். 1

அவற்றுள்,
முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும். 2

குளகம் பலபாட் டொருவினை கொள்ளும். 3

தொகை நிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவன் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருள் இடம் காலம் தொழில்என நான்கினும்
பாட்டினும் அளவினும் கூட்டிய ஆகும். 4

பொருளினும் சொல்லினும் இருவகைத் தொடர் நிலை. 5

பெருங்காப் பியமே காப்பியம் என்றாங்
கிரண்டாய் இயலும் பொருட்டொடர் நிலையே. 6

அவற்றுள்,
பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்நிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம்என் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்

புலவியில் புலத்தல் கலவியில் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரம் தூது செலவிகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப. 7

அறமுதல் நான்கினும் குறைபா டுடையது
காப்பியம் என்று கருதப் படுமே. 8

அவைதாம்,
ஒரு திறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே. 9

செய்யுள்அந் தாதி சொற்றொடர் நிலையே. 10

மெய்பெறு மரபின் விரித்தசெய் யுட்கு
வைதருப் பம்மே கௌடம் என்றாங்
கெய்திய நெறிதாம் இருவகைப் படுமே. 11

செறிவே தெளிவே சமநிலை இன்பம்
ஒழுகிசை உதாரம் உய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி என்றாங்
காய்ந்த ஈரைங் குணனும் உயிரா
வாய்ந்த என்ப வைதருப் பம்மே. 12
கௌடம் என்பது கருதிய பத்தொடுங்
கூடா தியலுங் கொள்கைத் தென்ப. 13

செறிவெனப் படுவது நெகிழ்இசை இன்மை. 14

தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே. 15

விரவத் தொடுப்பது சமநிலை யாகும். 16

சொல்லினும் பொருளி னுஞ் சுவைபடல் இன்பம். 17

ஒழுகிசை என்பது வெறுத்திசை இன்மை. 18

உதாரம் என்பது ஓதிய செய்யுளின்
குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல். 19

கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்
குரிய சொல் உடையது உய்த்தலில் பொருண்மை. 20

உலகொழுக் கிறவாது உயர்புகழ் காந்தம். 21

வலியெனப் படுவது தொகை மிக வருதல். 22

உரிய பொருள் அன்றி ஒப்புடைப் பொருண்மேல்
தரும் வினை புணர்ப்பது சமாதி யாகும். 23

தன்மை உவமை உருவகம் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள் வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே அதிசயம் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்பம் இலேசம் நிரனிறை
ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயிதம் உதாத்தம்
அரிதுணர் அவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகம்இவை
ஏற்ற செய்யுட் கணிஏழ் ஐந்தே. 24

எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ்
சொல்முறை தொடுப்பது தன்மை யாகும். 25

பண்பும் தொழிலும் பயனும்என் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொரு ளொடு பொருள் புணர்த்
தொப்புமை தோன்றச் செப்பின் அஃ துவமை. 26

உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்
தொன்றென மாட்டின் அஃ துருவகம் ஆகும். 27

குணம் தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்
ஒருவயின் நின்றும் பலவயிற் பொருள்தரின்
தீவகச் செய்யுள் மூவிடத்தியலும். 28

முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயின்
பின்வரும் என்னின் பின்வரு நிலையே. 29

முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே
மூவகைக் காலமும் மேவிய தாகும். 30

முன்ஒன்று தொடங்கி மற்றொன்று முடித்தற்குப்
பின்னொரு பொருளின் உலகறி பெற்றி
ஏற்றி வைத்துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே. 31

உலகறி காரணம் ஒழித்தொன் றுரைப்புழி
வேறொரு காரணம் இயல்புறக் குறிப்பின்
வெளிப்பட உரைப்பது விபாவனை ஆகும். 32

கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற்
கொத்ததொன் றுரைப்பின் அஃதொட்டென
மொழிப. 33

மனப்படும் ஒருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம். 34

பெயர்பொருள் அல்பொருள் எனஇரு பொருளினும்
இயல்பின் வினைத்திறன் அன்றி அயலொன்று
தான்குறித் தேற்றுதல் தற்குறிப் பேற்றம். 35

யாதன் திறத்தினும் இதனின்இது விளைந்ததென்
றேதுவிதந் துரைப்ப தேது அதுதான்
காரக ஞாபகம் எனஇரு திறப்படும். 36

தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்
அரிதுணர் வினைத்திறம் நுட்பம் ஆகும். 37

குறிப்பு வெளிப்படுக்குஞ் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாடல் இலேசம் ஆகும். 38

நிரல்நிறுத் தியற்றுதல் நிரல்நிறை அணியே. 39

ஆர்வமொழி மிகுப்ப தார்வ மொழியே. 40

உள்நிகழ் தன்மை புறம்போந்து தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே. 41

தான்தற் புகழ்வது தன்மேம் பாட்டுரை. 42

கருதியது கிளவா தப்பொருள் தோன்றப்
பிறிதொன்று கிளப்பது பரியா யம்மே. 43

முந்துதா முயல்வுறு தொழிற்பயன் பிறிதொன்று
தந்து கிளப்பது சமாயிதம் ஆகும். 44

வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்
முயற்சிபுனைந் துரைப்பது உதாத்த மாகும். 45

சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறிதுரைப்பது அவனுதி ஆகும். 46

ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை ஆகும். 47

குணம்தொழில் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம். 48

கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்
தொருபொருள் உரைப்ப தொப்புமைக் கூட்டம். 49

மாறுபடு சொற்பொருள் மாறுபட் டியற்கை
விளைவுதர உரைப்பது விரோதம் ஆமே. 50

கருதிய பொருள் மறைத் தாங்கது பழித்தற்கு
வேறென்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை. 51

பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி. 52

ஒருவழி நிகழ்வதற் கொத்த தொருபயன்
பிறிதிற்கும் புகழ்மை தீமை என்றிவை
புலப்பட மொழிவ தாயின் நிதரிசனம். 53

வினைபண் பெனஇவை இருபொருட் கொன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும். 54

பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே. 55

இன்னோர்க் கின்ன தியைக என்றுதாம்
முன்னியது விரித்தல் வாழ்த்தென மொழிப. 56

மொழியப் பட்ட அணிபல தம்முள்
தழுவ உரைப்பது சங்கீ ரணமே. 57

பாவிகம் என்பது காப்பியப் பண்பே. 58

எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருள்தரின் மடக்கெனும்
பெயர்த்தே. 59

கோமூத் திரியே கூட சதுக்கம்
மாலை மாற்றே எழுத்து வருத்தனம்
நாகபந்தம் வினா உத் தரமே
காதை கரப்பே கரந் துரைச் செய்யுள்
சக்கரம் சுழிகுளம் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதகமும் அவற்றின் பால. 60

பிரிபொருட் சொற்றொடர் மாறுபடு பொருள்மொழி
மொழிந்தது மொழிதல் கவர்படு பொருள்வழி
நிரனிறை வழுவே சொல்வழு வதிவழூஉச்

செய்யுள் வழுவே சந்தி வழுஎன
எய்திய ஒன்பதும் இடனே காலம்
கலையே உலகம் நியாயம் ஆகமம்
மலைவும்உள் ளுறுத்தவும் வரைந்தனர் புலவர். 61

## நம்பியகப் பொருள்

மலர்தலை யுலகத்துப் புலவோ ராய்ந்த
அருந்தமி ழகப்பொருள் கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும். 62

கைக்கிளை யுடையது ஒருதலைக் காமம் 63

ஐந்திணை யுடையது அன்புடைக் காமம். 64

பெருந்திணை யென்பது பொருந்தாக் காமம். 65

குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைக் கெய்திய பெயரே. 66

அவைதாம்,
முதற்பொருள் கருப் பொருள் உரிப்பொருள் எனமுறை
நுதற் பொருண் மூன்றினு நுவலப் படுமே. 67

நிலமும் பொழுதும்என முதலிரு வகைத்தே. 68

வரையே சுரமே புறவே பழனம்
திரையே யவையவை சேர்தரு மிடனே
எனவீ ரைவகைத் தனையிய னிலமே. 69

பெரும் பொழு தென்று சிறுபொழு தென்று
இரண்டு கூற்றது இயம்பிய பொழுதே. 70

காரே கூதிர் முன்பனி பின்பனி
சிரிள வேனில் வேனில் என்றுங்கு
இருமூன்று திறத்தது தெரிபெரும் பொழுதே. 71

மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழுது ஐவகைத் தாகும். 72

புணர்தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும்
இரங்கலும் இவற்றி னிமித்தமும் எனவாங்கு
எய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே. 73

அளவி லின்பத் தைந்திணை மருங்கில்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும் 74

இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப் பாடு
பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்று
உணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே. 75

ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றிருவகைத் தாகும்
நிறை தரு காதன் மறையினிற் பிரிவே. 76

ஆற்றா றஞ்சினு மவன் வரைவு மறுப்பினும்
வேற்று வரைவு நேரினுங் காப்புக்கைம் மிகினும்
ஆற்றுறத் தோன்று மறத்தொடு நிலையே. 77

தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கு மென்ப நெறியுணர்ந் தோரே. 78

ஒருபுணர் வொழிந்தவற் றொருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவும்
இறைவனைச் செவிலி குறிவயிற் காணவும்
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூறின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்
அனநடைக் கிழத்தி யறத்தொடு நிற்கும். 79

பரத்தையிற் பிரித லோதற்குப் படர்தல்
அருட்டகு காவலொடு தூதிற் ககறல்
உதவிக் கேக ணிதியிற் கெத்தலென்று
உரை பெறு கற்பிற் பிரிவறு வகைத்தே. 80

கொளைவல் பாணன் பாடினி கூத்தர்
இளையர் கண்டோ ரிருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி யறிவர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் ருமை யென்றிவை யூடல்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்க ளாகும். 81

பூத்தமை சேடியிற் புரவலற் குணர்த்தலும்
நீத்தமை பொருது நின்று கிழவோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலுங்
கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோடலு மவனொடும்
பாங்கொடு பரத்தையைப் பழித்தலு நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவு மாலையங் கழனியும்
மாலை வெள் ளருவியு மலையுங் கானமும்
கண்டுவிளை யாடலும் கடும்புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியுங் குளனும்
ஆடிவிளை யாடலுங் கூடுங் கிழத்திக்கு. 82

வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலும்
சேயிழை யூட றீர்த்தலும் போயுழி
அவணலந் தொலைவுகண் டழுங்கலு மவன் வயின்
செல்ல விரும்பலுஞ் சென்றவற் குணர்த்தலும்
சொல்லிய கூற்றெனச் சொல்லலுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தரிவைக் குணர்த்தலும்
அணிநலம் பெருமை யறியான் போன்றவட்
பணிவொடு வினுதலும் பாணற் குரிய. 83

செல்வம் வாழ்த்தலு நல்லறிவு கொளுத்தலும்
கலனணி புணர்தலுங் காமநுகர் புணர்த்தலும்
புலவி முதிர்காலைப் புலங்கொள வேதுவிற்
றேற்றலுஞ் சேய்மை செப்பலும் பாசறை
மேற்சென் றுரைத்தலு மீண்டுவர வுணர்த்தலும்
கூற்றரு மரபிற் கூத்தர்க் குரிய. 84

மடந்தையை வாயில் வேண்டலும் வாயில்
உடன்படுத் தலுமவ ளூட றீர்த்தலும்
கொற்றவற் குணர்த்தலுங் குற்றேவல் செய்தலும்
சென்றுமுன் வரவு செப்பலு மவன்றிறம்
ஒன்றிநின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலு மிளையோர் தொழிலென மொழிப. 85

அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கும்
உறுதி மொழிந்த வுயர்பெருங் குரவர். 86

உளமலி காதற் களவெனப் படுவது
ஒரு நான்கு வேதத் திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத் தியல்பின தென்ப. 87

இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடன்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற் குறி யிடையீடு
இரவுக் குறியே யிரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றொருபதி னேழும்
களவிற் குரிய கிளவித் தொகையே. 88

ஐயந் தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்று
எய்திய வன்புறை யிருவகைத் தாகும். 89

அணிந்துழி நாணிய துணர்ந்துதெளி வித்தலும்
பெருநயப் புரைத்தலுந் தெய்வத்திறம் பேசலும்,
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலும்
இடமணித் தென்றலு மென்றிவை யாறும்
மடனறத் தெரிந்த வன்புறை விரியே. 90

செல்லுங் கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலு மிரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே. 91

ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்புபா ராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலும்
கண்படை பெறாது கங்குனோ தலுமெனும்
ஐந்தும் பிரிவுழிக் கலங்கலின் விரியே. 92

தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்று
இவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே: 93

தந்த தெய்வந் தருமெனச் சேறலும்
முந்துறக் காண்டலு முயங்கலும் புகழ்தலும்
உடன்புண ராயத் துய்த்தலு மெனவைந்து
இடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே. 94

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்று
ஒருமூன்று வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு. 95

இரந்துபின் னிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக் குடன்படல் மடற்கூற் றொழிதல்
குறைநயப் பித்த னயத்தல் கூட்டல்
கூட லாயங் கூட்டல் வேட்டலென்று
ஈ ர று வகைத்தே யிகுளையிற் கூட்டம். 96

தாயு நாயு முருந்துஞ் சாமை
காவலர் கடுகுத னிலவுவெளிப் படுதல்

கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுதல்
ஆகிய ஏழும் அல்லகுறித் தலைவன்
வருந்தொழிற் கருமை பொருந்துத லுரிய. 97

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்
அலரறி வுறுத்தலுந் தாயறி வுணர்த்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்
வரைவெதிர் வுணர்த்தலும் வரையுநா ளுணர்த்தலும்
அறிவறி வுறுத்தலுங் குறிபெயர்த் திடுதலும்
பகல்வரு வானை யிரவுவரு கென்றலும்
இரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினு மிரவினும் பயின்றுவரு கென்றலும்
பகலினு மிரவினு மகலிவ ணென்றலும்
உரவோ னூடு மூருங் குலனும்
மரபும் புகழும் வாய்மையுங் கூறலும்
ஆறுபார்த் துற்ற வச்சங் கூறலும்
ஆற்றுத் தன்மை யாற்றக் கூறலும்
காவல்மிக வுரைத்தலுங் காமமிக வுரைத்தலும்
கனவுநலி புரைத்தலுங் கவினழி புரைத்தலும்
எனமுறை நாடி யியம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே. 98

செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்க றேற்றியாற் றுவித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே
ஒன்றக் கூறிய வொருவழித் தணத்தல். 99

பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வரும்வழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்று
ஒருமையிற் கூறிய ஒன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே. 100

வரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையும்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே. 101

வரைவு மலிவே அறத்தொடு நிற்றலென்று
உரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளந்தனர் புலவர். 102

முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்கு
அன்ன விருவகைத் தறத்தொடு நிலையே. 103

கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலுந் தலைவன்
தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறலு மிகந்தமை யியம்பலும்
இயற்பழித் துரைத்துழி யியற்பட மொழிதலும்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலும்
இவ்வயிற் செறித்தமை சொல்லலுஞ் செவிலி
கனையிரு ளவன்வரக் கண்டமை கூறலும்
எனமுறை யியம்பிய வேழும் புனையிழைத்
தலைவி யறத்தொடு நிலைதனக் குரிய. 104

போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்த றேற்றலென்று
யாப்பமை யுடன்போக் கிருநான்கு வகைத்தே. 105

செவிலி புலம்ப னற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்
செவிலிபின் றேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவைஐ வகைத்தே. 106

நிமித்தம் போற்றலுஞ் சுரந்தணி வித்தலும்
தன்மகண் மென்மைத் தன்மைக் கிரங்கலும்
இளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலும்

அச்சத் தன்மைக் கச்சமுற்றி ரங்கலும்
எனவிவை யைந்தும்மனை மருட்சிக் குரிய. 107

தெளித்தன் மகிழ்ச்சி வினுதைல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே. 108

மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கும்
அவண்மனை வரைதற்குந் தன்மனை வரைதற்கும்
இவையைந்து முரிய செவிலிகூற் றெழித்தே. 109

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினுதலுஞ் செவிலிக் கிகுளை
வரைந்தமை யுணர்த்தலும் வரைந்தமை செவிலி
நற்றாய்க் குணர்த்தலு முற்றாங் கிருவரும்
தலைவியில் வந்துழித் தலைவன் பாங்கிக்கு
யான்வரைந் தமைநுமர்க் கியம்புசென் றென்றலும்
தானது முன்னே சாற்றிய துரைத்தலும்
என்னுமிவ் வைந்து மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே. 110

பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்
பிரிவும் பிறவு மருவிய தாகும். 111

இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே
ஓதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள் வயிற் பிரிவெனப் பொருந்திய வேழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே. 112

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு
ஏதுவீ தாமவ் விறைவிக் கென்றலும்
தனித்துழி யிறைவி துனித்தழு திரங்கலும்
ஈங்கிது வென்னெனப் பாங்கி வினுதலும்
இறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலும்

தலைவியைப் பாங்கி கழறலுந் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தையர்
உலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கண் மொழிதலும்
வரவுணர் பாங்கி யரிவைக் குணர்த்தலும்
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றுரைத்தபன் னொன்றும்
உணர்த்த வுணரு மூடற் குரிய. 113

வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவே லண்ணல் வாயில் வேண்டலும்
தலைவிநெய் யாடிய திருவை சாற்றலும்
தலைவன் தன்மனத் துவகை கூறலும்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலும்
தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தலும்
பாணன் முதலாப் பாங்கி யீறுப்
பேணிய வாயில் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு
இறையோன் மகிழ்தலு மிறைமகள் விருந்துகண்டு
ஒளித்த வூடல் வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழலுமஃது
எங்கையர் காணி னன்றன் றென்றலும்
அங்கவர் யாரையு மறியே னென்றலும்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலும்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலும்
தணியா ளாகத் தலைமக னூடலும்
அணிவளைப் பாங்கி யன்பிலை கொடியையென்று
இணர்த்தார் மார்பனை யிகழ்தலும் பிறவும்
உணர்த்த உணரா வூடற் குரிய. 114

திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்

மெய்ப்பா டெச்சம் பொருள்வகை துறையெனு
அப்பா லாறிரண் டகப்பாட் டுறுப்பே. 115

தலைவன் றலைவி பார்ப்பான் பாங்கன்
பாங்கி செவிலியென் றீங்கிவ் வறுவரும்
சாற்றிய களவிற் கூற்றிற் குரியர். 116

பயந்தோன் றன்னை யுயங்குநோ யறிவோர்
ஊரவ ரயலோர் சேரியோ ரென்றிவர்
முகத்துரை நிகழா வகப்பொரு ளகத்தே. 117

புணர்ந்துடன் போய துணர்ந்த பின்னர்
அந்தணர் தெய்வ மயலோ ரறிவர்
சிந்தைநோ யறிவோர் செவிலி பாங்கியொடு
கண்டோர்க் குரைக்கும் பண்புடை நற்றாய். 118

நெஞ்சு நாணு நிறைசே ரறிவும்
செஞ்சுடர்ப் பருதியுந் திங்களு மாலையும்
புள்ளு மாவும் புணரியுங் கானலும்
உள்ளுறுத் தியன்றவு மொழிந்தவை பிறவும்
தன்சொற் கேட்குந போலவுந் தனக்கவை
இன்சொற் சொல்லுந போலவு மேவல்
செய்குந போலவுந் தேற்றுந போலவும்
மொய்குழற் கிழத்தி மொழிந்தாங் கமையும். 119

இன்னாக் கின்னுழி யிதுபயக் குமெனும்
முன்னந் தருவது முன்ன மாகும். 120

சொல்லே யாயினுங் குறிப்பே யாயினும்
சொல்லி முடித்தல் வேண்டுவ தெச்சம். 121

உவமைப் பொருளு மிறைச்சிப் பொருளுமென்று
இருவகைப் பொருளு மெய்துமகப் பாட்டினுள். 122

உள்ளுறை யுவமம் வெளிப்படை யுவமமென
எள்ளரு முவம மிருவகை யுடைத்தே. 123

அவற்றுள்,

உள்ளுறை யுவம முய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும். **124**

வெளிப்படை யுவமம் வினைபயன் மெய்யுரு
வெளிப்பட நின்று விளங்குவ தாகும். **125**

கருப்பொருட் பிறக்கு மிறைச்சிப் பொருளே. **126**

அகன்றுழிக் கலங்கலும் புகன்றமடற் கூற்றும்
குறியிடை யீடுந் தெளிவிடை விலங்கலும்
வெறிகோள் வகையும் விழைந்துடன் போக்கும்
பூப்பிய லுரைத்தலும் பொய்ச்சூ ளுறையும்
நீப்பி லூடலும் போக்கழுங் கியல்பும்
பாசறைப் புலம்பலும் பருவமாறு படுதலும்
வன்பொறை யெதிரழிந்து மொழிதலு மன்புறும்
மனைவியுந் தானும் வனமடைந்து நோற்றலும்
பிறவு மகப்பொருட் பெருந்திணைக் குரிய. **127**

மடலே றுதலொடு விடைதழாஅ லென்று
குற்றிசை தன்னொடு குறுங்கலி யென்று
சுரநடை தன்னொடு முதுபாலை யென்று
தாபத நிலையொடு தபுதார நிலையெனப்
புகன்றவை யியற்பெயர் பொருந்தா வாயின்
அகன்ற வகப்புறப் பெருந்திணைத் தாகும். **128**

பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவனெனப்
பாட்டினுட் பாடப் படுவோ ரிருவர். **129**

## புறப்பொருள் வெண்பாமாலை

வெட்சி

வெட்சியரவம் விரிச்சி செலவு
வேயே புறத்திறை ஊர்கொலை ஆகோள்
பூசன் மாற்றே புகழ்சுரத் துய்த்தல்
தலைத்தோற் றம்மே தந்துநிறை பாதீடு
உண்டாட் டுயர் கொடை புலனறி சிறப்பே

பிள்ளை வழக்கே பெருந்துடி நிலையே
கொற்றவை நிலையே வெறியாட் டுளப்பட
எட்டிரண் டேனை நான்கொடு தொகைஇ
வெட்சியும் வெட்சித் துறையு மாகும். 130

வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றி கன்முனை யாதந் தன்று. (வெட்சி) 131

வேண்டிய பொருளின் விளைவுநன் கறிதற்கு
ஈண்டிருண் மாலைச் சொல்லோர்த் தன்று. (வி—சி) 132

பற்றார் தம்முனைப் படுமணி யாயத்து
ஒற்றா ராய்ந்த வகையுரைத் தன்று. (வேய்) 133

நோக்கருங் குறும்பி னூழையும் வாயிலும்
போக்கற வளைஇப் புறத்திறுத் தன்று. (பு—றை) 134

கணம்பிறங்கக் கைக்கொண்டார்
பிணம்பிறங்கப் பெயர்த்திட்டன்று. (பூ—று) 135

உரவெய்யோ னினந்தழீஇ
வரவுணர்ந்து கிளைமகிழ்ந் தன்று. (த—ம்) 136

வார்வலந்த துடிவிம்ம
ஆர்புகல நிரையுய்த் தன்று. (த—றை) 137

கவர்கணைச் சுற்றங் கவர்ந்த கணநிரை
அவரவர் வினைவயி னறிந்தீந் தன்று. (பாதீடு) 138

தொட்டிமிழுங் கழன்மறவர்
மட்டுண்டு மகிழ்தூங்கின்று. (உ—டு) 139

வெம்முனைநிலை யுணர்த்தியோர்க்குத்
தம்மினுமிகச் சிறப்பீந் தன்று. (பு—பு) 140

பொய்யாது புண்மொழிந்தார்க்கு
வையாது வழக்குரைத் தன்று. (பி—கு) 141

தொடுகழன் மறவர் தொல்குடி மரபிற்
படுக ணிமிழ் துடிப் பண்புரைத் தன்று. (து—லை) **142**

ஒளியினீங்கா விறற்படையோள்
அளியினீங்கா வருளுரைத் தன்று. (கொ—லை) **143**

வாலிழையோர் வினைமுடிய
வேலனொடு வெறியாடின்று. (வெ—டு) **144**

கதமலி கரந்தை கரந்தை யரவம்
அதரிடைச் செலவே யரும்போர் மலைதல்
புண்ணொடு வருதல், போர்க்களத் தொழிதல்
ஆளெறி பிள்ளை பிள்ளைத் தெளிவே
பிள்ளை யாட்டொடு கையறு நிலையே
நெடுமொழி கூறல் பிள்ளைப் பெயர்ச்சி
வேத்தியன் மலிபே மிகுகுடி நிலையென
அருங்கலை யுணர்ந்தோ ரவைபதி ணன்கும்
கரந்தையுங் கரந்தைத் துறையு மென்ப. **145**

மலைத்தெழுந்தோர் மறஞ்சாயத்
தலைக்கொண்ட நிரைபெயர்த் தன்று. (கரந்தை) **146**

ஆற்று ரொழியக் கூற்றெனச் சினைஇப்
போற்றார் போகிய நெறியிடை யேகின்று. (அ—வு) **147**

வருவாரை யெதிர் விலக்கி
ஒருதாளுகி யாளெறிந்தன்று. (ஆ—ளை) **148**

கண்மகிழ்ந்து துடிவிம்மப்
புண்மகிழ்ந்து புகன்றுடின்று. (பி—வு) **149**

கூடலர்குடா மாலைசூட்டி
வேறிரித்து விரும்பியாடின்று. (பி—டு) **150**

வெருவரும் வாளமர் விளிந்தோற் கண்டு
கருவி மாக்கள் கையற வுரைத்தன்று. (கை—லை) **151**

மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத் துரைத்தன்று. (நெ—ல்) 152

போர்தாங்கிப் புள்விலங்கியோனைத்
தார்வேந்தன் றலையளித்தன்று. (பி—சி) 153

தோள்வலிய வயவேந்தனை
வாள்வலிமறவர் சிறப்புரைத் தன்று. (வே—பு) 154

வாடா வஞ்சி வஞ்சி யரவம்
கூடார்ப் பிணிக்குங் குடைநிலை வாணிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சிய்யே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சிய்யே பெருஞ்சோற்று நிலையொடு,
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி யிருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையு மாகும். 155

வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித் தன்று. (வஞ்சி) 156

பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புவைர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடை நாட் கொண்டன்று. 157
(கு—லை)

செற்றார்மேற் செலவமர்ந்து
கொற்றவா ளுட்கொண்டன்று. (வாணிலை) 158

மறவேந்தனிற் சிறப்பெய்திய
விறல்வேலோர் நிலையுரைத்தன்று. (ம—சி) 159

ஒன்னுதார் படைகெழுமித்
தன்னுண்மை யெடுத் துரைத்தன்று. (நெ—சி) 160

நேராதார் வளநாட்டைக்
கூஎரி கொளீஇயன்று. (உ—சி) 161

கூடார்முனை கொள்ளைசாற்றி
வீடறக்கவர்ந்த வினைமொழிந்தன்று. (ம—சி) 162

அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மை காதலித் துரைத்தன்று. (த—சி) 163

திருந்தார் தெம்முனை தெறுகுவ ரிவரெனப்
பெருஞ்சோ றுடவர் பெறுமுறை வகுத்தன்று. 164
(பெ—லை)

காஞ்சி காஞ்சி யதிர்வே தழிஞ்சி
பெரும்படை வழக்கொடு பெருங்காஞ் சிய்யே
வாள்செல வென்று குடையது செலவே
வஞ்சினக் காஞ்சி பூக்கோ ணிலையே
புகழ்தலைக் காஞ்சி தலைமா ராயம்
தலையொடு முடித்தல் மறப்பெயர்க் காஞ்சி
மாற்றரும் பேய்நிலை பேய்க்காஞ் சிய்யே
தொட்ட காஞ்சி தொடாக்காஞ் சிய்யே
மன்னைக் காஞ்சி கட்காஞ் சிய்யே
ஆஞ்சிக் காஞ்சி மகட்பாற் காஞ்சி
முனைகடி முன்னிருப் புளப்படத் தொகைய
எண்ணிய வகையா னிருபத் திரண்டும்
கண்ணிய காஞ்சி துறையென மொழிப. 165

பரந்தெழுதரு படைத்தானை
வரம்பிகவாமைச் சுரங்காத்தன்று. (த—சி) 166

அருமுனையா னறைகூவினபின்
செருமுனைமேல் வாள் சென்றன்று. (வா—வு) 167

முதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கொதியழல் வேலோன் குடைசென் றன்று. (கு—வு) 168

மைந்துயர மறங்கடந்தான்
பைந்தலைச் சிறப்புரைத்தன்று. (த—சி) 169

தலைகொடுவந்தா னுண்மலியச்
சிலையுடைவேந்தன் சிறப்பீந்தன்று. (த—ம்) 170

செருவேலோன் றிறநோக்கிப்
பிரிவின்றிப் பேயோம்பின்று. (பே—லை) 171

பிணம்பிறங்கிய களத்துவீழ்ந்தாற்கு
அணங்காற்ற வச்சுறீஇயன்று. (பே—சி) 172

வியன்மனைவிடலை புண்காப்பத்
துயன்முலைப்பேழ்வாய்ப் பேய்தொட்டன்று. 173
(தொ—சி)

அடலஞ்சா நெடுந்தகைபுண்
தொடலஞ்சித் துடித்துநீங்கின்று. (தொ—சி) 174

வியலிடமருள விண்படர்ந்தோன்
இயல்பேத்தி யழிபிரங்கின்று. (ம—சி) 175

ஏந்திழையாட் டருகென்னும்
வேந்தனோடு வேறுநின்றன்று. (மக—சி) 176

நுவலருங் காப்பி னொச்சி ஏனை
மறனுடைப் பாசி யூர்ச்செரு வென்று
செருவிடை வீழ்தல் திண்பரி மறனே
எயிலது போரே எயிறனை யழித்தல்
அழிபடை தாங்கல் மகண்மறுத்து மொழிதலென
எச்ச மின்றி யெண்ணிய வொன்பதும்
நொச்சித் திணையுந் துறையு மாகும். 177

ஏப்புழை ஞாயி லேந்துநிலை யரணம்
காப்போர் சூடிய பூப்புகழ்ந் தன்று. (நொச்சி) 178

மறப்படை மறவேந்தர்
துறக்கத்துச் செலவுரைத்தன்று. (ம—சி) 179

ஏமாண்ட நெடும்புரிசை
வாமானது வகையுரைத்தன்று. (கு—ம்) 180

உழிஞை யோங்கிய குடைநாட் கோளே
வாணாட் கோளே முரச வுழிஞை
கொற்ற வுழிஞையோ டரச வுழிஞை
கந்தழி யென்று முற்றுழி ஞையே
காந்தள் புறத்திறை ஆரெயி லுழிஞை
அருந்தோ லுழிஞை குற்றுழி ஞையொடு
கோட்புறத் துழிஞை பாசி நிலையே
ஏணி நிலையே இலங்கெயிற் பாசி
முதுவுழி ஞையே முந்தகத் துழிஞை
முற்று முதிர்வே யானைகைக் கோளே
வேற்றுப்படை வரவே உழுதுவித் திடுதல்
வாண்மண்ணு நிலையே மண்ணுமங் கலமே
மகட்பா லிகலே திறைகொண்டு பெயர்தல்
அடிப்பட விருத்தல் தொகைநிலை யுளப்பட
இழுமென் சீர்த்தி யிருபத் தொன்பதும்
உழிஞை யென்பஞ ருணர்ந்திசி னோரே. 181

முடிமிசை யுழிஞை சூடி யொன்னார்
கொடிநுடங் காரெயிற் கொளக்கரு தின்று. 182
(உழிஞை)

கலந்தடையார் மதில்கருதி
வலந்தரு வாணாட்கொண் டன்று. (வா—ள்) 183

அடையாதா ரரண் கொள்ளிய
படையோடு பரந்தெழுந்தன்று. (கொ—ஞை) 184

மாவுடைத்தார் மணிவண்ணன்
சோவுடைத்த மறநுவலின்று. (கந்தழி) 185

ஆடிய லவிர்சடையான்
சூடியபூச் சிறப்புரைத்தன்று. (மு—ஞை) 186

கருங்கடலுண் மாத்தடிந்தான்
செழுங்காந்தட் சிறப்புரைத்தன்று. 187

மறத்துறைமலிந்து மண்டிமாற்ருர்
விறற்கொடிமதிலின் புறத்திறுத்தன்று. (பு—றை) 188

அடங்காதார் மிடல்சாயக்
கிடங்கிடைப் போர்மலைந்தன்று. (பா—லை) 189

உடல்சினத்தார் கடியரணம்
மிடல்சாய மேலிவர்ந்தன்று. (எ—சி) 190

அகத்தோன் காலை யதிர் முரசியம்பப்
புறத்தோன் வெஞ்சினப் பொலிவுரைத்தன்று. 191
(மு—வு)

வணங்காதார் மதிற்குமரியொடு
மணங்கூடிய மலிபுரைத்தன்று. (ம—ம்) 192

எம்மதிலி னிகல்வேந்தரும்
அம்மதிலி னடியடைந்தன்று. (தொ—லை) 193

துன்னருங் கடும்போர்த் தும்பை தும்பை யரவம்
தன்னிக ரில்லாத் தானை மறமே
யானை மறத்தொடு குதிரை மறமே
தார்நிலை தேர்மறம் பாணது பாட்டே
இருவருந் தபுநிலை எருமை மறமே
ஏம வெருமை நூழி லென்ரு
நூழி லாட்டே முன்றேர்க் குரவை
பின்றேர்க் குரவை பேய்க்குர வையே
களிற்றுட னிலையே ஒள்வா ளமலை
தானை நிலையே வெருவரு நிலையே
சிருங்கார நிலையே உவகைக் கலுழ்ச்சி
தன்னை வேட்டல் தொகைநிலை யுளப்பட
நன்பொரு டெரிந்தோர் நாலிரு மூன்றும்
வண்பூந் தும்பை வகையென மொழிப. 194

செங்களத்து மறங்கருதிப்
பைந் தும்பை தலைமலைந்தன்று. (தும்பை) 195

எழுமரவக் கடற்றுனையான்
மழகளிற்றின் மறங்கிளந் தன்று. (யா—ம்) 196

எறிபடையா ளிகலமருட்
செறி படைமான் றிறங்கிளந்தன்று. (கு—ம்) 197

பொருபடை களத்தவிய
இருவேந்தரு மிகலவிந்தன்று. (இ—லை) 198

வெயர்பொடிப்பச் சினங் கடைஇப்
பெயர்படைக்குப் பின்னின்றன்று. (எ—ம்) 199

கழல்வேந்தர் படைவிலங்கி
அழல்வேறிரித் தாட்டமர்ந்தன்று. (நூழில்) 200

களங்கழுமிய படையிரிய
உளங்கழிந்தவேல் பறித்தோச்சின்று. (நூ—டு) 201

எழுவுறழ் திணிதோள் வேந்தன் வெஃறேர்
முழுவலி வயவர் முன்னு டின்று. (மு—வை) 202

கருங்கழன் மறவரொடு வெள்வளை விறலியர்
பெருந்தகை தேரின் பின்னு டின்று. (பி—வை) 203

வலிகெழுதோள் வாள்வயவர்
ஒலிகழலா னுடனுடின்று. (ஒ—லை) 204

விலங்கமருள் வியலகலம்
வில்லுதைத்த கணைகிழிப்ப
நிலந்தீண்டா வகைப்பொலிந்த
நெடுந்தகைநிலை யுரைத்தன்று. (வெ—லை) 205

சீர்சால் வாகை வாகை யரவம்
அரச வாகை முரச வாகை
மறக்கள வழியொடு களவேள் வியே
முன்றேர்க் குரவை பின்றேர்க் குரவை

பார்ப்பன வாகை வாணிக வாகை
வேளாண் வாகை பொருந வாகை
அறிவன் வாகை தாபத வாகை
கூதிர்ப் பாசறை வாடைப் பாசறை
அரச முல்லை பார்ப்பன முல்லை
அவைய முல்லை கணிவன் முல்லை
மூதின் முல்லை ஏருண் முல்லை
வல்லாண் முல்லை காவன் முல்லை
பேராண் முல்லை மறமுல் லையே
குடைமுல் லையொடு கண்படை நிலையே
அவிப்பலி யென்றா சால்பு முல்லை
கிணைநிலை ஏனைப் பொருளொடு புகறல்
அருளொடு நீங்கல் உளப்படத் தொகைஇ
மூன்று தலையிட்ட மூவி ரைந்தும்
வான்றோய் வாகைத் திணையது வகையே. 206

இலைபுனை வாகை சூடி யிகன்மலைந்து
அலைகடற் றானை யரசட் டார்த்தன்று. (வாகை) 207

வென்றேந்திய விறற்படையோன்
முன்றேர்க் கணணங்காடின்று. (மு—வை) 208

பெய்கழலான் றேரின்பின்
மொய்வளை விறலியர் வயவரொடாடின்று. 209
(பி—வை)

கேள்வியாற் சிறப்பெய்தியானை
வேள்வியான் விறன்மிகுத்தன்று. (பா—கை) 210

செறுதொழிற் சேணீங்கியான்
அறுதொழிலு மெடுத்துரைத்தன்று. (வா—கை) 212

மேன்மூவரு மனம்புகல
வாய்மையான் வழியொழுகின்று. (வே—கை) 213

செருமுனை யுடற்றுஞ் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலங் காவல னியல்புரைத் தன்று. (அ—லை) 214

காண்மலியு நறுந்தெரியற் கழல்வேந்த ரிகலவிக்கும்
நான்மறையோ னலம்பெருகு நடுவுநிலை யுரைத்தன்று.
(பா—லை) 215

துணிபுணருந் தொல்கேள்விக்
கணிவனது புகழ்கிளந்தன்று. (க - லை) 216

தண்பணை வயலுழவனைத்
தெண்கிணைவன் றிருந்துபுகழ்கிளந்தன்று. (கி—லை) 217

ஒளியு மாற்றலு மோம்பா வீகையும்
அளியு மென்றிவை யாய்ந்துரைத் தன்று. (பா—டு) 218

இன்னோ ரின்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல வவைவெமக் கீகென
என்னோரு மறிய வெடுத்துரைத் தன்று. (இ—து) 219

அளப்பருங் கடற்றானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று. 220

துயர்தீரப் புயறருமென
உயர்வெள்ளி நிலையுரைத்தன்று. 221

திருக்கிளரு மகன்கோயில்
அரிக்கிணைவன் வளமுரைத்தன்று. (கி—லை) 222

நாற்றிசையும் புகழ்பெருக
வீற்றிருந்தான் குடைபுகழ்ந்தன்று. (கு—ம்) 223

கயக்கருங் கடற்றானை
வயக்களிற்றான் வாள்புகழ்ந்தன்று. (வா—ம்) 224

எண்ணருஞ் சீர்த்தி யிறைவ னெய்தி
மண்ணுறு மங்கல மலிவுரைத் தன்று. 225

மூவர்கொடி யுள்ளு மொன்றொடு பொரீஇ
மேவரு மன்னவன் கொடிபுகழ்ந் தன்று. (கொ—லை) 226

சூழுநேமியான் சோவெறிந்த
வீழாச்சீர் விறன்மிகுத்தன்று. (கந்தழி) 227

பூண்முலையார் மனமுருக
வேன்முருகற்கு வெறியாடின்று. (வள்ளி) 228

சீர்சால் போந்தை வேம்பொடு ஆரே
உன்ன நிலையே ஏழக நிலையே
கழனிலை ஏனைக் கற்காண் டல்லே
கற்கோ ளிலையே கன்னீர்ப் படுத்தல்
கன்னடு தல்லே கன்முறை பழிச்சல்
இற்கொண்டு புகுதல் என்றபன் னிரண்டும்
பொதுவியற் பால வென்மனார் புலவர். 229

துன்னருஞ் சிறப்பிற் றொடுகழன் மன்னனை
உன்னஞ் சேர்த்தி யுறுபுகழ் மலிந்தன்று. (உ—லை) 230

ஏழக மூரினு மின்ன னென்றவன்
தாழ்வி லூக்கமொடு தகைபுகழ்ந் தன்று. (ஏ—லை) 231

ஏந்துபுக ழுலகி னிளமை நோக்கான்
வேந்து நிற்றலு மேழக நிலையே. 232

ஆளை வென்றி யமரில் வீழ்ந் தோற்குக்
கான நீளிடைக் கற்கண் டன்று. (க—ல்) 233

மண்மருளத் துடிகறங்க
விண்மேயாற்குக் கற்கொண்டன்று. (க—லை) 234

முதுபா லையே சுரநடை ஏனைத்
தபுதார நிலையே தாபத நிலையே
தலைப்பெய னிலையே பூசன் மயக்கே
மாலை நிலையே மூதா னந்தம்
ஆனந் தம்மே ஆனந்தப் பையுள்
கையறு நிலையுளப் படப்பதி னென்றும்
மையறு சிறப்பிற் பொதுவியற் பால. 235

காம்புயர் கடத்திடைக் கணவனை யிழந்த
பூங்கொடி மடந்தை புலம்புரைத் தன்று.(முது—லை)236

மூதரி னிவந்த முதுகழை யாரிடைக்
காதலி யிழந்த கணவனிலை யுரைத்தன்று. (சு—டை) 237

புனையிழை யிழந்தபிற் புலம்பொடு வைகி
மனையகத் துறையு மைந்தனிலை யுரைத்தன்று. 238
(த—லை)

குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மைகூ றின்று. (தா—லை) 239

இன்கதிர் முறுவற் பாலக னென்னுந்
தன்கட னிறுத்ததாய் தபுநிலை யுரைத்தன்று. 240
(தலை—லை)

பல்லிதழ் மழைக்கட் பாலகன் மாய்ந்தெனப்
புல்லிய பெருங்கிளைப் பூசல் கூறின்று. (பூ—கு) 241

வேந்தன் மாய்ந்தென வியலிடம் புலம்பினும்
ஆய்ந்த புலவ ரதுவென மொழிப. 242

கயலேர் கண்ணி கணவனொடு முடிய
வியனெறிச் செல்வோர் வியந்துரைத் தன்று. (மூ—ம்) 248

கொடியான் கூர்ங்கணை குளிப்பத் தன்றொழில்
முடியா னவிதலு மூதா னந்தம். 244

ஆடமைத் தோளி விரிச்சியுஞ் சொகினமும்
வேறுபட வஞ்சி விதுப்புற் றன்று. (ஆ—ம்) 245

தவப்பெரிய வெஞ்சமங்குறுகும்
அவற்கிரங்கினு மத்துறையர்கும். (ஆ—ம்) 246

விழுமங் கூர வேய்த்தோ ளரிவை
கொழுநன் வீயக் குழைந்துயங் கின்று. (ஆ—ள்) 247

செய்கழன் மன்னன் மாய்ந்தெனச் சேர்ந்தோர்
கையற உரைத்துக் கைசோர்ந் தன்று. (கை—லை) 248

கழிந்தோன் றன்புகழ் காதலித் துரைப்பினும்
மொழிந்தனர் புலவ ரத்துறை யென்ப. 249

மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி
பெருங்காஞ் சிய்யே பொருண்மொழிக் காஞ்சி
புலவ ரேத்தும் புத்தே ணாட்டொடு
முதுகாஞ் சிய்யொடு காடுவாழ்த் துளப்பட
மையறு சீர்த்தி வருமிரு மூன்றும்
பொய்தீர் காஞ்சிப் பொதுவியற் பால. 250

பலர்புகழ் புலவர் பன்னினர் தெரியும்
உலகியல் பொருண்முடி புணரக் கூறின்று. (மு—சி) 251

மலையோங்கிய மாநிலத்து
நிலையாமை நெறியுரைத்தன்று. (பெ—சி) 252

எரிந் திலங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருண்மொழிந் தன்று.(பொ—சி) 253

தலைவரும் பொருளைத் தக்காங் குணர்த்தி
நிலைநிலை யாமை நெறிப்பட வுரைத்தன்று. (மு—சி) 254

# பிற்சேர்க்கை

1. வெண்பாமாலையால் அறியப்படும் பண்டையப் போர் நிகழ்ச்சிகளை எழுதுக. *(வி. 64)*

*புறப்பொருள் வெண்பாமாலை புறத்தே அறனும் பொருளும் பற்றி நிகழும் ஒழுக்கமாகிய பொருளைப் புலப் படுத்துகின்றது. இந்நூலின் துணைகொண்டு பண்டைக் காலத்தில் வாழ்ந்த மன்னர் பகைவருடைய நிரையைக் கவர்தல் முதலிய போர் முறைகளைப் பற்றி நாம் நன்கு அறியலாம். வெட்சிப் பூவைச் சூடி பகைவருடைய பசுக் களைக் கவர்தல் வெட்சித் திணையின் பாற்படும் என்பதும், கரந்தைப் பூவைச் சூடி பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டல் கரந்தைத் திணையாகும் என்பதும், வஞ்சிப் பூவைச் சூடிப் பகைவருடைய நாட்டைக் கொள்ள நினைந்து போர் செய் தற்கு மேற்செல்லல் வஞ்சித்திணை என்பதும், அங்ஙனம் போர் செய்வதற்கு வந்த பகைவர்க்கு எதிராக நின்று போர் புரிய விரும்புவோர் காஞ்சிப் பூவினைச் சூடி விளங்குதல் காஞ்சித் திணை என்பதும், நொச்சிப் பூவினைச் சூடித் தம் மதிலைக் காத்தல் நொச்சித் திணையாகும் என்பதும், உழி ஞைப் பூவைச் சூடிப் பகைவருடைய மதிலை வளைத்துக் கொள்ளுதல் உழிஞைத் திணையாகும் என்பதும், தும்பைப் பூவைச் சூடிப் பகைவரோடு போர்செய்தல் தும்பையாகும் என்பதும், வாகைத் திணையில் வாகைப் பூவைச் சூடிப் பகை வரை வெற்றி பெறுவர் என்பதும், வெண்பாமாலையால் அறியப்படும் போர்ச் செய்திகளின் சுருக்கமாகும்.*

2. நொச்சிப் போரின் நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி வரைக. *(வி. 63)*

*நொச்சிப் பூவினைச் சூடி அரண் காத்து நிற்றல் நொச் சித் திணையாகும். அதுகால் நடைபெறும் போர்நிகழ்ச்சி கள் வருமாறு:—*

1. நொச்சி—எயில் காக்கும் வீரர் நொச்சிப் பூவினைச் சூடுதல்.

2. மறனுடைப்பாசி—சினச்சேனையையுடைய சினமன்னர் வீரசுவர்க்கமடைதல்.

3. ஊர்ச்செரு—காவற் காட்டோடு அகழி சிதையாத படி பூசல் செய்தல்.

4. செருவிடைவீழ்தல் — ஆழமுடைத்தான கிடங்கினோடு அரிய காவற்காட்டைக் காக்கும் பணியில் வேல்வீரர் இறந்துபட்டுப் புகழினைப் பெறுதல்.

5. குதிரைமறம்—பெரிய மதிலிடத்துக் குதிரை பாய்தல்.

6. எயிற்போர்—கூரிய கருவியாலே குறும்பினைக் காக்கும் மதிலிடத்துப் போர்வீரர் வீரமுடன் விளங்கிச் செய்யும் போர்.

7. எயிறனையழித்தல்—அழகிய மதில் அழிக்கப் பெறல்.

8. அழிபடைதாங்கல் — தம்படைத் தாழ்விற்குக் கோபித்து மாறுபாடுமிகக் கெட்டசேனை எயிலைக் காத்தது.

9. மகண்மறுத்துமொழிதல்—பகையையுடையவன் மகளை வேண்ட அழகிய குறும்பினுள்ளோன் மறுத்துக் கூறல்.

3. கொற்றவை நிலை, தழிஞ்சி—இவை எவ்வெப் படலத்துள் வந்துள்ளன? அங்கங்கு இவை உணர்த்துவன யாவை?

(வி. 63)

கொற்றவைநிலை வெட்சி, வஞ்சி ஆகிய இரு திணைகளிலும் வந்துள்ளன. வெற்றியான் மிக்க போர்க் கருவியை உடைய கொற்றவையின் கருணை வெட்சியிலும், நீண்ட தோளினை உடைய அரசன் வெற்றி பெறுவானாக எனச்

சொல்லி நல்ல பொருள்களால் நிரம்பிய பாத்திரத்தை வெற்றியாக வெடுத்து அரசனுடைய பகைவரை முதுகு புறங் கிாணும் கொற்றவையின் சிறப்பு வஞ்சியிலும் முறையே பேசப் பெறுகின்றன.

வெட்சியில், சிங்கத்தாற் சிறந்த அழகிய கொடியினையும் பசுங்கிளியினையும் பாயுங்கலையினையும் பேய்ப்படையினையும் உடைய துர்க்கைஅம்மன், தலைவன் பகைவரது ஆனிரை, குறும்பு முதலியவற்றைக் கொள்ள நினைக்குங்கால் பகைவர் மாறுபாடுகெடத் தான் முன்னே எழுந்தருளுவாள். வஞ்சியில், எள், நெற்பொரி, அவரை, துவரை, தருப்பணம், நிணம், குடர், உதிரம் கொண்ட பாத்திரத்தைக் கையிலே இருத்திய பூதகணங்களைக் கொண்ட துர்க்காதேவி அரசர்க்குப் பகைகெடத் தான் முன்னே எழுந்தருள்வாள்.

தழிஞ்சி—முன்னர்க் கண்டுகொள்க.

4. பாடாண்டிணையைப் புறப்பொருள் வெண்பாமாலை வழிநின்று பொதுப்பட விளக்கி அத்திணைத் துறைகளுட் சிறப்பாக ஆற்றுப் படைகளைப் பற்றிய குறிப்புக்கள் வரைக. (வி. 62)

ஒருவனுடைய புகழ், கொடைச்சிறப்பு, வலிமை, தண்ணளி முதலியவற்றை ஆராய்ந்து கூறுதல் பாடாண்டிணையாகும். இது வாயினிலை முதலிய நாற்பத்தேழு துறைகளை உடையது. இத்திணையில் ஆற்றுப்படை பற்றிக் காணப்பெறும் ஒரு சில துறைகள் வருமாறு:—

1. பாணாற்றுப்படை — மலைவழியிடத்துப் பாணனை வழியிலே செலுத்தியது. நல்லிசையினைப் பொருந்திய யாழினை உடைய பாணனே, எங்களைப் போன்று யானை வாழும் காட்டைக் கடந்து சென்று பொருந்தின், அழகு மருவின மென்மையினையுடையாள்

கணவன் வாவியிற் பூவாத பொற்றாமரைப் பூவைத் தலையிலே சூட்டும் என்பது உதாரணச் செய்யுளின் கருத்தாகும்.

2. கூத்தராற்றுப்படை—தலைவனைக் கண்டு மீண்ட இரப்பாளன் கூத்தாடுகின்றவரை வழியிலே செலுத்தியது. வஞ்சிக் கொம்பனைய விறலியர் தம் ஆட்டத்திற்குத் தலைவனே, மழையை வென்ற தியாகத்தினையுடையான் கைவழங்குஞ் செல்வத்தைப் பெற்று வருதற்கு அவசியம் போவாயாக என்று கூறுகிறது உதாரணச் செய்யுள்.

3. பொருநராற்றுப்படை—மிக்க நன்மையைச் செய்பவனிடத்துச் செல்வீராக எனக்கிணை கொட்டுமவனை வழிப்படுத்தியது. கிணையினையுடைய ஒப்பில்லாத பொருநனே, நீ போவாயாகில், உயர்ந்த பெரிய கையினையுடைய களிற்றின் நிரையை, வெற்றிச் சிறப்புடைய பெரிய கையினையும், வலிய தாளினையுமுடைய போரை விரும்புவோன் தருவன் என்று உதாரணச் செய்யுள் கூறுகின்றது.

4. விறலியாற்றுப்படை—வெற்றியையுடைய மன்னனது புகழைச் சொல்லும் பாணிச்சியை வழிப்படுத்தியது. வளை பொருந்திய கையினையும், சிவந்த வாயினையும் உடைய பாணிச்சி, சிறந்த சேனையினையுடையான்றன் புகழை வாழ்த்திப் போவாயாயின், அவையோர் புகழும் வண்ணம் அணிகலனைப் பூண்டு மலர்ந்தவல்லியைப் போன்று பொலிவுடன் விளங்குவாய் என்பது உதாரணச் செய்யுளின் கருத்தாகும்.

5. இயன்மொழிவாழ்த்து. வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉ—இவற்றை விளக்குக. (வி 63)

1. இயன்மொழிவாழ்த்து (பாடாண்): இத்தன்மையோர் இத்தன்மைய வழங்கினர், நீயும் அவ்வாறு

எமக்குத் தருவாயாக என்று சொல்லி வாழ்த்துதல். முல்லைக்குப் பொற்றேரும் மயிலுக்கு மணிப் படாமும் கொடுத்த இறைவர் போல் நீயும் கரவாமல் வழங்கல் கடன் என்று கூறி வாழ்த்தல் ஆகும்.

2. வாயுறை வாழ்த்து (பாடாண்): பின்னே பலிக்கும் எங்கள் வார்த்தை என்று சொல்லி தனது மேம் பட்ட சொல்லைச் சிறப்பித்தது. எமது வார்த்தையை எள்ளாது ஏற்றுக் கொண்டு, யானையால் நிறைந்த வெல்லுஞ் சேனை மன்னன் முறைமையே நிற்பின், அவன் அலையுங் கடல் வளைந்து பரந்த உலகத்தை அங்கையிடத்திலே கொள்வான்.

3. செவியறிவுறூஉ: நின்று நினைத்த பெரிய எண்ணத்தைத் தருமத்தை ஆராயும் செங்கோலினை உடையாற்கு உணர மொழிந்தது. மாலை மன்னனே அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம்முன்னோர், தந்தை, தாய் என்றிவர்க்கு முன்னோர் செய்த நெறியே நின்று ஞாலத்து வார்த்தையைக் கேட்க வேண்டும் எனக் கூறல்.

6. "கன்னின்று னெந்தை கணவன் களப்பட்டான்...... கிடந்தானென்னேறு" — இச்செய்யுள் எத்துறைக்கு மேற்கோள்? (வி. 63)

ஏருண்முல்லை (வாகை). விளக்கம் முன்னர்க் கண்டு கொள்க.

7. தலைமாராயம், தன்னைவேட்டல், முதுகாஞ்சி—இவற்றில் எவையேனும் இரண்டு துறைகளை விளக்குக. (வி. 62)

• தலைமாராயம் (காஞ்சி): பகைவர்களில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கிய வீரன் ஒருவனின் தலையைக் கொண்டு வந்தான் மனமுவப்ப வில்லினையுடைய மன்னன் செல்வத்தைக்கொடுத்துச் சிறப்பித்தது.

தன்னைவேட்டல்—முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

முதுகாஞ்சி (பொதுவியல்): இளமைப் பருவம் என்றும் நிலைத்து நிற்காது முதுமையுடனே தாழ்ந்து உண்மையை அறியாதே அடங்கிச் செல்வத்தினது ஆச்சரியம் ஒழிது லில்லாத பூமியிடத்து ஒன்றும் விரும்பாது விளங்குதலே ஒருவனுக்கு உறுதி பயக்கும் என்று செல்வத்தின் நிலையாமையை எடுத்துக் கூறல்.

8. கந்தழி, தழிஞ்சி—இத்துறைகள் எவ்வெத்திணையில் வந்துள்ளன? ஒன்றனை விளக்குக. (வி. 64)

விடை முன்னர்த் தரப்பட்டுள்ளது.

9. 1. 'வணங்காதார் மதிற்குமரியொடு
மணங்கூடிய மலிபுரைத்தன்று;'

2. 'புரவலன் மகிழ்தூங்க
விரவலன் கடைக்கூடின்று'—
இவற்றிற்குத் திணையும் துறையும் எழுதுக. (வி. 64)

*1.* உழிஞைத்திணை; மண்ணுமங்கலம்.

பணியாதாரரசுகிய கன்னியுடன் வதுவை பொருத்திய மிகுதியைச் சொல்லியது மண்ணுமங்கலமாகும். அணிகலத்தையுடைய அரசர் முடிகள், எம்முடைய கண்மலர அரசுகிய கன்னியினை மணந்த மணநாளிலே யாம் மகிழும்படி மதுவலரும் கோவை மாலையினையும் அணிகலத்தையுமுடைய வேந்தன் தாள்நிழற்கீழே தங்கின என்பது உதாரணச் செய்யுள் கருத்தாகும்.

2. பாடாண்திணை; பரிசினிலை.

புரவலன் இன்பத்திலே திளைத்திருக்க இரவலன் போவதற்கு விரும்புதல் பரிசினிலையாகும். சிறந்த குதிரை பூண்ட பொற்றேரைக் கொடுத்த பின்னும் விடை கொடாதிருப்பவும், பகைவர் நாடு போல என்னுடைய சுற்றம் துளங்காநின்றது; அளிக்கத்தக்கது, என்று இரவலன் கூறி விடை பெறுவான்.

10. 'ஒன்றி லிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே—சென்றுலா
மாழ்கடல்சூழ் வையகத்து ளைந்துவென்றாறகற்றி
யேழ்கடிந் தின்புற் றிரு'—
இதன் பொருளை விளக்குக. (வி. 64)

ஆன்மாவில் (ஒன்றில்) புண்ணிய பாவம் ஆகிய இரண்டை யும் ஆராய்ந்து, காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றினை யும் அடக்கி, சாம தான பேத தண்டம் என்னும் நான்கினால், குவலயத்து, சத்தப்பரிச ரூப ரத கந்தம் என்னும் ஐந்தினையும் வென்று, படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்னும் ஆறினையும் பெருக்கி மன்னன் நெடுங்காலம் வாழ இப்பாடல் கூறுகிறது. இது ஓம்படை என்னும் துறைக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் உதாரணச் செய்யுளாகும். இது பாடாண் திணையைச் சாரும்.

''ஞானத்தாலே காரியா காரியங்களைத் தெரிந்து நட்புப் பகை உதாசீனமென்னும் மூன்றினையும் உட்கொண்டு யானை தேர் குதிரை காலாளாலே பூசலை வென்று போர்க்களத்தைக் கைக்கொண்ட வேன்மன்னனே, பெயர்ந்து கரையைப் பொரும் ஆழ்ந்த கடல் சூழ்ந்த குவலயத்து இந்திரியங்கள் ஐந்தையும் வென்று; நட்புப் பகை செலவு நல்லிருக்கை, கூடி னரைப் பிரித்தல், கூட்டல் என்ற ஆறினையும் பெருக்கி; வேட்டங்கடுஞ்சொல் தண்டம் சூது பொருளீட்டங்கள் காம மிவை யேழினையும் கடிந்து இனிமையுற்று நெடுங்காலமிருப் பாயாக'' என்பதே இப்பாடலின் முழுப் பொருளாகும்.

11. 1. ''நேராதார் வளநாட்டைக்
கூரெரி கொளீஇயன்று''

2. ''மறவேந்தனிற் சிறப்பெய்திய
விறல்வேலோர் நிலையுரைத்தன்று''
இவற்றிற்குத் துறையும் திணையும் கூறுக. (வி. 63)

*1.* உழபுலவஞ்சி; வஞ்சித்திணை.

பொருந்தாதாருடைய நல்ல நாட்டைக் கொளுத்தியது உழபுலவஞ்சியாகும். குயில் பாட, சுரும்பு ஒலிக்கும் பகைவர் நாட்டு ஊர்கள், வேலையொத்த விழியைப் புதைத்த குலமகளிர் மன்றென்று பாராதே செல்ல, பரந்தோடும் நெருப்பினுள்ளே அவதரித்தன.

2. மாராயவஞ்சி; வஞ்சித்திணை.

மன்னனாலே சிறப்புப் பெற்ற வெற்றிமிக்க வேலினையுடையோர் நிலைமையைச் சொல்லுவது மாராயவஞ்சியாகும். புகழினையும் வீரக்கழலினையும் உடையான் பகைவர்தம் போரைப் பார்த்துக் கண்சிவப்பப் போர்வீரர் பகைவர் எறிந்த இலைத்தொழில் மிக்க வேலை ஏற்றுக்கொண்ட மார்புகள் அழகிய முத்தாரங்களை அணிந்தன.

12. பாடாண் படலத்தால் அறியப்படும் பண்டைய மரபுகளில் சிலவற்றை எழுதுக. (வி. 61)

ஒருவனுடைய புகழ் வலிமை கொடை முதலியவற்றை ஆராய்ந்து சொல்லுதல் பாடாண்டிணையாகும். இது வாயினிலை முதலிய நாற்பத்தேழு துறைகளையுடையது. பரிசிலர் அரசனுடைய நெடிய வாயிலைக்கிட்டிய எமது வரவினைச் சொல்லென வாயில்காவலனுக்குச் சொல்லுதல் (வாயினிலை), வேந்தன் வணங்கும் மும்மூர்த்திகளுள் ஒருவனை உயர்த்திச் சொல்லுதல் (கடவுள் வாழ்த்து), மாயவன் திருவுருவோடு உவமித்துக் காயாம்பூவைப் புகழ்தல் (பூவைநிலை) அரசனிடத்துக் கருதியபேறு இதுவெனக்கூறல் (பரிசிற்றுறை), பகைவர் சேனை அழியும்படிச் செல்லும் வேந்தனது துயிலை மிகுத்துச் சொல்லுதல் (கண்படை நிலை), அவனது துயிலை நீக்குதல் (துயிலெடை நிலை), அரசன் முன்னே மங்கலத்தைச் சொன்ன மிகுதியைச் சொல்லுதல் (மங்கலநிலை), அரசனது விளக்கினது நிலையைப் பரப்பிச் சொல்லுதல் (விளக்குநிலை), அரசன் தேவர்களும் மனமகிழ யாகம் பண்ணியதைப் போற்றிக் கூறுதல் (வேள்விநிலை), மழையைத் தருமெனச் சொல்லி உயர்ந்த வெள்ளியினது நிலைமையைச் சொல்லுதல் (வெள்ளி

நிலை) முதலியன பாடாண் படலத்தால் அறியலாகும் ஒருசில மரபுகளாகும்.

13. விரிச்சி, வேய், பிள்ளைவழக்கு, மண்ணுமங்கலம்— இவற்றில் மூன்றனை விளக்குக. (வி. 61)

விரிச்சி (வெட்சி)—இருண்ட மாலையிடத்து நற்சொற் கேட்டது. 'மாலையிடத்து முற்றத்திலே நங்கூட்டம் கை குவித்து நிற்பக் கட்சாடியிருக்கும் ஏணியிற் குடத்துக் கள்ளை நீ எடுத்துக்கொண்டு வாவென்றாள்; ஆதலால், வில்லையுடையவனே, நமக்கு வெற்றியைத் தரும்' என்று உதாரணச் செய்யுள் கூறுகின்றது.

வேய் (வெட்சி)—பகைவர்தம் முனையிடத்து ஒலிக்கும் மணியினையுடைய நிரையிடத்து ஒற்றினைத் தெரிந்த வகையினைக் கூறுதல். பசுநின்ற இடம், பசுவினுடைய அளவு, பசுவினைக் காத்து நின்ற விற்படையினளவு முதலியவற்றைத் தெரிந்து ஒற்றர்கள் வருவர்.

பிள்ளைவழக்கு (வெட்சி)—தப்பாது நிமித்தஞ் சொன்னார்க்கு வஞ்சியாது ஒரு குடம் பால் தரும் மிக்க மடியினையுடைய பசுவினை நான்கு இனங்கள்தோறும் கொடுத்துச் சிறப்பித்தல் பிள்ளைவழக்காகும்.

மண்ணுமங்கலம் (உழிஞை)—பணியாதாரரணாகிய கன்னியுடன் வதுவைபொருந்திய மிகுதியைக் கூறுதல். இது பாடாண்திணையிலும் வரும். அரசன் பொருந்தி மஞ்சனம் பண்ணும் மங்கலத்தினது மிகுதியைச் சொல்லுதல் பாடாண்படலத்தில் வரும் மண்ணுமங்கலமாகும்.

14. பிள்ளையாட்டு, தொடாக்காஞ்சி, குற்றுழிஞை, தன்னை வேட்டல் — இவற்றில் இரண்டற்கு இலக்கணம் எழுதுக. (வி. 64)

பிள்ளையாட்டு (கரந்தை)—பகைவர்குடராகிய மாலையைச் சூட்டிக் கையிலே வேலைத் திருப்பிப் பிரியப்பட்டு ஆடியது. அதுகால் துடி முழங்கும்.

தொடாக்காஞ்சி—(காஞ்சி) மலர்மாலையால் நிறைந்த பெரிய மேம் பாட்டினையுடையவன் புண்ணைத் தீண்டுதற்குப் பயப்பட்டு நடுங்கிப் பேய் பெயர்ந்தது.

குற்றுழிஞை—(உழிஞை)—அழிவில்லாத பகைவர் அரணை வீரமுரசினையுடையான் தான் ஒருவனாக நின்று வென்று கைப்பற்றுதல்.

தன்னைவேட்டல் (தும்பை)—தனது மன்னன் விசும்பைச் சேர்ந்தானாக, வாளே சுருவமாக அபிமானம் ஓமநெய் யாக, மறமே சமிதையாக, மலர்ந்த மாலையினையும் வீரக் கழலினையும் உடைய வீரனொருவன் வாட்போராகிய ஒள்ளிய தீயுள் உயிரை ஆகுதி பண்ணினான்.

15. வாளுட்கோள், குடைநாட்கோள்—இவை எவ்வெப் படலங்களில் எவ்வெப்பெயர்களால் கூறப்படுகின் றன? (வி. 63.)

வாளுட்கோள் (உழிஞை)–பகைவர்தம் அரணினைக் கொள்ள நினைந்து வெற்றி கொள்ளும் வாளைப் புறவீடு விட்ட தால், பேய்கள் கைகோத்து அழகிய மகளிர் நடன மண்டபத்தே பலகூத்தினையும் மாறி ஆடிமகிழும்.

16. வாகைப்படலத்துள் காணப்படும் வெற்றிச் சிறப்பினைக் (வீரத்தினை) கூறும் ஒருசில துறைகளைப்பற்றிக் கூறுக.

வாகை—தலைவன் வாகைப்பூவைப் புனைந்து பரந்த சேனையை யுடைய பகைவேந்தனைக் கொன்று ஆரவாரித்தது.

மறக்களவழி—முழவுபோலத் திரண்ட திண்ணிய தோளினை உடையானை உழும் வேளாளனாக உயர்த்திக் கூறியது.

க்களவேள்வி—பேய் வயிறுார உண்ணும்படிப் பரந்த வலியினை யுடையான் களவேள்வி வேட்டது.

அரசமுல்லை—பெரும்பகையை வருத்தும் ஒளிபொருந்திய நெடிய வேலினையுடைய பெரிய புவியைக் காக்கும் அரசனது தன்மையைக் கூறியது.

## எடுத்தாண்ட நூல்கள்

1. அகப்பொருள் விளக்கம்

—வைத்தியலிங்கம் பிள்ளை உரை

2. அகப்பொருள் விளக்கம்

—பாண்டித்துரைத் தேவர் பதிப்பு

3. அகப்பொருள் விளக்கம்

—கோவிந்தராஜ முதலியார் பதிப்பு

4. தண்டியலங்காரம்

—குமாரசுவாமிப் பிள்ளைப் பதிப்பு

5. தண்டியலங்காரம்

—சுப்பிரமணிய தேசிகர் பதிப்பு

6. புறப்பொருள் வெண்பாமாலை

—சாமிநாதையர் பதிப்பு

## ஆசிரியரின் பிற நூல்கள்

அமெரிக்க நூலகங்கள்
இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும்
உயர்நிலைப்பள்ளி நூலகம்
உரிமைப் போர்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் (அச்சில்)
சைவ நன்னெறி
தமிழ்நாடும் மொழியும்
தமிழ்நாடு—வரலாறும் பண்பாடும் (அச்சில்)
நூலக அமைப்பியல்
நூலக ஆட்சி
நூல்நிலையம்
மலைவாழ் மக்கள்
மறுமலர்ச்சிக் கவிஞர்கள்
முதற் பொது நூலக இயக்கம்
யாப்பிலக்கணச் சுருக்கம் (வினு விடை)
விஞ்ஞானத்தின் கதை
**A Bibliography on Thirukkural**
**An Introduction to Tamil Literature**